இரா. மீனாட்சி

கொடிவிளக்கு

கொடிவிளக்கு


இரா. மீனாட்சி

கபிலன் பதிப்பகம்


கொடி விளக்கு	-	இரா. மீனாட்சி
முதற்பதிப்பு	-	டிசம்பர் 2009
உரிமை	-	ஆசிரியர்க்கு©
விலை	-	ரூ. 125/-
பக்கங்கள்	-	192
அச்சிட்டோர்	-	ஆல் இந்தியா பிரஸ், புதுச்சேரி.

KODI VILAKKU	_	R. MEENAKSHI©
First Edition	_	December 2009
Price	_	Rs.125/-
Pages	_	192
Printed by	_	All India Press, Puducherry.

Published by:-
KAPILAN PATHIPPAGAM
321, 3rd Main Road
Mahaveer Nagar
PUDUCHERRY - 605 008.
e.mail:arunankapilan@gmail.com



‘விளக்கிலே திரி
நன்கு சமைந்தது!’



பிறைநிலாச் சூடிடும் வீடு

கவிதை என்பது உள்ஆற்றலின் ஓர் உன்னத வெளிப்பாடு. ஏனைய கவின்கலைகளை உள்ளடக்கிக் கொண்டு, எக்காலத்திலிருக்கும் வெளியிலும் நிறைந்திருக்கும் ஓர் ஒளித்திரள். மின்னாற்றலை ஏற்றிருக்கும் அருவுருவமானதோர் ஒலியலை.

இன்று எழுதப்படும் ஒரு கவிதையின் விதை பலகோடி ஆண்டுகள் முந்தைய பெரணிச் செடியின் ஒரு செல்புள்ளியாகக் கூட இருக்கலாம். இதோ, இந்த விநாடி அது தனது வேர்முகம் காட்டியிருக்கலாம். நாளை எனும் மறுகாலத்திலிருந்தும் மரபணுக் கூறாக வந்து இறங்கலாம். இப்படி எல்லையற்ற இந்த விண்ணையும் மண்ணையும் இணைக்கிற அல்லது கடக்கிற நிரந்தர உடுக்கள் ஒருமொழிச் சத்தத்தினுள் உணர்வலைகளாக இறங்கி, தம்மை ஓர் ஒழுங்கமைதிக்குள் இருத்தி வரிவடிவமாக வந்தமர்கின்றன.

நான்
கவிதை
நீ
எழுது

என்று தேர்ந்த மனிதரைக் கருவியாகக் கொண்டு அவர்களைக் கவிஞர்களாக்கி விடுகிற கவிதையின் இயல்பினை நான் நன்றாக உணர்ந்திருக்கிறேன்.

சென்ற காலத்தின் அணுத்துகள் இன்றைய காலத்தின் மேகப்படலத்தை அணிந்திருந்தாலும் அது வருங்கால உருமாற்றத்தை எதிர்நோக்கியே பயணப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனுள் வீற்றிருக்கும் மையப்பொருள் நிரந்தரமானது. அழிவற்றது. உயிரிகளின் இசைஇயக்கம். சிற்றுயிர்களிடமும் பேருயிர்களிடமும் புதுப்புதுப் பொலிவுகளைக் கிளர்ந்தெழச் செய்து தன்னை விதைத்துக் கொண்டே செல்கிறது. மனிதர்கள் நாம், நமது மொழியில் கவிதைகளாக வரித்துக் கொள்கிறோம்.

கவிதைகளை நாம் எழுதுகிறோம் என்பதாக ஒரு வெளித்தோற்றம் கிடைத்தாலும், கவிதை நம்மைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு நம் கரம் பற்றி எழுத வைக்கிறது. இக்கவிதாசக்தி ஒரு நற்றாய். நல்லாசிரியர். உயிர்த்தோழன். உற்றதுணை. அற்புத மடிக்குழந்தை என்பதாக ஒவ்வொரு முறையும் நாம் உணருகிறோம்.

எனக்கு நினைவு தெரிந்த நாளாய்ப் பேசிக்கொண்டிருக்கிறேன். பிறகு எழுதிக் கொண்டிருக்கிறேன். தமிழ்மொழிப் பதிவுகள் கொண்ட இலக்கிய உலகத்தில் எனது முதல் கவிதை நூல் 'நெருஞ்சி' 1970-இல் வெளியாயிற்று. ஏறத்தாழ 45ஆண்டுகளாகத் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறேன். எழுத்து, கண்ணதாசன், கணையாழி, தீபம், நாணல், அன்னம், கவி, ஓம்சக்தி, அமுதசுரபி, தொடரும் போன்ற தமிழகத்தின் சிறந்த இலக்கிய இதழ்களிலும் மற்றும் சில சிறு பத்திரிகைகளிலும் சிறப்பு மலர்களிலும் எனது கவிதைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. *ஆரோவில் கிராமச் செய்தி மடல்* எனக்கு வாய்த்துள்ள மற்றொரு எளிய எழுத்து வாஹினி.

நெருஞ்சியைத் தொடர்ந்து சுடுபூக்கள், தீபாவளிப்பகல், மறுபயணம், மீனாட்சி கவிதைகள், வாசனைப்புல், உதயநகரிலிருந்து எனும் ஏனைய கவிதைத் தொகுப்புகள் வெளியிடப்பட்டன.

இக்கவிதைகள் வாயிலாக உடல் சார்ந்த துன்பங்கள் இன்பங்கள், மனம் சார்ந்த வீழ்ச்சிகள் எழுச்சிகள், சமூகம் சார்ந்த ஏற்புகள் தகர்ப்புகள் சொல்லப்பட்டுள்ளன. இவற்றிற்கும் அப்பால் நான் எனும் என் உள்முக தரிசனத்தில் தணல் தகிக்காத நெருப்பினுள் இலையாகவும் அக்கினிக் குழம்பில் அலர்ந்தெழும் மலராகவும் சந்தன ஓடையின் இருகரை ஓரத்தில் செழிக்கும் வைரப் பொன் நாணலாகவும் வளர்ந்து வருகிறேன்.

எல்லாக் கணங்களும் தரும் அனுபவங்களை அப்படியப்படியே தாளொற்றித் தரும் பக்குவம் எம் விரல்களுக்கு இன்னமும் வந்து விடவில்லை. இயல்பாக வந்தமையும் சொல்லடுக்குகளை இயன்றவரை நம் தமிழில் இயற்றியிருக்கிறேன். நேற்று-இன்று-நாளை தளங்களிலிருந்து பயணப்பட்டிருக்கும் சந்தமொழிகள் இந்த ஆண்டில் இப்படியாகக் 'கொடிவிளக்கு' தொகுப்பில் அச்சிடப்பட்டுள்ளன.

ஆக, வாழ்ந்து வரும் வாழ்க்கையில் நேற்று என்பது யாவருக்குமே முக்கியமானது. இன்று என்பது சீராக நடந்தேறிக் கொண்டிருக்கிறது எனில், நேற்று எனும் அனுபவச் சாலைகளும் அவற்றுள் வேர்பிடித்து நின்றிருந்த கைகாட்டி மரங்களும் மறக்க இயலாதவை அல்லவா? அவரவர் சரித்திரம் நேற்றிலிருந்தே செதுக்கப்படுகிறது. வருங்காலம் எனும் நாளைய நாளை நோக்கி ஒவ்வொரு அடியையும் முன்னெடுத்து வைக்கும்போது இன்றைய நாள் நம்பிக்கை நீர் ஊற்றுகிறது. தமக்கு ஏற்படும் நன்மை தீமைகளை அனுபவித்தபின் அவற்றைச் சமமாகப் பாவித்தபடி பயணிக்கும் இந்த மனித யாத்திரையில் உடன்வரும் சக பயணிகள் நிறையப் பேர் கதைசொல்லிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்குள்ளும் கவிதை கதைகளாகப் பொங்கலிடுகிறது. அடிப்படையில் நானொரு சமூகப் பணித்துறைப் பேராசிரியர். மனவளக் கலை வழிகாட்டி. எனவே, நிறைய மனங்களின் ஓசைகள் என்னை வந்து சேர்கின்றன.

இன்றிரவு நான் உறங்கவே இல்லை. கூடலூர்ப் பாண்டியின் பறையதிர்வும் நாகர்கோவில் செல்வியின் கரக ஒயிலும் கலைமாமணி சங்கரபாண்டியனாரின் 86 வயதுக் காவடியாட்டமும் என்னோடு ஐக்கியமாகிவிட்டன. இந்த மரபுச் சந்தங்கள் எனது மானஸ மரத்தில் கிளிகளாகப் பேசிக்கொண்டேயிருக்கின்றன. முன்னொரு நாளில், இப்படித் தடம் பதித்த மதுரை மாநகரச் சத்தங்களும் வாசனைகளும் வண்ணங்களும் '*நேற்றுப் போலிருக்கிறது*' என்ற பகுதியில் இந்தக் கொடிவிளக்கில் ஏற்றப்பட்டுள்ளன. மதுரை மகளாகவும் அறியப்படும் என் ஒருமுக வாழ்க்கையில் பன்முக எழினிகள் என்னைச் சுற்றிலும் எத்தனையோ திரைகளாக ஏற்றி இறக்கப்பட்டுள்ளன. அத்திரைகள் காட்டும் சித்திர முகங்களாகச் சில பெண் குழந்தைகள், தோழிகள், என்னைப் பாதித்த அன்னையர் பலருள் ஒரு சிலர், '*அவள், அவள்கள், அவர்கள்*' எனும் பகுதிக்குள் கொடி விளக்கேந்தி வந்து செல்கிறார்கள். இவர்களை நான் மட்டுமின்றி மற்றும் பலரும் அறிந்திருக்கக் கூடும். அவர்களுடன் எனக்குண்டான நெருக்கம் இத்தனை காலமாக, பாறைக்கடியில் உறைந்திருந்த முளைவிதைகளைப் போல இருந்திருக்கின்றது. 'இப்போது எழுதிக்

கொள்' என்று விளைந்து வந்திருக்கிறது. இவர்களில்லாமல் நான் எங்கே வளர்ந்திருக்கப் போகிறேன்? நல்லகாலம் இப்போதாவது என்னுடைய வெளிச்ச எல்லைக்குள் வந்து புதிதாக்கிக் கொண்டு புத்தகமாகி இருக்கிறார்கள். நன்றி கூறுகிறேன்.

இதுவரை எழுதப்பட்டுள்ள சிலநூறு கவிதைகளுள் தொடர்ந்து பளிச்சிடுவது அன்பான மனித உறவுகளும் இயற்கை சார்ந்த அனுபவங்களுமே. இயற்கையோடு இணைந்த வாழ்வில் தன்னை மேலும் கண்டறியும் தேடல்களே இன்றும் தொடர்கின்றன. இயற்கையைப் பாராட்டிப் போற்றும் அன்புள்ள மக்களுடன் நெடிது வாழும் சூழல் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக எனக்கு வாய்த்துள்ளது. இது ஒரு பெரும்பேறு. நகரியப் பரபரப்புகளை விட்டு விலகி, பனைமரங்களும் நொச்சிப் புதர்களும், வேனில் கொன்றைப் பூச்சரங்களும் வேம்பூத் தாரைகளும் எப்போதும் புங்க மரநிழல் பரப்பும் செம்மண் வரப்புகளும், மழைநாள் புல்லும் பச்சிலை மூலிகைகளும், கூழாங்கல் பாதைகளும் அணைத்திருக்கும் கனவு பூமியில் பணிக்களம் அமைந்து விட்டது எங்களுக்குக் கிடைத்த தேவவரம். காக்கைக் குருவிகளோடும், அணில், கீரிப்பிள்ளைகளோடும் வாழ்ந்து வருகிறோம் என்பதால் பிரபஞ்ச உணர்வு எங்கள் குழந்தைகளிடமும் கூடுதலாக உள்ளது. நந்தவனத்தைச் சுற்றிக் காலைச் சூரியனுடன் உலாவச் சென்று விட்டுத் திரும்பும்போது செங்காவி ஓடு வேய்ந்த நம் வீட்டுக் கூரையைத் தொட்டிழுக்கும் பிறைநிலா, வீட்டையே தவசியாகக் காட்டும்போது அந்த ஒப்பற்ற ஓவியத்தை எப்படி எழுதாமல் இருக்க முடியும்?

எனது புறப்பயணங்களும் என்னை நெடுந்தொலைவுக்கு இட்டுச் செல்கின்றன மணிமேகலா தெய்வம் போல, கப்பல்களும், விமானங்களும் வேக ரயில்களும்.

எல்லைகள் கடந்து பலநாடுகளுக்கு என்னை அழைத்துப் போகும் அப்பயணங்களில் மனித, இன, மொழி தெரியாத ஊர்களிலும் பறவைகள், பசுக்கள், வண்ணத்துப்பூச்சிகள், ஓவிய

மீன்கள், பச்சைப் புல்வெளிகள், வானவில் நிறங்கள் நம்முடன் பேசுகின்றன. அம்மொழிகள் தரும் உணர்வலைகளுக்கு எல்லை ஏது?

அப்படி ஒரு பயணத்தின்போது ஃபிரான்ஸ் தேசத்தில் என்னுடன் பேசிய வெண்கலக் கொடிவிளக்கு நேர்ந்து கொண்ட விண்ணப்பத்தை இந்நூலில் பதிவு செய்திருக்கிறேன். அதன் பெயராலேயே இக்கவிதைத் தொகுப்பு அறியப்படுகிறது என்பதைப் பொளிந்து கொள்கிறது எனது எழுதுகோல்.

எந்த மனிதருள்ளும் எந்தக் காலத்திலும் எந்த வயதிலும் உயிர்களிடையே அன்பும் காதலும் நட்பும் நிரம்பித் ததும்பி இருக்கின்றன. அவை என்னுள் கலந்து சிலிர்ப்புடன் மொழியானவை *'எந்தையும் தாயும்'* பகுதியில் தொகுக்கப்பட்டுள்ளன.

பொதுவாக, எது கவிதை என்பதும், இவற்றுள் எது எனக்கு மட்டுமே சொந்தமான கவிதை என்பதும் விளங்கிக் கொள்ள இயலாது போகிறது. எப்போதும் அடுத்த உயரத்திற்குக் கவிதையை உயர்த்தி எடுத்துச் செல்லும் உந்துதலே 'கவிதையின் நான்காம் எழுத்து' வரிசைக்குள் வெளிப்பட்டுள்ளது. இந்த அனுபவம் ஒரு வலியும் சுகமும் இணைந்த கலவை.

வடித்தெடுக்கும் கவிதைச் சிலைகளினூடே இந்த 'கொடிவிளக்கு' தொகுப்பு ஒரு சுயம்பு. மிகுந்த நேயத்துடன் வாசிப்பு அனுபவத்திற்கு இந்நூலை அச்சிட்டு ஆக்கியோரின் சார்பிலும் உங்களை வரவேற்கிறேன்.

தோழமையுடன்
இரா.மீனாட்சி

மாத்ரி மந்திர் நர்சரித் தோட்டம்
ஆரோவில் - 605 101
விழுப்புரம் மாவட்டம்
தமிழ்நாடு

●

ஒளிவாயிலில்...

பாரதி என்னும் பெருஞ்சக்தியின் பிறப்பால் தமிழ் தன்னை அமரத்துவம் வாய்ந்ததாகத் தகவமைத்துக் கொண்டது. எழுஞ்சுடர் பரிதியின் ஒளிபோலக் கிளரும் மந்திரமொழியாயிற்று தமிழ்.

தமிழின் இளங்குழவி புதுக்கவிதையும் பாரதியுடன் பிறந்ததுதான். புதுக்கவிதை எப்போதும் தன்னைத் தானே எழுதிக் கொள்கிறது. எல்லாமொழிகளை விடவும் மௌனமான வலிமை மிகுந்த மொழி கவிதை.

இந்நூலில் சுடர்விடும் கொடிவிளக்கின் ஜ்வால்யம் காலப் பிழம்புகளில் கிளர்ந்திருக்கிறது. தழுவியும் நழுவியும் கொஞ்சியும் கெஞ்சியும் கதைத்தும் உதைத்தும் உறுமியும் பொருமியும் சீறியும் சினந்தும் செல்லும் இக்கவியாறு காவிரியாயும் வைகையாயும் தன்னை வடிவமைத்துக் கொள்கிறது.

காரைக்கால் அம்மையார், காக்கைப் பாடினியார், ஔவையார், ஆண்டாள்நாச்சியார் மரபில் நின்று தமிழ்க் கவிதையின் சீரிளமை குன்றாது தம்கவி எழுத எழுதுகோல் ஏந்தியவர் கவிஞர் இரா.மீனாட்சி.

எழுத்து காலத்தில் இருந்து தொடர்ந்து எழுதி எழுதி தன்னையும் ஓர் நல்ல தமிழ் எழுத்தாகவே பதிந்து கொள்ளும் கவிஞர் இரா.மீனாட்சியிடம் கவிதை 'நான் கவிதை நீ எழுது' என்று தோழமை கொள்ளுவது அவர் கவித்தவத்தின் பெருமைக்குச் சான்று.

'இன்னும் எழுத எவ்வளவோ இருக்கின்றன' என எப்போதும் பிறக்கும் கவிவாக்கிற்கிணங்க முன்னம் தந்த *உதய நகரிலிருந்து* நூலைத் தொடர்ந்து இந்தக் கொடிவிளக்கும் கபிலன் பதிப்பகத்தின் வழியாக வெளிவருகிறது. இத்தகு பெரும்பேற்றைத் தந்தருளிய கவிஞர் இரா.மீனாட்சி அவர்களின் அன்புக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அல்லன தள்ளி, நல்லன ஏற்று பொன்னே போல் போற்றும் மரபுடைய தமிழ் வாசகச் சமூகம் இந்நூலைத் தமக்கானதாகத் தயங்காது ஏற்கும் என்பதால் அவர்களுக்கும் நன்றி உரித்தாகுக.

வணக்கங்களுடன்

பதிப்பகத்தார்.

சுடர்முகம்



தந்தையும் தாயும்

நீ பேசுவதைக் கேட்டவுடன்
நிறுத்தி விட்டன தங்கள் இசையை
இந்த மூங்கிலுக்குள்
துளைக்கும் வண்டுகள்
நத்தைக் கூட்டின் முதுகுமேல்
தொத்தும்
தாவும் குட்டித் தவளைகளும்

உன் இசையை
நீ
பேசிக் கொண்டேயிரு
நான்
உன்
உதட்டசைவில்
குணமெனும்
குன்றேறுகிறேன்.

சிவப்புச் சின்ன எறும்பு கடிக்கிறது
திரும்ப எடுத்து விடுகிறேன்.
விரலைக் கடிக்கிறது
மறுபடி எடுத்து விடுகிறேன்.
எரிச்சல் வரவேயில்லை எனக்கு
சிறுகோபம் கொண்ட தோழனை
நினைவூட்டுகிறது என்பதாலோ?

பூவின் இதழில்
ஓடும் இழைவரிகள்
உன் விரல் ரேகைகளா?
சூரியன் முத்தம்
தந்தையின் வாத்ஸல்யம்

மேட்டிலிருந்து காட்டாறு
வீழும் வெள்ளி நீரருவி
துள்ளிச் செல்லும் மீன்போல
ஒரு யுகாலிப்டஸ் தைல இலை
உன் உதட்டுச் சுழிப்பு.

கொன்றை மரம் பிரம்மாண்டம்
கொடிபோல் கிளை விரித்து
புறமெங்கும்
அடிமரம் ஆனைமாதிரி
அகலம்.
எதிரே
இந்த வீட்டின் மேல்கூரை
உயரமாக இல்லை.
அலங்காரம் இல்லை.
வானம் பார்த்தபடி நிற்கிறது.
எளிமை,
ஒரு
பசுங்கிளை மலர்களுடன்
தாழ்கிறது
செங்கூரையை நெஞ்சோடு
அணைத்துக் கொள்கிறது
காதல் நோன்பு.

என் கைக்குள் ஒரு துளிநீர்
உன் கண்முறுவல் அது
பத்திரப்படுத்துகிறேன்
என் நெஞ்சு ஈரமாகட்டும்.

❀

மாமரக் கிளை
காகங்களைப் போல்
வா
நாம் இப்படியே
அருகருகே அமர்ந்து கொள்வோம்
கூடுகட்டுவோம்
முதலில் முள்ளால்
நமது காதல் ராஜ்ஜியத்தை
துவங்கி வைப்போம்
இறகுகளை உதிர்த்தாவது.

❀

இந்த முதல் ஸ்பரிசம்
எடுத்திடும் முடிவில்
அனைத்து அணைப்புகளிலும்
நான் கையெழுத்திடச் சம்மதிக்கிறேன்
விரல்களை
மருதோன்றி போலவே
இறுகத் தழுவிக் கொள்
நம்புகிறேன்.

❀

மக்கள்
மஞ்சள்
மண்மகுடம்
மத்தளம்
'ம'வில் தொடங்கும்
தமிழ்ச் சொற்களை
எழுதி எழுதி உச்சரித்துப்
பழகுகிறேன்
பனையோலைகளில்
உன் பெயரின்
முதலெழுத்திலேயே
என் உயிரை
நிறுத்தி விட்டேன்.
ஊரார்முன்
சின்ன வயதிலேயே
என்னை
அணிந்தவளே
என் எழுத்தாணியே.

❁

இருட்டில்
நான்
இன்னமும்
உன் கைக்குட்டைப் பூக்களைத்
தொட்டுத் தடவி
பூங்காவின் இருக்கைகள்
நம்மைப் பார்த்ததை எண்ணி
நாணிக் கிடக்கிறேன்
நூல் பூக்களும்
மணக்குமா என்ன?

❁

மாடி ஏறி வந்தால்தான்
உன் தரிசனம்
ஒன்பது படிகளிலும்
என் முகங்கள்
நீ வரைந்த கவனங்களாய்
மாக்கோல இழைகள்.

வாரி அணைத்திட
என் கைகள் நீளும்போது
எப்படியானது மூன்றடி என
நான் சொல்ல
ஆறடி ஆகிருதி
எப்படியொரு
ஓரடியாய்ச் சுருண்டதென
நீ வியந்தாய்
நாம் பலவீனமானவர்கள்தாம்-
கணக்கில் மட்டும்-

எத்தனை புத்தாண்டு
பிறந்தாலும்
காதல் பிறந்த
ஆண்டுதானே
நமக்கு உயர்வாயிருக்கிறது.
அன்றுதானே
உன்
முன்னுச்சிக் கற்றைக் குழல்
என்
செவிக்குள்
புத்தாண்டை
இசைத்துச் சென்றது.

நேற்றைக்கு முதல் நாள்
சாரல் மழை
நேற்று மல்லிகை
அரும்பெடுத்தது
இன்று
நீ வந்திருக்கலாம்.

❁

பௌர்ணமி முழுநிலவு
என்னுடனேயே தேய்ந்து
இல்லாமல் போனது
இன்று அமாவாசை

❁

தாளடிப் பயிர் நெல் சிரிக்கும்
வாய்க்கால் வரப்புகளில்
பழைய பாடல்களைப்
பாடிச் சென்றபோது
கூடவே வந்ததாக
உணர்ந்தாயா அன்பே
உண்மைதான் அது.
கண்ணதாசன் கவிதை கொஞ்சம்
உமர்கய்யாம் இராகம் கொஞ்சம்

எழுதப்பட்டதே
உனக்காகத்தான்
என்பதும் நான் அறிவேன்
விழாமல்
நெடுந்தொலைவு நடந்தாக வேண்டும்
வா பேசாமல்!

பொங்கல் நாள்
அடிக்கரும்புக் கணு.
தீபாவளித் திருநாள்
பொறிவாண நட்சத்திரம்.
சுதந்திர தினம்
கொடியின் பட்டொளி
குழந்தைகள் தினவிழா
மழலையர் சிரிப்பலை
நீதான் நிறைந்திருக்கிறாய்
இப்படித்தான் சொல்கிறது
எனது ஆசிரியப்பணி
மதிப்பீடு செய்யும்
கையெழுத்தில்
ஒரெழுத்து உனக்குரியது அல்லவா?

அன்னை மடி தந்த
சௌக்கியம் மறந்த நேரம்
உன்
தலைவாழை மடியில்
தலைவைத்துத் தூங்கியதுதான்
என் முதல்
சொந்தத் தூக்கமடி
தூங்கிக் கொள்கிறேன்
தாங்கு சக்தியடி
நீ எனக்கு...

பனைநிழல் நீட்சி
புதர்க்காட்டில்
தோட்டாச் சத்தங்கள்
புகைநெடி வாசத்தில்
உன் கடிதம் மீட்சி
எடுத்தேன் படித்தேன்
பதுங்கு குழிகளுக்குள்ளும்
நம் ஊரைப் பார்த்து விட்டேன்
நெல்சோறும்
உன் முத்தமும்
நாவில் ஊறி நிற்கின்றன.
பெண்ணே
தாய் மண்ணுக்குள்
வணக்கம் விதைக்கின்றேன்
வாழ்க நீ....

இந்தப் பெயர் சொல்ல முடியாத
தேவ உறவில்
நமக்குப் பொதுவானது
மௌனம்தான்
நீலவானங்களைப் போல...

சுற்றிலும் இருப்போர்
இல்லாதபோதும்
எல்லா நொடிகளிலும்
பொங்கி எழுகிறார்கள்
பேராழி அலைகளைப் போல...

❀

உனது ஒவ்வொரு
கை அசைப்புக்கும்
ஒரு வரி எழுத்துண்டு
எனக்கது புரியும்.

உன் வாய்மொழி
பொய் உரைக்கும்போது
உன் நகக்கண்
என்னிடம் மெய்யே பேசும்
அது போதும்
போய் வா..

❀



அவள்
அவள்கள்
அவர்கள்

யான் நான் எனும்
என் வாழ்வினுக்குள்
என்னையும் சேர்த்தே
எத்தனையோ அவள்கள்.

மண்வாசம் சுவாசித்த முதற்பொழுதில்
கண்மீது குடியிருந்த கற்றைக் குழலை
ஒதுக்கி விட்டு
'இது பெண் குழந்தை' என்று சொன்ன
அந்த மருத்துவச்சியின் முதல் குரல்
யான் கேட்ட முதல் மந்திரத் தமிழ்
'பரவாயில்லை
கை கால் மூக்கு முழி
சரியாக இருக்கிறதில்லையா?'
என்றது அம்மம்மாவின் அடுத்த குரல்.
'மேஷராசி அஸ்வினி நட்சத்திரம்
க்ஷேமமாயிருக்கட்டும்' என்று
முணுமுணுத்த
முப்பாட்டியின் மெல்லிய சொற்கள்தான்
துணிக் குவியலுக்குள் இருந்து
எட்டிப் பார்த்த பாப்பாவின்
அறிவியல் கல்வி ஆரம்பம்.

பாப்பாவின் துணிகளைத் துவைத்த கிராமத்து அம்மா
பாப்பா பாலுக்கு வழிசொன்ன
நாட்டு மூலிகைத் தாயாரம்மா
இந்நாட்டில் அம்மாக்களுக்கு மட்டும் பஞ்சமேயில்லை.

இரயில்வே குடியிருப்பில் தூங்குமூஞ்சி மரநிழல்
அருகிருந்த ஆங்கிலோ இந்தியக் கலகலப் பெண்மணி
தொட்டில் தாலாட்டுப் பாட்டிற்குள்
முட்டை வாசனை ஊற்றி
பிறமொழியும் அறிமுகம் செய்து வைத்தாராம்
பூமிக்குப் புதியவுயிராய் வந்தபோதே
பெண்களின் ஆதிக்கம்தான்
என்மீது
வேண்டிப் பெற்ற வரமல்லவா
அது.

'பாட்டி, இந்த ஆளைப் போகச் சொல்லு
பாட்டி முள்ளு குத்துது போகச் சொல்லு'
வருத்தியவர் தாடிக்காரர் தொலைதூரத் தாத்தா
கருத்துடன் காப்பாற்றியது தொலைதூர உறவுப்பாட்டி.
அந்தப் பாட்டி சிவப்பாயிருந்தாள்
வெற்றிலை போடாமலேயே
மெல்லிய உதடுகள் சிவப்பாயிருந்தன.
சிவப்புடன் துணை சேர்ந்த
அரக்கு நிறப்பட்டு உடுத்தியிருந்தாள்
நெற்றி மைதானத்தில் வட்டப் பொட்டு
நிறம் மஞ்சள் நிறைந்த அரக்குக் குங்குமம்
அப்புறம்.
கையில் நேற்றைய பழகிய மருதாணி
பழைய பவளச் சிவப்பு
பாதங்களிலும் சிவப்பு நலுங்கு
அலங்கரித்திருந்தாள்.
சின்ன மூக்குத்தி, கெம்புக்கல் தோடு
கழுத்தில் மஞ்சள் சரடு, மெல்லிய சங்கிலி
சிவப்பென்றால் சிவப்பு
அவள் அழகிய பாட்டி தொலைதூரப் பாட்டி
நினைவு அலைகளில் இன்றுவரை
தொலையாத சின்னப்பாட்டி

அவள் சொல்லித்தந்த பாட்டு ஒன்று உண்டு.
'வரகு அரைக்கிறதும் - அம்மா
வந்து நிக்கறதும்
இருக்கும் என்கிறதும் - அம்மா
இல்லை என்கிறதும்....'
வரகு - மிகச்சிறந்ததொரு புன்செய் தானியம்
வரகு - கோவில் கோபுரக் கலசத்துள்ளும் இருக்கும்.
வரகு அரைக்கும் சத்தம்
ஒலிக்கிறது தொலைதூரத்தில்
கரையறுத்துக் காணாமல் போய்விட்டது
மிஞ்சிய கொஞ்சம் புஞ்சையும்.

கணகணகணவென்று
தண்டவாளத்துத் துண்டுமணி அடிக்கும்போது
எழுந்து வெளியே ஓடிவருவோம் சின்னப்பிள்ளைகள்
கிராமத்துப் பள்ளி அது.
ஒரேயொரு தாழ்வாரம்
ஒரேயொரு நீண்ட வகுப்பறை
ஐந்து வகுப்புகள் மூன்று ஆசிரியர்கள்
மூவருள் ஒருவர் தலைமையாசிரியர்
பெரிய பிரம்பு வைத்திருப்பவர்தான்
பெரிய ஆசிரியர்
பொடி போடுவார் அடிக்கடி.

பெண்பிள்ளைகள் ஒதுங்கியிருக்கப்
புளியந்தோப்பு
ஆண்பிள்ளைகளுக்குத் தென்னந்தோப்பு
அவளுக்குப் பிடித்திருந்ததோ தோப்புகளை விட
இடையே இருந்த தாமரைக்குளம் மட்டுமே
நடுவே நின்ற மலர்களின் அழகு
அழைத்துக் கொண்டேயிருந்தது.
குளத்திற்குள்ளே ஆழத்தில் போய்
தண்டின் வேர் பிரித்தாள்
வாயெல்லாம் தண்ணீர்ச் சகதி.

வாரியிழுத்தார் வலசம்மா டீச்சர்.
அவள் கையில் தாமரைப்பூ
ஆசிரியை கையில் அவள் உடம்பு
ஐந்து வயதில் குட்டிப் பெண்ணிற்குக் கிடைத்த
அவர் ஒரு காவல் தெய்வம்
மெய்யான அபயாம்பிகை.
வகுப்பறைக்குள்ளும் வெளியுலகத்திலும்
வல்லூறுகள் இருந்தாலும்
வலசம்மாக்கள் எப்போதும்
பிரம்பும் கையுமாகக் கூடவே
வந்து கொண்டிருக்கிறார்கள்
நாம் கூப்பிட்டாலும், கூப்பிடாவிட்டாலும்....

'தெலுங்குப் பாட்டு வேண்டாம்
தமிழ்ப் பாட்டுத்தான் வேண்டும்'

'கல்யாணி வேண்டாம்
ஹம்சத்வனிதான் வேண்டும்'

இப்போராளிகள் வேறுயாருமல்லர்
இரு சின்னஞ்சிறு சகோதரிகள்
அடுத்தடுத்துப் பிறந்தவர்கள்
இவர்களிருவரும் இசையில் தேறி
பூஜாநேரங்களில் ஆராதிக்க
அம்மாவுக்கு ஆசை
ஊர்மெச்ச சபாக்களில் இசைக்க
அப்பாவுக்கு ஆசை.

கற்றுக் கொடுக்க வந்தவரோ,
ஹரிகேச பாகவதரின் சொந்தக்காரர்
ஹார்மோனிய மேதை
இசையாசிரியை சங்கரம்மா.
ஏழு ஸ்வரங்களையும்
சோழவந்தான் துளிர் வெற்றிலைக்குள்
சுருட்டி வைத்திருப்பவர்
குறும்புப் பிள்ளைகளின் குடுமிபிடிச் சண்டையில்
பிற சொந்தங்கள் நிறையவே
இசை கற்றுக் கொண்டார்கள்.
இன்றளவும்
அந்தப் பெண் பிள்ளைகளின் இசையறிவு
அந்த வீட்டுக் கூடத்தின் நெடுங்கதவுகளுக்குள்
உறைந்தே போய் விட்டது.
எங்கேனும் ஒரு

வெற்றிலைச் செல்லத்ந்தைப் பார்க்கும்போது
'எந்தரோ மகானுபாவுலு' என்று கேட்கும்போது
சரளி வரிசையும் ஜண்டை வரிசையும்
வர்ணங்களும் கீர்த்தனைகளும் ஜாவளியும்
இரவில் குகைக்குள்
பார்த்து விட்ட ஓவியங்களாய்
தொண்டைக்குள் ஏதோ
பண்ணிசைத்துப் போகின்றன.
சங்கரம்மாவின்
ஹார்மோனிய சுருதியும்
சேர்ந்தே சங்கீதம் நிகழ்த்துகிறது.

எங்கே போனாள் பேச்சியம்மா.
எங்கே என் தலைச்சடைக்கு
வண்ண வண்ணத் துணுக்குத் துணி?

பேச்சி, தையல்கார மாரியப்பன் தங்கச்சி.
அவர்கள் வீட்டில் பலகை மூடியிட்ட
ஒரு மண்பெட்டி
மூலையில் இருந்தது தொட்டி போல.

அதற்குள்ளே,
தைத்தபின் வெட்டியெறியும் மீதித்துணிகள்.
பொறுக்கியெடுத்து வந்தால்
தலைநிறைய ரிப்பன் பூ
தினமொன்றாய்ச் சூட்டிச் செல்லலாம்.
சிலோன் சில்க், பாராசூட், ஃபாரின்துணி,
சாட்டின் துணி, பட்டுத்துணி,
பூப்போட்ட சீட்டித்துணி, வாயல்துணி
அத்தனையும் அம்பாரமாய்க் குவிந்து கிடக்கும்.
எத்தனை வேண்டுமானாலும் வெட்டுத்துணி
அள்ளியள்ளித் தருவாள் பேச்சியம்மா.
அவளுடைய அம்மா இசக்கியம்மா.
அவளுடைய அக்கா நொண்டிப் பாப்பா
பெரிய அக்காவாக வளர்ந்தாலும்
அவள் எப்போதும் பாப்பாதான்.

ஒன்று மட்டும் புரியாது
பேச்சியம்மா மொட்டையடித்திருப்பாள்
அல்லது
தலைவாராமல்
குச்சி குச்சியாய் முடி வைத்திருப்பாள்
இவளை இசக்கியம்மா
இடித்துத் திட்டிக் கொண்டேயிருப்பாள்.
நான் ஆறாம் வகுப்புக்குப் போன சமயம்
யாருக்கும் வாக்கப்படாத நொண்டிப் பாப்பா
பிரசவத்தில் செத்துப் போனது
அநியாயம் என்றே
வெடுக்வெடுக்கென்று
எங்களுக்குச் சடை பின்னிக் கொண்டிருந்தபோது
அம்மா சொன்னாள்
எருமைக் கொம்புச் சீப்பில் கூட,
பல் கொட்டிக் கொண்டது.
அரிதாகவே அம்மா கண்களில்
அன்று இரக்கம்,
நீர் கோத்திருந்ததாக
இன்று, என் நினைவில் நிழலாடுகிறது.

பிற்பாடுதான் தெரிய வந்தது
பேச்சியம்மா பிச்சிப் பெண்ணாம்.
என் பேச்சியம்மாவா?
பிச்சியா?

வெல்வெட்டுப் பட்டுப் போல
பாப்பாத்திப் பூச்சி
சிவப்பழகு பூசி
கால்பரப்பி ஊர்ந்து வரும்
தொட்டுத் தொட்டுப் பார்த்து
தோட்டத்தில் விட்டு விடுவேன்.

தெப்பக்குளக்கரையை எட்டிப் பார்த்தபடி
அப்பாவின் கதர்ச்சட்டையை வாங்கி வர
கடைவீதியில் காத்திருந்தேன்.
வளர்ந்த பையன் ஒருவன் சைக்கிளில் வந்து
மெதுவாய் இடித்தான்.
இன்னொருவன் கூடவே இளித்தான்.
'என்னம்மா பாப்பாத்தி எப்படியிருக்கே?' என்றான்
பல்லிக்கும் பயப்படாத நான் சிறுபெண்
அந்த மானுடப் பூச்சியைப் பார்த்துப்
பயந்தே போனேன்.
அந்தப் பயம் எனக்கு
இயல்பாக வந்தது எப்படி
என்று தெரியவில்லை அப்போது.

வாழைப்பழக்கார அம்மாள்
சூழலை விசிறியடித்து
ஈக்களை விரட்டி விட்டார்
பத்திரமாய்ப் பக்கத்திலே
அமர்த்திக் கொண்டார்
'உள்ளூர் மைனருங்க
ஒரு நாளில்ல ஒருநா
இவனுக வசமா மாட்டிப்பானுக'
என்று சாபமிட்டாள்.

பஜார்த்தெரு தொடக்கத்தில்
கருவறைக்குள் பவித்ரமாய் உட்கார்ந்து
திருநீறு குளித்திருந்த
பத்ரகாளி மாரியம்மன்
போலிருந்தாள் சடையம்மா.

ஆத்தாள்
எனக்காக
நடைபாதைத் தெருவோரம்
கடைபோட்டுப் பழம்விற்கும் சொரூபமும்
எடுத்திருந்தாளோ?

வெள்ளாடை பூண்டிருந்தது புலமை
நெற்றியில் திருநீறு துலங்கியது
எப்போதும் கைவல்யம் படித்துக் கொண்டிருந்த
தமிழாசிரியைக்குத் துணைவரில்லை.
குழந்தைகளில்லை.
கவலையேதும் காட்டாமல்
அமைதியின் திருவுருவமாய் வந்து செல்வார்.
நாங்கள்தான் அவருடைய செல்லங்கள்.
மாடிவீட்டுக்கு அழைத்துப்போய்
அடுக்கடுக்காய்ப் பலகாரம் எடுத்து வைத்து
தமிழ்ப்பாடமும் ஊட்டி வளர்த்தார்.

எமது மொழிப்பசிக்கு
தமிழம்மா ஓர் அன்னபூரணி.
ஒற்றுப்பிழை சந்திப்பிழை நேரும்போது
கருநீல மையெழுத்துகள்
சிவப்புத் தீற்றிக் கொள்ளும்.
'ஐந்தாண்டு திட்டம்'

என்றெழுதினேன் கட்டுரை ஏட்டில்
'ஐந்தாண்டுத் திட்டங்கள்' என்று
பதினெட்டு முறை
எழுதிய பின்னும்
'கட்டுரை மிக நன்று'
என்று மதிப்பீடு செய்து
உற்சாகமாய்க் கையெழுத்திட்டது
அந்தச் செந்தமிழ்த் தாயுள்ளம்.
எம் பிள்ளைத் தமிழ் வாழ்விற்கு
நல்லாசிரியர் அவர் இட்ட
அடித்தள வரிசை செம்புல அறிவில்
இன்று அரண்மனை எழுப்புகிறேன்.
அதில் முன்வாசல் மாடத்தில்
அவருக்கே முதல் மரியாதை.

அடுப்புக்கரி மலைபோல் குவிந்திருக்கும்
தகரத்தில் அள்ளி, எடுத்துக் கொடுப்பார்
பீபி நாகூர் அம்மாள்.

பர்மாவிலிருந்து நடைபயணமாய்
ஊர் திரும்பிய அகதித்தாய்.
தலையில் முக்காடு
இடுப்பில் லுங்கி பூப்போட்டது.
முழங்கைவரை நீளும் மேல்சட்டை
முகம் மட்டும் பளிச்சென்று
ரவிவர்மா சித்திரம்தான்.
சேலையணிந்த நம்மவர் மத்தியிலே
வேற்றுலக தேவதை மாதிரி இருப்பார்.
உழைப்புக்கு அஞ்சாத கட்டை
கரிக்கடையின் மேலான நிர்வாகி.

இரண்டு தலைமுறைக்கும்
எங்கள் வீட்டு அடுப்புக்குக்
கரித்தட்டுப்பாடு
ஏற்பட்டதே இல்லை.
கும்முட்டி அடுப்புக்கு.
வெந்நீர்த் தாமிரப் பாய்லருக்கு
தகதகவென்று பொரிந்து எரிய
தணல் வெந்து கொண்டிருக்கும்.

கருவேலன் மரத்துக் கட்டை
கரிமூட்டம் போட்டு
வண்டி வரும்போதே
எந்த ஊர் மரத்துக்கரி
என்று அதனைத் தரம்பிரிக்கும்
ஞானம் உண்டு
நாகூர் அம்மாளிடம்.

ஒருநாள் மாலை,
தகர டப்பாவில்
கரிவாங்கப் போனோம்.
பத்துவயதுப் பெண் நானும்
சின்னத் தம்பியும்.
அவனுக்கு ஏதோ உடம்பு சரியில்லை.
எனக்கும் சளி இருமல் சிறுதொல்லை.
கடையைப் போட்டு விட்டு
கைப்பிடித்து எங்களை அழைத்துச் சென்றார்
தெருக்கோடி பெரிய பள்ளிவாசலுக்கு.
கரும்பச்சைக் கட்டடம் அழகாயிருந்தது.
கல்பாவியிருந்தது முன்முற்றம்
செய்குளத்தில் தெளிந்த நீர் நிரம்பியிருந்தது.
தாடி வைத்திருந்த பெரியவர்
மந்திரித்து ஓதி விட்டார்.
காணிக்கை அளித்தார் நாகூர் அம்மாள்
சர்க்கரை இனிப்புச் சாப்பிட்டதும்
நன்றாக ஆகியிருந்தேன்
நான் சிறுபொழுதில்.

‘சின்னதுகளா
உங்களுக்குத் தெரிய நியாயமில்லை.
உங்க வாப்பாவோட அப்பாவும் அம்மாவும்

அகதியா வந்த எங்களுக்கு
தாயா புள்ளையா வாழக் கொடுத்தாங்க.
இந்த வியாபார இடத்தை விட்டுக் கொடுத்தாங்க.
தாகம் என்று வந்தா பாலைவனத்திலே
தண்ணியும் ஈச்சையும் கிடைச்ச மாதிரி
புண்ணியமாகக் கொடுத்த கூடாரம் மக்காள்.
எம்புள்ளைகள்
மேலுக்குச் சுகமில்லை என்றால்
விபூதி மந்திரிச்சுத் தருவாரு உங்க தாத்தா.
அதுவும் உடனே பலிக்கும் அடா,
பெரியவர் போனப்புறம்
யாரும் மந்திரம் சொல்றதில்லையா
சொல்லுங்கடா பிள்ளைகளா'
என்று நெடுகப் பேசிக் கொண்டே வந்தார்.

அவர் தலைமேல்
கரித்தகரம் மகுடம் ஏறிக்கொண்டது.
வீடடைந்தோம்.
மொரமொரவென்றிருக்கும் புதுக்கரி வந்தபின்
எரியும் கும்முட்டியில் எப்போதும்
அம்மா போடும் ஃபில்டர் காப்பியை
குடித்து விட்டே புறப்படுவார் நாகூர் அம்மா.
சட்டைப் பையிலிருந்து சுருக்குப் பை பிரித்து
குட்டிப் பிள்ளைகளிடம்
காசெடுத்துக் கொடுத்து
வாழ்த்தி விட்டே கடை திரும்புவார்
கரியைக் காசாக்கிய பர்மா அம்மாள்.

என்ன என்னைத் தேடினீங்களாமே?
என்றபடி வீட்டிற்குள் வருவது இலட்சுமி மாமி.
இலட்சணமான மூக்குத்தி முகம்.
கலப்படமற்ற வெள்ளந்திச் சிரிப்பு
தமிழ் அய்யர் புடவைக் கட்டு.
நடுவே முடிச்சுப் போட்டுக் கொள்ளும் ரவிக்கை
கழுத்தில் ஒரேயொரு மஞ்சள் சரடு
கணவர் கோவில் பரிசாரகர்
வெற்றுச் சோற்றுருண்டைச் சம்பளம்
அவ்வப்போது ஓரிரண்டு தேங்காய் மூடி
அஞ்சாறு வயிற்றுக்கு எப்படிப் போதும் அது?

மாமி
கூப்பிட்ட குரலுக்கு ஓடிவருவாள்.
எட்டடிக்கு எட்டடிக் குச்சு.
அக்ரஹாரச் சாக்கடை மேல்
ஒண்டுக் குடித்தனம் ஓட்டு வீடு.
அங்கே ஆட்டு உரல் சுற்றிக் கொண்டேயிருக்கும்.
இட்லிக்கும் தோசைக்கும் வடைக்கும்
அரைபட்டுக் கொண்டேயிருக்கும் மாமி போலவே.
உழைப்பிற்கு அவளுக்கு இணை அவளேதான்.
கைமுறுக்குச் சுற்றுவாள், அச்சுப்போலிருக்கும்.
அதிரசம் சுடுவாள் தேவாமிர்தமாயிருக்கும்.
அடுப்பு ஊதி சமையல் செய்வாள்.
அடுக்களையை அடிக்கடி சுத்தம் செய்வாள்.
இத்தனை வேலைகளுக்குப் பின்னும்
இலட்சுமி மாமியின் சேலை பளிச்சென்றிருக்கும்.

ஏழ்மையை மகாகெளரவமாய்
அணிந்திருந்தாள் இலட்சுமி மாமி.
அவள்தன் பிள்ளைகளைப்
பள்ளிக்கூடம் அனுப்பாமல்
பலகாரம் விற்க
ரயில்நிலையம் அனுப்பி வைத்தாள்.
சோடா, கலர் கம்பெனிக்கு
சுமை தூக்க அனுப்பி விட்டாள்.
கல்லுக் கிடங்கிலிருந்து
தண்ணீர்க் குடம் சுமக்க
உடுப்பி ஓட்டலுக்குப் போகச் சொன்னாள்.
மாமி மகள் காமாட்சி ஆசைப்பட்டு
இரவுப் பாடம்
படித்துச் செல்வாள் எங்களுடன்.
பகலெல்லாம்
அப்பளமிட்டு அப்பளமிட்டு
படுநோஞ்சானாய் மெலிந்திருப்பாள்.
பட்டினிக்குப் பெயர் மாற்றி
பல தடவை நோன்பிருப்பாள்.
ஒருநாள்
மொட்டை மாடி நிலவு இரவில்
என்னைக் கேட்டாள் இப்படி,
'வர்ரியாடி, ஸ்ரீவில்லிபுத்தூர் போய்வரலாம்.
ஆண்டாளிடம் வேண்டிட்டால்
ஆம்படையான் கிருஷ்ணனைப் போலக்
கிடைப்பானாமே?'
எலும்புக் கூடாயிருந்த அவளுடைய
கிலுகிலுப்பை முகத்திலிருந்து
கண்ணாடிக் கோலிக்குண்டுகள்
கண்ணிரண்டாய் துருத்தி நின்றன.

மாமி வணக்கித் தரும்
பசும் சுண்டைக்காய்
கசந்ததே இல்லை.
நிறம் மாறியதே இல்லை.
காமாட்சி அன்று கேட்டதும்
அப்படித்தான் இருந்தது.

வேறுபல காமாட்சிகளும்
வேறெங்காவது
கேட்டுக் கொண்டுதானிருக்கிறார்கள்.
வேண்டுதல்களும் இன்றுகூடக்
குறைந்ததாய்த் தெரியவில்லை.

விடுமுறை நாள்
வீட்டிற்குள் சிலபேர்
தீக்குச்சி அடுக்கினார்கள்.
வயிற்றுப் பிழைப்புக்கு ஓரிருவர்
விளையாட்டாய் மற்றவர்கள்
மரக்கட்டைகளில் குச்சிகளை
வரிவரியாய் வைத்துத் தட்டினார்கள்.
தீப்பெட்டி ஆபீஸில் கொடுத்தால்
காசு கிடைக்கும்.
வாழ்க்கையில் இப்படியொரு அடுக்குதல்
கூட்டம் பெருக்கல் கணக்கிற்கும் உதவிற்று.
குட்டிப் பெண்கள் கூடிக் கூடிப் பேசி வைத்தோம்.
உண்டியலில் சிறுவாடு காசு சேர்த்தோம்.

என்ன செய்யலாம்?
எல்லாருக்கும் தோன்றிய ஒரு கேள்வி.
திருவிழாக் கொண்டாடலாமா?
எந்தச் சாமி நல்ல சாமி?
    பிள்ளையார் வேண்டாம்
    அது ஆம்பிளைச் சாமி
முருகன் சாமி வேண்டவே வேண்டாம்
அவன் ரெண்டு பெண்டாட்டிக்காரன்
    திருப்பதி சாமின்னா
    மொட்டையில்ல போடணும்.
கருப்பசாமி கையிலே அருவா
பயமாயிருக்கே.
    பரமசிவன்
    அவரு பெரியவங்க சாமி
    மந்திரமெல்லாம் சொல்லணுமே

சரி. அப்போ நம்ம ஊரு மாரியம்மா.
ஊரெல்லாம் அவளுக்கு
எப்போவும் திருவிழாதான்.

நமக்கென்று சாமி ஒன்றுகூட இல்லையா?
என்ன ஊரோ? என்ன உலகமோ?

சோர்ந்தே போனோம்
சின்னஞ்சிறு பெண்மணிகள்.

அப்போது,
ஒருத்தி சன்னக் குரலில் கேட்டாள்.
நாம் ஏன் சிலுவை போட்டு
ஏசு சாமியை ஆவாஹனம் பண்ணக் கூடாது?
இரத்தம் வழியுமேடீ சிலுவையிலே
பாவம்டீ அது.
அல்லா சாமியை வச்சிடலாமா?
அல்லாவுக்குச் சிலையேதும்
இல்லை போலிருக்கே?

தேடித்தேடிப்
பலதடவைப் பேசிப் பேசி
சாமியொன்றைக்
காணமுடியாமல்
மிக இளைத்தோம்.
நாளொன்று போனது.
நல்முடிவும் கிடைத்தது.

கோலம் போடுவோம்.
தோரணம் கட்டுவோம்
திருவிளக்கு ஏற்றுவோம்
தின்பண்டங்கள் வீட்டில் செய்வோம்
கதம்பம் சூடுவோம்
புத்தாடையும் புனைவோம்
நமக்குத் தெரிந்த பாடல்கள் பாடி
கும்மியடிப்போம், கோலாட்டம் நடத்துவோம்
நமக்கு நாமே வணக்கம் சொல்லி
நம் பாரதத் தாய்க்குப் பல்லாண்டு இசைப்போம்.
வந்தே மாதரம் இதுவே மந்திரம்

என்று முடித்தோம்
நாங்கள் கற்றறிந்தோம்.
தெளிவு பெற்றோம்.
இன்றும் அப்படியே தொடருகிறோம்.
என்றும் சமயம் கடந்த
பாரத புத்திரிகள்.
பாரதி புத்திரிகள்.
'ஆத்தி சூடி இளம்பிறை அணிந்து'...

பாதம் பதியாத புத்தம்புதுக் கல்லூரி
மாதர் தம்மை வளர்க்க வந்தவொரு
சாரதாதேவி குருவருள் பெற்ற கல்லூரி
நானூறு கல்தொலைவிருக்கலாம் போகவர
அங்கே என்னைப் படிக்கப் போட்டார்கள்.
சேர்க்க வந்த முதல்நாள்
அழலாமா, வேண்டாமா என்றிருந்தபோது
பெரிதாக ஒரு விசும்பல்
வராந்தாவிலிருந்து
மூக்குக் கண்ணாடிக்குள்
முட்டை விழிகள் நிரம்பியிருந்தன.
அம்மாபோய் அவரிடம் கேட்டார்கள்.

'நீங்கள் இங்கே புதியவரா?'

'ஆமாம். என் ஊர் சென்னை.
இக்கல்லூரி நூலகர்.

'புதுஇடம் அப்படித்தானிருக்கும்.
இவள் என் மகள்
இங்கே படிக்கப் போகிறாள்'

பாக்கியலெட்சுமி மிஸ் அக்காவைப்
பார்த்துப் பல்தெரியச் சிரித்தேன்.
மறந்து விட்ட வணக்கத்தைப்
பின்குறிப்பாய்ச் சேர்த்துக் கொண்டேன்.
மிஸ் கேட்டார்கள்.

'உனக்கு ஊர் ஞாபகம் வருதா?'

'இல்லிங்க மிஸ் அக்கா
என் நாய்க்குட்டி ஜிப்பியை
நினைச்சா மட்டும்
மனசு வேதனைப்படுது
அது தினமும் காலைலே
என்னை எழுப்பி விடும்
இங்கே எழுப்ப
யார் வருவாங்களோ?'

என்றதுமே பாக்கியலட்சுமி சிரித்து விட்டார்கள்.
அன்றுமுதல் எங்கள் இருவருக்கும்
ஜிப்பி பொதுவான விஷயமாகி மெதுவாக
புத்தக உலகிற்குள்ளும் புகுந்து கொண்டோம்.
நூலகத்தை மிஸ் அக்கா திருக்கோவிலாக்கினார்கள்.
காலையில் - கல்லூரி மாணவி, வகுப்பில்
மாலையில் - நூலகப் பணியாளாய்
வேலையில் சேர்ந்து கொண்டேன்.

அமெரிக்க முறையில்
படிப்பும் பகுதிநேரப் பணியும்
வாய்த்தது எனக்கு.
கிடைத்த சம்பளத்தில்
விடுதியில் சத்துணவு கிடைத்தது.
கிடைத்த நேரத்தில் அநுத்தமாவும் கிருத்திகாவும்
மு.வ.வும், ஜீவாவும், காண்டேகரும்
லா.ச.ரா.வும், தெ.பொ.மீ.யும், தி.ஜ.ர.வும்
எப்போதும் பாரதியும் என்னுடனிருந்து
நூலகத்தைப் பார்த்துக் கொண்டார்கள்.

பாக்கியலட்சுமி அக்கா. நீங்கள்
என் கவிதையனுபவத்தில் வாசிப்பு அறிவாய்
இன்னும் படிந்திருக்கிருக்கிறீர்கள் அக்கா.
இது ஒருவகை நன்றி கூறல்.
நேயத்துடன்
எங்கிருந்தாலும் ஏற்றுக் கொள்ளுங்கள்

என் எழுத்துகளில்
எங்கெல்லாம் 'பா' வருகிறதோ
அதெல்லாமே கவிதை
அத்தனையும்
உங்களுக்கே என்
அன்புக் காணிக்கை.

மகளிர் கல்லூரி முதல் பதிவே
எங்களுடன்தான் ஆரம்பித்தது.

'எண்ட பேரு சாந்தம்மை
'ஐ ஆம் ராஜ்யலட்சுமி'
'நான் கொடுமுடி ஜானகி'
'இவங்க பக்கத்து ஊருதான் இராதாமணி'

என்னுடன் அறிமுகமானவர்களும்
விட்டுவிட்டுக் கன்னியழுகை அழுதார்கள்.
ஏதேதோ பேசிக் கொண்டோம்.
இருப்பதைப் பண்டமாற்றுச் செய்து கொண்டோம்.
நண்பிகளானோம்.
ஜுன் மாத அழுகை
ஜுலையிலே சாரல் ஆகி
ஆகஸ்டில் ஆங்கிலத்தில் பேசி
செந்தமிழில் நடித்து மலையாளத்தில் இசைத்தோம்.
எப்படியோ ஆண்டொன்றும் போயிற்று.
தேர்வும் எழுதி தோழமை நாட்டியது.

எப்போதும் என் பக்கத்து இருக்கையில்
மங்கையர்க்கரசிதான் ஒட்டியிருப்பாள்.
உக்கிரமாய்ப் படிப்பாள்.
இரவெல்லாம் ஒப்பிப்பாள்.
அவள் உதவியால்தான்
நான்கூடத் தேறிவிட்டேன்.
பழகிய கல்லூரியில்
பழுத்துக் கொண்டேன்.
அவள் ஏராளமாய் மதிப்பெண் பெற்றாள்.

கடின உழைப்புப்
பரிசு கொடுத்தது.
மேலே படிக்கப்
பட்டினம் போனாள்.

எம்.பி.பி.எஸ்
மருத்துவப் படிப்பில் உயரமானாள்.
அவள், ஒரு மடல் எழுதினாள் குள்ளமாக.
'சகியே நலமா?
தோழியர் நலமா?
நான் நலம்.
இங்குள்ள பிணவறை உடல்கள் நலம்.
உடற்கூறு படிக்கும்போது நான்
இறைவனை வேண்டுவதெல்லாம்
இதுதான்.
அப்பா. சாமீ
அறுவை செய்ய எனக்கு
ஆணின் காலே கொடுத்து உதவு.
பெண்ணுடைய கால் என்றால்
பெருங்கொழுப்பு.
நரம்பைப் பிரித்தெடுத்துச் சோதிப்பதில்
நேரம் போதாது.
தேர்வுகளில் ஆண்காலே எனக்குத்
தரவேண்டும் பேராசிரியர்
என்று எனக்காக நீ வேண்டிக் கொள்'
இப்படி வேண்டுகோள் விடுத்திருந்தாள்- தோழி
அப்போது நான் கும்பிட்ட
ஒரே சாமி
அடிகள் இராமலிங்க வள்ளலார்
என்பதால் எனக்குள்ளே இரண்டாட்டம்.

ஏதும் செய்யாது விட்டு விட்டேன்.
மங்கையர்க்கரசி வெற்றி பெற வேண்டுமே
என்று கொஞ்சம் கவலையும் இருந்தது.
மாதங்கள் ஓடிப் போயின.
அவள் பாவி
எவனோ ஒருவன் விரித்த வலையில்
பதினெட்டை எட்டும் முன்னரே
விழுந்து விட்டாள்.
ஓடிப் போனாள் என்று ஊரறியும் முன்னர்
தேடிவந்தனர் அவளுடைய பெற்றோர்கள்.
'தோழி எனக்குத் தெரியாமலா
உடன் போயிருப்பாள்'
என்ற நம்பிக்கை சுமந்து வந்தார்கள்.
எனக்கு வந்த கடிதம் அவர்களுக்கு
எந்த வகையிலும்
குறிப்பேதும் காட்டவில்லை.
செத்தகால் பற்றிச் சொன்னாளே தோழி
உயிரான காதல் பற்றி
எதுவும் சொல்லவில்லையே..?
ஏன்?

சிறுமலையின் அடிவாரம்
தறிஓடும் கிராமியம்
அங்கே
கிடைத்த சம்பளத்தில்
குடியிருப்புச் சலுகையில்
கல்விக்கழக வளாகத்தில்
தம்பியும் நானும் வாழ்ந்து கொண்டோம்.

தொடர்வண்டி போல நீளவாக்கில்
தாழ்வாரம் தாங்கிய வீடுகள்
அதேபாணியில் பின்னாலே நிலவறைகள்
ஆறுவீட்டுக்காரர்களும் அன்றாடம்
ஆளுக்கொரு முறையாவது
பாத்திரம் பண்டத்துடன் முகம்
பார்த்துக் கொள்ள நேரிடும்.

முன்தோட்டத்தில் செம்பருத்திச் செடி
கிளைகிளையாய்ச் சாய்க்கும் பூக்கள்
எங்கள் பக்கத்து வீட்டுப் பூந்தட்டு மட்டும்
வெளியே தலைகாட்டியதில்லை.
அந்த அக்காவும் மாமாவும்
அகிம்சா மூர்த்திகள்
அவ்வீட்டுச் செல்வங்கள்
அழகிய புன்முறுவல் குறும்பினங்கள்.

அவர்கள் வீட்டுச் சாமி அறையில்
மகாத்மா காந்தி, கஸ்தூர்பா படமும்
பயன்பாட்டிலிருந்த இராட்டை ஒன்றும்
சாந்தியுடன் வீற்றிருந்தன.
மாமா மெலிந்திருந்தாலும் பொலிவாயிருப்பார்.
அவரது தாயார் அம்சமாயிருப்பார்.
கருமையிலும் பொன்னின் மினுமினுப்பு
ஒருபக்கம் அள்ளிமுடிந்த தலைக்கற்றை
கழுத்தில் வளையம் அட்டிகையாய்
நூல்கயிறு பவழங்கள் மங்கலமாய்
கால்களில் வெள்ளிக் காப்பும் கறுப்புக் கயிறும்
கைத்தறி நூல்சேலை பின்கொசுவக் கட்டும்
மைய நெற்றியில் வாடாமல்லிக் குங்குமமும்
இம்மண்ணிற்கே உரிய
பச்சை வர்ண அம்மன் மாதிரி
பக்கத்து வீட்டிலேயே குடிகொண்டிருந்தார்.
உரலில் ஏதேனும் குத்திக் கொண்டும்
கேழ்வரகுக் களி கிளறிக் கொண்டும்
மூலிகை எண்ணெய்க் காய்ச்சிக் கொண்டும்
பணிநிமித்தம் வீட்டைச் சுற்றியே படர்ந்திருப்பார்.

ஆய்ந்தோய்ந்து
களப்பணி முடித்து
சாயங்காலம் வீடு திரும்பும்போது
கூடடையும் பட்சிகளைப் போல
நானும் தம்பியும்
படபடத்துக்கொள்வோம்.
பசியாற வேலையைப் பகிர்ந்து செய்ய
பட்டிமண்டபம் நிகழும் நாளும்
சொந்தத் தீர்ப்புத் தந்து
சமையலறை நுழையும்போது.
பக்கத்து வீட்டு அம்மாள்

நெய்ச்சோறும் கீரைக்குழம்பும்
கொண்டுவந்து
தட்டெடுத்துப் போட்டு
'உண்ணுங்க சைவந்தான்' என்பார்கள்.
பொக்கைவாய்ச் சிரிப்பில்
வர்க்கபேதம் அரண்டோடிப் போயிற்று.

வீட்டெண் மூன்றும்
வீட்டெண் நான்கும்
ஜாதியம் பேசின.
அந்த வீட்டார்கள் கொஞ்சம்
வம்புத்தீ வளர்த்தார்கள்.
அன்புடன் அவர்களைத்
தள்ளியே வைத்து விட்டோம்
தம்பியும் நானும்.

தம்பி சொன்னான் தூங்கப் போகுமுன்
'சாதி இரண்டொழிய வேறில்லை
பக்கத்து வீட்டார் இட்டார்
மீதி மக்கள் இடாதார்'
ஔவையை உள்வாங்கிக் கொண்டதால்
அன்றைய கனவில்கூட
சோறும் குழம்பும் சூடாயிருந்தது.
காலை,
கிரஹணம் விட்ட வானம் மாதிரி
பொன் பரப்பியிருந்தது.
வந்து போயிற்று எத்தனையோ
சமூகச் சுனாமிகள்
இடைவெளி ஆண்டுகளில்....

இப்போதும்
முரசு நகரிலிருந்து அவ்வப்போது
அடிநாதமாய்ப் பறையொலி
துடித்தெழும்போது
முகம்பார்த்துச் சோறிட்ட சபரித்தாய்
இதயத் துடிப்பிற்குள் மற்றொரு நற்றாய்
இளஞ்சூடாய்ப் பொருந்திக் கொள்கிறாள்.
வாடாமல்லி
ஆண்டு பலவாய் நெஞ்சில்
வாழும் மல்லி.

'நீ இவளுக்கு
உடுத்தத் துணி கொடுக்கிறாய்.
இவளைப் பெண் மருத்துவரிடம்
அழைத்துப் போகிறாய்.
இவளுக்கு ஆண்கள்
இழைத்து விட்ட அநீதியைத்
தட்டிக் கேட்க
சமூகக் குரல் எழுப்ப நீ
செய்யப் போவது என்ன?
போதும் உன் மௌனப் பணி.
போ எழுது
சீறி எழுது
முனை மழுங்கியிருக்கும்
உன் எழுதுகோலைக் கூர்மைப்படுத்து.
சிவப்பு மை நிரப்பு.
சிறுமைகளைத் தட்டிக் கேள்.
சுடும் உண்மை கொந்தளிக்கட்டும்.
அப்படியப்படியே நிகழ்வுகளைப்
பச்சையாகவே பதிவு செய்.
உலவவிடு ஊருக்குள்
கொச்சை மனிதர்கள் கொல்லப்படட்டும்.
பெண்ணின் கட்டாய நிர்வாணத்திற்குப்
பகல் வெளிச்சத்தில் மொழி கூச்சப்பட்டால்
ஆணின் அம்மணத்தை
அரையிருட்டில் அதேமொழி
அச்சேறவில்லையா கேள்.

அவைகளில் எல்லாம் அதிர்ந்து கேள்
புதிய ஔவையாய்...'
என்று
என்முன் ஆவேசப்பட்டாள்
கவிஞர் ரோஹிணி.
மென் காவியுடையில் உக்கிரமாயிருந்தாள்.
அவளின் திசுக்கள்
புற்றுநோயால் தின்னப்பட்டுக் கொண்டிருந்த
கவலை நேரத்தில்
கண்களில் வெந்நீர்.
அவளுக்கும்
அனைவருக்கும் சேர்த்தே
அரிசிக் கஞ்சி கொடுத்து விட்டு
சரஸ்வதி அக்காவிற்குக் குரல் கொடுத்தேன்.
சக்தி மையம் தொடக்கமாயிற்று.

> 'ரோஹிணி
> இவர்களுக்கு
> நாம்தான் மைகொடுப்போம்.
> எழுத்து
> அவர்களுடையதாகவே இருக்கட்டும்.
> ஒலிநாடா கொடுப்போம்.
> பேட்டரிக் கட்டை கொடுப்போம்.
> பேச்சுப்பதிவு
> அவர்களுடைய சொந்தக் குரலிலேயே
> ஒலிக்கட்டும்'

என்று
மண்ணில் கையூன்றி
மறுமொழி தந்தேன்.

கண்களில் கனலும்
இமைகளில் ஈரமும் ஒருசேர
கணப்பொழுது மின்னலுடன்
கவிதாயினி அவள்
நெஞ்சுடன் என்னைப் பின்னிக் கொண்டாள்.

புலவர் உதகை ரோஹிணி
இல்லை எந்த முகவரியிலும்
இப்போது இருப்பது
நாளையும் நின்றிருக்கும்
நேற்று எழுதிய அவளது
ஆவேசக் கவிதைகளில்தான்...

அமெரிக்காவில் நாற்பதாண்டுகள் வாழ்ந்தபின்
ஆகஸ்டு மாதம் ஆயுள் நிறைவுற்ற
என் சித்தி ஆனந்தவல்லிக்கு.

நீ என் அம்மாவைப் பெயர்சொல்லி
அழைக்கும் உரிமை பெற்றிருந்தாய்
அம்மா. மாமா. சித்தப்பா. எல்லோருடனும்
சேர்ந்து நீ இசைத்த தியாகையர்
கீர்த்தனையை
யாராவது இன்றும்
ஏதேனும் ஒரு மேடையில்
பாடிச் செல்கிறார்கள்
அங்கெல்லாம் நீ
நிறைந்திருக்கிறாய்...

குழந்தைகளைக்
கால்மடக்கி உட்கார வைத்து
விரல்களால் கோதிவிட்டு
சீப்பே இல்லாமல் சிக்கெடுத்து
நோகாமல் தலைபின்னிவிடும்
போதெல்லாம் உன் கருங்குவளைக்
கண்ணோரம்
ஒரு திவலை
மண்ணில் விழ
எப்போதும் காத்திருக்கும்
உன் மூக்குத்தி முத்து
அதைப் பார்த்திருக்கும்

நீ மாநிறம் என்னைப் போல.
நம்மைப் பற்றிய நிறபேதங்களைப்
பேசுபவர் வாய்
அடைத்துப் போகும்படி
நீ பாட்டுப் பாடுவாய்
நான் ஆட்டம் ஆடுவேன்.
வளர்ந்து பட்டம் பெற்று
வளமான மலைப்பள்ளியில்
பணியாற்றிய வண்ணநாட்களில்
ஒருமுறை
குடும்பத்துடன்
எங்கள் சிநேகாலயாவிற்கு வந்திருக்கிறாய்
சித்தப்பா அப்போதும்
உன்னைச் சுற்றியே படர்ந்திருந்தார்
உனது காஞ்சிப் பட்டுப் புடவை போல.

இந்திய கிராமத்து நதிக்குத்
திரும்பி வந்திருக்கிறாய்
அஸ்தியாக.
வாழ்ந்திரு இங்கேயே
இனியேனும்
தந்தையும் தாயும்
உன்னை ஈன்றெடுத்த
பாரத மண்ணில்.
தாயே வணக்கம்.

ரோமாபுரி பற்றி எரிந்தபோது
நீரோ மன்னன்
நரம்புயாழ் மீட்டியது
மெய்தானா?
வெயில்நாள் வேம்பூ போல
உதிர்த்த சிரிப்புக் கிளை
அலையில்
எழுந்து வந்தவர்
தோழியர் அன்னமரியா
தோல் வெண்பூ
தலைமுடி கரும்பூ
என்மொழி வகுப்பில்
அகலவிழி அழகி
அ. ஆ. இ
அடுத்த எழுத்துக்கு
அடியெடுக்கவேயில்லை
இம்மூன்று எழுத்து உயிரை
இதயத்தில் வரைந்து கொண்டு
சித்திரச் சித்து
விளைத்து வருகிறார்.

ஆதிக்குறளும் இசையாய்
குரலுக்குள் குழலாகி
அகரவரிசை
இகரத்துடனே தூரிகை ஏறி
இந்திரவில் தோய்த்து
தொல்காப்பியத் துறைமுகங்களை
இணைத்துச் செல்கிறது.

சென்ற காலத்தில்
அன்னமரியா தென்மதுரையிலும்
என் கூறு
இத்தாலியிலும் வடிவெடுத்திருக்கலாம்
என்கிறாள் என் புதிய தமிழ் மாணாக்கி
அருணாசலமும் மச்சுபிச்சுவும்
ஏறிப் பார்த்து வானம் தொட்டவள்
பெருநாட்டுப் பொன்பூ வெரோனிகா குளோரி.

விரிந்து விழும்
மர விழுதுகளைப் பற்றியபடி
வசந்தா அழுகிறாள்.
கசங்கிய கைத்தறிச் சேலை
குச்சிக் கைகள்
வற்றிய முகமேடுகள்
மாதப் பூ உதிர்வது
நிற்க ஆரம்பித்திருக்கும் சோகை உடம்பு
பச்சை குத்தியிருந்த
மரபுக் கோலங்களின்
அடையாளங்களும்
ஒருசேரக் குலுங்குகின்றன.

குடித்து வந்து தினசரி
இழுத்துப் போட்டு அடிக்கும்
ஒரு சராசரிக் கணவன் இவளுக்கு.
வசந்தாவின் தலைமுடி
பாதி
அவன் கைகளாலேயே
பறித்தெறியப்பட்டிருக்கலாம்.

வசந்தா
விசைகொடுத்தால்
இமைபடபடத்துச் சிரிக்கும்
பொம்மைபோல
இமையழுத்தி அழுகிறாள்.


'வசந்தா அழாதே
ஆகாது உன் உடம்புக்கு'
என்றேன் அவள் முகம்பார்த்து.

வசந்தா கேவிக்கேவி
வார்த்தைகளுக்குள் சிக்கினாள்.
'அக்கா, என் புருஷன் அடிக்கிறான்.
குடிக்கிறான். தொலையட்டும்.
என்னை விட்டா யாருக்கா
அவனுக்கு விதி? சாகவும் பயப்படலே நான்
நானும் போயிட்டா அவன
யாருக்கா காப்பாத்துவா?
அதை நினைத்தே
அழுகிறேன் இப்போ'
வசந்தா
அவளுடைய மாமியார் போலவே
தாயாகத் தெரிகிறாள்.

வசந்தா பாவமா?
கணவன் பாவமா?
கதைகேட்டிருக்கும் நான் பாவமா?
என்ன மனுஷி இவள்?
அவனைக் கூப்பிட்டுப் பேசணுமாம்.
மரியாதை நிமித்தம் பகலில் என் பேச்சு.
கொஞ்சம் ஏறுமாம்.
வசந்தாவின் வேட்புச் சொற்கள்
கண்ணீர் ஏந்தி வந்தன.
'ஆகட்டும் பார்க்கலாம்'
என்கிறேன் நான்.
ஆயிரத்து ஓராவது முறை
உதிர்கிறது
ஆலம்பழம்
ஆயிரம் விதைகளுடன்...

எங்களுக்குப் பெயரே இல்லை
எண்பத்தி எட்டு எங்கள் கொட்டடி
எம் தனிவில்லை முப்பத்தியிரண்டு.
வரிசையாக நின்றாலும்
வளைந்து சென்றாலும்
சென்றடைய வேண்டிய
கூடம் எண் மூன்று.
கூடுதலானாலும்
குறைந்தாலும்
குலுக்கிக் கொட்டிக்
கவிழ்க்கப்பட வேண்டிய
தாயக் கட்டையின் புள்ளி
எம்மீதும் பொறிக்கப்பட்டுள்ளது.
எப்போதும் எண்களின் ஆதிக்கத்தில்
அகப்பட்டிருக்கிறோம் நாம்.
அவ்வப்போது மீறுவது பெண்களுக்கும்
விதிக்கப்பட்டிருக்கிறது.

திருக்கோவிலில்
நாங்கள் முடி இறக்கியதில்
நளினப் புரட்சியொன்று நிகழ்ந்து விட்டிருந்தது.
பெண் நாவிதர்
நியமிக்கப்பட்டிருந்தார்.
முதல் முறையாக
தலைமுடி கூட,
சந்தோஷமாகக்
காணிக்கையாகிக் கொண்டது.
சந்தனம் வெகு இயல்பாக
மொட்டையிலும் விடுதலை கமழ்ந்தது.



நேற்றுப் போலிருக்கிறது

மதுரை மாநகரில் மழை பெய்தது.
மாசி வீதியில்
தோழர்களுடன் கவிதை பேசிக் கொண்டே
நடைபாதையில் தோசைக்கடை
தாண்டியபோது
மழைச்சாரல் முகத்தில் இழைத்தது.
என் கைத்தறிச் சேலைத் தலைப்புக்குள்
இளங்கவிதைச் சகோதரை இட்டுச் சென்றேன்.
எல்லாரும் ஒன்றாக மேலும் நனைந்தோம்
இணைந்தே நடந்தோம்
எவரோ நகைத்தார்கள்.
சேலைத் தலைப்பும்
வண்டியூர்த் தெப்பக்குளப் படிக்கட்டில்
ஒரு கவிதைக்குத் தலைப்பாயிற்று.
அழகிய அக்கவிதைக்குள்
மழைநீர்த் துளிர்த்திருந்தது.
அரும்பிய கண்ணீரும்
கரும்பனஞ்சாறாய் நிரம்பி இருந்தது.
அன்று என்னுடன் நடை நடந்தவர்கள்
இன்றும் எண்ணிக் கொள்வார்களா
அம்மதுரைக் காட்சியை?
வேறு யாருக்கேனும் மழைக்குடை
நீட்டும்போதெல்லாம்
அந்தக் கவிதைக்காரர்களையே
நெஞ்சில் ஈரத்துடன்
இன்னமும் நினைத்துக் கொள்கிறேன்
என்பதைக் காலச்சாரல்
என்றேனும் அவர்களிடம் சொல்லிவிட்டுத்
திரும்பி வருமா என்னிடம்?

மதுரை மீனாட்சியம்மன் சொக்கலிங்கன்
திருக்கோயில்
பொற்றாமரைக் குளப்படிக்கட்டில்
மற்றுமொரு தூண்போல
இறுகிப் போய் உட்கார்ந்திருந்தேன்.
சித்திரச் சுவர்களில் மூலிகைச் சாறெழுதிய
இளநீலமும் கரும்பச்சையும் மட்டுமே
மிச்சம்மீதியிருக்கின்றன.
பிற்காலச் சுண்ணாம்புப் பட்டைகளுக்குள்
காலவரிசைகள் அழிக்கப்பட்டிருந்தன.
நேற்றைய ஓவிய அழகுகளைக் காப்பாற்ற
வருவாரா ஓர் ஆனந்த குமாரசாமி
இன்று நாம் ஏதேனும் செய்ய வேண்டாமா?
விசுவரூபக் கேள்விகளைக்
கோபுரக் கலச நுனி தொட்டிருந்த
கோவில் மேகங்களில் எழுதிக் கொண்டிருந்தேன்.

மெதுவாகப் படிக்கட்டிற்குத் திரும்பி வந்த
என் நினைவு எல்லைக்குள்
வந்து அமர்ந்திருந்தார் ஒரு மூதாட்டி
'கை நீட்டு
தாயீ.
உன் கவலைக்கு மருந்துண்டு
ரேகையில் இருக்குது பார் எல்லாமே.
சிவன் எழுத்து சிவப்பு
அம்மை மீனாட்சிக்கு உற்றதுணை பச்சை
உன் கவலை மாற்று
அண்ணன் திருமால் கருநீலம்
மக்கள் எல்லாருக்கும் வானம் போல

பொது. மண்ணும் நீரும்....
இசைத்துக் கொண்டே போனாள் ஔவை.
பையிலிருந்த ஒற்றை ஒரு ரூபாயை
அவள் சொல்லுக்கு ஈந்தேன்.
குறி சொன்ன அம்மையின்
குமிண்சிரிப்பை
இன்றுவரை வேறெவரிடமும்
நான் கண்டேனில்லை.

ஆள் ஒருவர் வேண்டும்
மற்றுமொரு ஆள் இருந்தால் போதும்
கட்டி அணைத்து விடலாம்தான்,
திருமலை நாயக்கர் மஹால் தூணை.
இத்தாலிய வினைஞருடன் மன்னன்
கட்டி முடித்த கனவு அரண்மனைத்
தூண் என்றால் ஓங்குதாங்காய்
வெள்ளையாய் ஒரு பிரம்மாண்டம்
பத்துப்பேர் கைகோத்து
வட்டமாய் நின்றபோது
ஒரு கையை வடக்கத்தி அம்மாவும்
மறுகையைக் கீழ்த்திசை இளைஞன்
ஒருவனும்
பற்றியபோது
நிகழ்ந்தது திருவுருமாற்றம்.
நான் நாமான ஆச்சரியம்.
நடுஉச்சியில் பொன்பரப்பி
நல்முத்து வண்ணக்கதிர் எழும்பிற்று.
மெய்யாகவே நான்
தசை எலும்பு உடல் கடந்தேன்.
உண்மையாகவே நான் உயிர்மெய்
எதுவென உணர்ந்தேன்.
காரைச் சுண்ணச் சாந்து
பூசியிருந்த
மதுரை மஹால்
ஆலமர்ச் செல்வர் போல
எனக்கு வாய்த்ததொரு
மௌன குரு.

வைகையில் வெள்ளம் வருமா?
வந்தது என்றார்கள்.
வேலையை விட்டுவிட்டு
வேடிக்கை பார்க்கப் போயிருந்தோம்.
வைகை அணை கடந்து
வழியெல்லாம் கிளைசேர்த்து
வெள்ளம் ஆர்ப்பரித்து
சுழற்றியடித்து
கரையழித்து
தரைப்பாலம் அமிழ்த்தி
வீறுகொண்ட வெண்குழம்பாய்
ஆறு. வயிறு பெருத்துப் போய்க் கொண்டிருந்தது.
ஹெலிகாப்டர்
விமானத்திலிருந்து
நூலேணி இறக்கி
நடுமண்டபத்தில் ஒண்டிக் கிடந்தவர்களைக்
காப்பாற்ற முனைந்திருந்தவர்கள் காவலர்கள்
ஆயிரக்கணக்கானோர் நாங்கள்
வேடிக்கை பார்த்திருந்தோம்.
ஒவ்வொருவராய் மேலேறி வந்தார்கள்.
ஒவ்வொருவராய் உயிர் பிழைத்தார்கள்.
ஒரேயொரு உருவம் மட்டும்
ஏணியிலே ஏற மறுத்து
ஏனையோருடன் வரமறுத்து
கூரையிலே இருந்தபடி
போராடிப் போராடி
நீரோடு. மீனோடு
கரைக்கு வராமலேயே
வைகை ஆற்றுக்குள் புதைந்து போனது.

ஏனாம்?
அம்மங்கை மேனியிலே
ஆடை இல்லை.
நாணத்தினால்
கைபோர்த்தி மானம் காத்தாள்
அந்த மதுரை மகள்.
வைகைத்தாய் வயிற்றுக்குள்
பிறந்தமேனிக் குழந்தையானாள்.
இறுதியாக,
கூப்பிய கை இரண்டும் ஒன்றாகி
நீருக்கு மேல் தெரிந்தது
செந்தீத் தவம் போலிருந்தது.
தண்ணீர் மேலே அன்றிலிருந்தே
எங்கே தாமரை மலர்களைக்
காண நேரிட்டாலும்
என்னையும் அறியாமல் என் விரல்கள்
சேலை நுனியை
இறுகப் பற்றிக் கொள்கின்றன.

பின்சேர்க்கை:
உதவிக்கு வந்த அந்த ஹெலிகாப்டரும்
பிறகு வெள்ளத்தில் விழுந்து புரண்டு
அடித்துச் செல்லப்பட்டது.
விமானி காப்பாற்றப்பட்டார்.

- செய்தி

வைகைப் பாலம் தாண்டினால்
வெள்ளை மணலின் ஊடாக
துணிவெளுப்பவரின் வாழ்க்கைப்பாடு
எப்போதும் மூட்டம் போட்டிருக்கும்
நம் வீட்டிற்கும்
ஒரு மூட்டைத் துணி
வெளுத்தபின் தலைச்சுமையாய் வந்திறங்கும்.
கஞ்சியிட்டு
பெட்டி போட்டு அவை அழகாய் வரும்.
மடிப்புக் கலையாமல்
அடுக்கியெடுத்து வைப்பார்
சலவைத் தொழிலாளி.
அம்மா நைந்த துணி பார்ப்பாள்
அப்பா நீலம் தோய்த்ததைச் சரி பார்ப்பார்
தங்கை புத்தகக் கணக்குப் பார்ப்பாள்
தம்பியோ அடுத்த அழுக்கை
அள்ளிப் போடுவான்
நட்புடன் சிரிப்பார் வண்ணார் கிருஷ்ணன்.

நானும் அவருடன் சேர்ந்து கதைத்து
ஒரு கப் காஃபி குடிப்போம்
கருவேலன் புகைமூட்ட வாசனையேற்று
மெலிதாய் மின்னும் வைகை மணல் துகளை
புடவையின் ஊடே
என் விரல்கள் மென்மையாக
வருடிப் பார்க்கும்.

கிருஷ்ணன்,
நான் மதுரை நீங்கிய பிறகும்
நீங்கள் என்போலொரு தோழமைப் பெண்ணை
நிச்சயம் சந்தித்திருப்பீர்கள்
இல்லையா?

திருக்கோயில் மண்டபக் கடைவரிசைக்குள்
தரிசனம் செய்ய நடப்பதை விட
அடிக்கடி எங்கள் சிறிய திருக்கூட்டம்
புதுமண்டபம் நோக்கியே விரைந்து செல்லும்.
அங்கே வண்ணவண்ணத் தொம்பைகள் தொங்கும்.
தையல்காரர்களும் பழைய துணிக்கிழிசல்களைக் கூட
புன்னகைத்துக் கொண்டே தைப்பார்கள்.
சிவப்பு, மஞ்சள், பச்சை, வெள்ளை, நீலத்
துண்டு துணுக்குத் துணிகளுக்குள்ளே
ஒளிந்திருக்கும்
அன்னப் பட்சிகளும் தோகை மயில்களும்
பஞ்சவர்ணக் கிளிகளும் ஆனைகளுடன்
பூக்கோலக் கரைகள்மீது
காட்சி தரும்படியான
மாயாஜாலம் புரியும் கைவித்தை
அவர்களுக்குத் தெரிந்திருந்தது.
அப்படியிருந்தும்
வரும்படி.
கொஞ்சம் கடன்-
கொஞ்சம் தள்ளுபடி.

கீழ்மண்டபக் கடைப் பலகைகளில்
வேறெங்கு தேடியும் கிடைக்காத
பெரிய எழுத்துப் புத்தகங்கள்
கட்டுக் கட்டாய் அடுக்கிக் கிடக்கும்
எட்டிப் பார்த்தால் பாத்திரக்கடை
இரும்புஇடுக்கி, பூந்திக் கரண்டி
தோசைச் சட்டுவம், இலுப்பச் சட்டி
வாணலி வகையறாக்கள்
தோதாக முகப்புகளிலேயே
வாங்கிச் செல்லலாம் மலிவாக
பாதாளக் கரண்டியும் இங்குதான் கிடைக்கும்.

இரட்டைக் கிளி, சலங்கைக் கழுத்துடன்
பித்தளைக் குடம் வாங்கத்
தெற்குத் தெரு மக்கள் கூடியிருப்பார்கள்.
கற்பூரத் தட்டு, தூபக்கால், பூசைப்பெட்டி
சீர்வரிசைத் தாம்பாளம்
வெத்திலைச் செல்லம்
சுண்ணாம்புக் குப்பி, முள்வாங்கி மற்றும்
எல்லாம் நிறுக்கும் பெரிய எடைத் தராசு,
பெயர் பொறித்துத் தரும் பூணூல் பத்தர்.
இத்தலக் காட்சிகளை எல்லாம் கண்டு கொண்டே
மையக்கூடம் உள்ளே சென்றால்
இரவெல்லாம் இலக்கியக் கூட்டம்.

அப்போது, அங்கே
தையல்காரர்
கவிதை வாசித்துக் கொண்டிருப்பார்.

புத்தகக் கடைக்காரர்
ஒலிபெருக்கியை
வாங்கிக் கட்டுவார்.
அரைவெளிச்சத்தில் வசதியாய்ச் சாய்ந்திருந்து
மதுரத்தமிழ் கேட்டிருப்பேன்.
அந்தத் தூணில் வடிவுற்றிருக்கும்
முற்காலக் கற்சிலையின்
இமை படபடக்கும்.
இருபக்கத்துப் பெருமீசை ஏறி இறங்கும்.
என் பக்கத்திலிருந்து
மல்லிகைப் பூத்தொடுக்கும்
பூக்கார அம்மாவின் இரசனையும்
மாசிப் பச்சை போல உயர்வாயிருக்கும்.
யாரோ தேநீரும் வறுக்கியும்
கொடுத்து விட்டுப் போவார்கள்.
காலிக் கண்ணாடிக் குவளைகள்
இருட்டிலும் உடையாமல் கடை திரும்பும்.
அரசாங்க ஒற்றர் இருவர்
பத்திரிகையாளர் போலக் குறிப்பெழுதிக்
கொண்டிருப்பார்கள்.
அவர்களுக்கும் சேர்த்தேதான்
தேநீர் தந்துவிட்டுப் போவார்கள்.

இலேசான முறுவலுடன்
எல்லாரும் வணங்கி விடைபெறும்போது
முன்வாசல் எண்ணெய்த் தீபங்கள்
சிவப்புக் குழம்பாக வார்த்து
செஞ்சாந்துப் பிழம்பு ஏற்றி
வெளிச்சத்திற்குப் பாதை காட்டிக் கொண்டிருக்கும்.

பஞ்சுத் திரி, விளக்கு எண்ணெய்
மஞ்சள், குங்குமம், கோலப்பொடி
தாழம்பூ, மரிக்கொழுந்து,
மல்லிகைப்பூ ரோஜா இதழ்
வாழைநார், கட்டுக்கயிறு, வண்ணக்கொடி
குங்கிலியம், கல்தூண்கள்,
பாண்டிய நாட்டுச் சிற்பங்கள்
மதுரைத் தமிழ் ஓசைகளுடன்
செம்மைசீர் சீற்றங்கள் உடன்கலந்து
எமது அனுபவத்தில் கவிதையாகி
இன்றளவும் இணைபிரியாது
நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன.

மண்டபம் என்றாலே எங்களுக்கு
எப்போதும் புதுமண்டபம்தான்.

மதுரைத் தல்லாகுளம்
அஞ்சல் முகவரியுடன்
மங்கம்மா ராணியின்
கோடை அரண்மனைப் படிகள்
காந்தியடிகளின் வரலாற்றுச்
சுவடுகள் சுமக்கும்.
எத்தனை ஆண்டுகள்
அந்த வளாகத்தையே
சபர்மதியாய் எண்ணி வளர்ந்திருப்பேன்?
சிறுகுடிலில் கண்வைத்து
குடை வேப்பமரத்தில் தலைவைத்து
தேசக் கனவுகளை
அந்த வாசல் மணலில் விதைத்திருப்பேன்?
திறந்தவெளிக் கலையரங்கில்
குறுகுறுவெனும் கற்றைப்புல் அடுக்குகளிலும்
சர்வோதயப் பாதயாத்திரை பழகியிருப்பேன்?

அங்கே,
வட்டத்தில் உட்கார்ந்திருந்தால்
சர்வசமயப் பிரார்த்தனை நேரம்.
சதுரத்தில் உட்கார்ந்தால்
ஹடயோகாசனப் பயிற்சி நேரம்.
தனித்தனியே அமர்ந்து கொண்டால்
எழுத்தாளர் பயிற்சிப் பட்டறை.
புத்தகங்கள், புத்தாக்கம் பெற்று வரும்.
வெண்ணிறக் கதராடைப் பெரியவர்கள்
கைராட்டையைச் சுழற்றிக் கொண்டிருப்பார்கள்.

அருகிருக்கும் தமுக்கம் மைதானத்தில்
இராட்சத ராட்டினங்கள் கூச்சலிடும்
பொருட்காட்சிகளும் இடையிடையே
போட்டிபோட்ட காலம் அது.
காந்தி நினைவு நிதி முற்றத்தில்
சாந்தி நிலவ வேண்டும் பாடிக்கொண்டு
சத்திய சோதனை படித்திருப்போம்.
அந்த மாதிரியான ஒரு பின்மாலைப் பொழுதில்
எங்களில் சிலபேர் கேட்டோம்,
'காந்திஜியின் வருகைக்குமுன்
இந்தியாவின் விடுதலைக்கு
உரமிட்ட வீரர்கள் உண்டுதானே?
புரட்சியாளர்தம் வரலாறும்
சொல்லப்பட வேண்டாமா?'
என்றபோது
கனத்த கதர்த்திரையாய்
மௌனம் அசைவின்றி இறங்கியது.

இருந்தாலும், அடுத்தூர்ந்த ஆண்டுகளில்
தென்னாட்டின்
ஒரே காந்தி அருங்காட்சியகத்தின்
நெடுஞ்சுவர்களில்
காந்தியடிகளின் வருகைக்கு முன்
விடுதலை வேள்வி தீட்டப்பட்டது.

பிரபுல்ல ஸஹி, மதன்லால் திங்க்ரா
இராஜகுரு, சுகதேவ், பகத்சிங்
அரவிந்தகோஷ் வரலாறுகளும்
அருகருகே எழுதப்பட்டன.
அதுவே எனது
முதல்மொழிபெயர்ப்புப்
பணியாயிற்று.
யாரும் அறிய மாட்டார்.
எனது நகக் கண்களும் அழுத சோகம்.
அந்த மொழிகளுக்குள்
கூட்டு விடுதலைச் சித்தாந்தமும்
நாட்டு விடுதலையில் இன்னுயிர் ஈந்த
வீர இளைஞர்களே நன்றி எனும்
அதிர்வுகளும் சேர்ந்தே வரையப்பட்டன.
அதில்,
ஓரெழுத்து உயிர்மூச்சேனும்
என்னுடையதென தோழர்களே
நீங்கள் என்றேனும்
உவந்தேற்கலாம்.

ஒரு பங்கிக் குடியிருப்பு.
தல்லாகுளத்திற்குள்ளேயே
மனிதக் கழிவள்ளும் தோட்டிகளின் வாழ்விடம்.
மகாத்மாவின் திருவடிகளைத் தேடிப் போனோம்
ஊருக்கு உழைப்பதே யோகம்
பாரதி சொற்களை அணிந்து கொண்ட
அணில்களாம் தொண்டர்குழாம்.
விடியாத பொழுதுகளிலேயே
எழுந்து போயிருப்பார்கள் தந்தையும் தாயும்.
மலம் அள்ளும் பணி செய்ய
மதுரை மாநகராட்சியின் சீருடை ஊழியர்கள்
அவர்கள்.
ஆனால் ஊழியரின்
குடியிருப்பில் கழிப்பிட வசதி இல்லை
அதனாலேயே பன்றி வளர்த்தார்கள்.

அவர்கள் வீட்டுத் திண்ணைகளில்
பகல்முழுவதும் அசைவின்றித் தூங்கிக்
கிடந்தனர் மழலைப் பிஞ்சுகள்
குழந்தைகளின் நாவிலே
கலைமகள் எந்த எழுத்தும் எழுதவில்லை
பெற்றவர்களே அபினி பூசிச் சென்றார்கள்.
பாலுக்கும் எழுந்து அழாத பிள்ளைகள்
பிறகு ஞானம் பிறப்பதெப்படி?

அஞ்ஞானக் கூடாயிருந்தது குடியிருப்பு
விஞ்ஞான யுகத்திலும் இப்படியும்
விமோசனமின்றி வாழ்ந்தனர் மக்கள்
வெளியுலகம் அறியாமல்
முடக்கிப் போட்டிருந்தது மூத்த சாதிகள்.
ஏதேனும் நாம் செயல்வழி செய்தாக வேண்டும்.
துடித்தெழுந்தோம் ஒரு சிலர்
கஸ்தூர்பா அம்மையே வந்தது போல
கிறிஸ்துவப் பெண்ணொருவர் முன்வந்தார்
கைதொழுதோம்
சாதியத் தொழுநோயைத் தீர்ப்பவராகத்
தொட்டில் பள்ளியை முதலில் தொடங்கினோம்.

மரியாதை மிகுந்த
மரக்கிளை ஏணைகளிலே மழலையரை
உறங்க வைத்தோம்.
அழுதால் தண்ணீர் கொடுத்தோம்.
அவ்வப்போது தண்ணீர்ப் பால் கொடுத்தோம்.
தூங்காத செல்லங்களுக்கு
வேப்பமரம் தூளியாட்டி வருடி விடும்.
காகங்கள், வடைப்பாட்டி கதைசொல்லும்.
பசுங்கிளிகள் பூஞ்சிறகு வித்தை காட்டும்.
எங்கள் திறந்தவெளிப் பள்ளியின்
நோக்கமே
பிள்ளைகளை நிம்மதியாய்
இயல்பாகக் கண்வளரச் செய்வதுதான்.
கண்மலர்ந்து எழுந்தபின்
இயல்பாகத் தவழவிடுவதுதான்.
பிறகு நடைபயில உதவுவதுதான்.

அப்போதும் தெருவோரம்
வருவோரும் போவோரும்
சிரிக்கவே செய்தார்கள்.
சளைக்காமல் தாலாட்டுப் பாட்டெழுதிச்
சமூகவுணர்ச்சிகளையும் பதிவு செய்து
வீதிகளில் சுவரொட்டித் தட்டிகள் வைத்தோம்.
தொட்டில் பள்ளிகளைத் தத்தெடுத்தது
தமிழ்நாடு ஹரிஜன் சேவக் சங்கம்
அழுத குழந்தைகளுக்கு அமுதே கிடைத்தது.

இரயிலடிகளுக்கும்
இரயில்வே குடியிருப்புகளுக்கும் எனக்கும்
நெருங்கிய உறவுண்டு.
எம் பாட்டனார் இரயில்வே ஊழியர்
நான் பிறந்ததும் இரயில்வே குடியிருப்பில்
சிறுவயதில் படித்ததும்
தண்டவாளங்களைக் கடந்து சென்றுதான்.
இரயில் புகை படிந்த
வீடுகளிலேயே என் விடுமுறைகள்
ஆடிப்பாடிச் சென்றுள்ளன
என்பதாலும்
மறக்க முடியாது
மதுரைப் புகைவண்டிப் பெருநிலையம்.
இராமேஸ்வரம் புண்ணிய நீராடவும்
திருச்செந்தூர்க் கடற்கரைத் தரிசனத்திற்கும்
குமுளி, கொடைக்கானல் குளுமைக்கும்
குற்றாலம், தென்காசி அனுபவத்திற்கும்
திருநெல்வேலி, திருவனந்தபுரம்,
விருதுநகர், திருவில்லிபுத்தூர், சிவகாசி,
தூத்துக்குடி வழித்தடங்கள் அனைத்திற்கும்
மதுரைதான் மாபெரும் சந்திப்பு.

கரிப்புகையும் நீராவியும் தொடர்வண்டிகளும்
இருப்புப் பாதைகளில் கடக்கும் சத்தங்களும்
பயணிகளின் மூட்டை முடிச்சுகளுடன்
இரைச்சலும் நிரம்பியிருக்கும்
நடைபாதைகளும்,
கீழும் மேலும் கிளைபிரியும் மேம்பாலங்களும்,
வண்ண வண்ண விளம்பரத் தட்டிகளும்,

வண்டி விவரம் சொல்லும் ஒலிபெருக்கிகளும்,
வெள்ளைச் சீருடை அதிகாரிகளும்
சுமைதூக்கும் சீருடைப் போர்ட்டர்களும்
பலவகை உணவு விற்பனை செய்வோரும்,
புதிய உலகத்தை
இதோ, இதோ என்று காட்டிய
அந்த இந்தியத் தளத்தில்தான்
நானும் நின்றிருந்தேன் ஒரு மாலையில்.

மதுரை சந்திப்பு,
ஒரு தனிநகரம் போலிருந்தது.
மதுரை மல்லி
ஸ்ரீவில்லிபுத்தூர் பால்கோவா
திருச்செந்தூர் சில்லுக்கருப்பட்டி
கொடைரோடு கொடிமுந்திரி
மலைநாட்டு வாழைப்பழம் பேரிக்காய்
உள்ளூர் இட்லி தோசை சுக்குக் காப்பி
வழக்கமான தேநீர் பால்காப்பி என்று
விரும்பியதை வழங்கிக் கொண்டிருந்தனர்
இராஜகளையுடன் தலைச்சுமை வியாபாரிகள்.
வரலாற்றுச் சிறப்புமிக்க
மதுரை நிலையத்தின் நுழைவாயில் அருகே
ஒரு நினைவுப் பலகை
திருப்புமுனை நிகழ்வொன்றைப் பதிவு
செய்துள்ளது.
'இம்மதுரை மண்ணில்தான்
மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி
மகாத்மா ஆனார்.
தமிழக உழவரின் எளிய ஓராடை
தமக்கு இனி உகந்த ஆடையென
இங்குதான் அவர் உறுதியேற்றார்.'

எளிமை,
தனக்கொரு மகுடம் சூட்டிக்கொண்டது
இம்மதுரை மூதூரில்தான்.
பலகை எழுத்தைப் பலமுறை
வாசித்துப் பார்த்தேன்.
அந்த ஏற்றமிகு எளிமை
என்னையும் கருணையுடன் சுவீகரிக்க
விண்ணப்பம் செய்து கொண்டேன்.
அன்றுபோலவே,
இன்றளவும் புகைவண்டிச் சக்கரம்
இசைத்துக் கொண்டே தேசம் சுற்றுகிறது.

என் எளிமைப் பாட்டும்
எந்த நாளும் புவிச்சக்கரம் ஏறி
நிற்காமல் பரவிக் கொண்டேயிருக்கிறது.

மதுரையில்தான் சங்கப் புலவர்களுக்கும்
மேடான திண்ணைமீது கோவில்சபை
இருக்கிறது.
சின்னஞ்சிறு மாடத்தினுள்
சங்கரனார் விஸ்வரூபத்திலும்
தமிழன்னை இறைவியாகவும்
ஆசிகூறி நிற்பார்கள்.
நான் வணங்கிச் செல்லும்போதெல்லாம்
ஆங்கே இயற்கை நறுமணம் வீசும்
தப்பாமல்,
நக்கீரர் சிரிப்பொலியும் உடன் கேட்கும்.
முக்குறுணிப் பிள்ளையாரின்
முன்னிற்கும்போது அடியாரெல்லாம்
வாமனராய்த் தெரிவோம்.
அதனாலேயே
ஆணவம் அழிகிறதென்று
குறிப்பெழுதி வைத்தேன் ஒருநாள்.

தலவிருட்சம், கடம்பமரம்
பசுமையிழந்து விட்டதால்
வெள்ளிக் கவசம் அணிந்திருந்தது.
அதனருகே தாழ்வாரத்துத் தூணில்
யானையும் மாடும்
இரண்டும் ஒன்றாய்
எதிரெதிர் நிற்பதுபோல
ஒரு புடைப்புச் சிற்பம்
மாடு முகம் மறைத்தால்

தும்பிக்கை யானை,
யானை முகம் மறைத்தால்
காது நிமிர்த்திய மாடு முன்தோன்றும்.
வருவோர், போவோர் நின்று இருந்து
சிற்ப விளையாட்டை இரசித்திருந்த
ஒரு சிறுமாலைப் பொழுது.
துர்க்கை சிவப்பாடையும்
எலுமிச்சை மாலையுமாய்
அரளிப் பூக்களிடையே
கருப்பாயியாகக் காட்சி தந்திருந்தாள்.
கீழே கருவறையில் சுந்தரமுனி
ஜீவகளையுடன் என்னை
நுணுகி நுணுகிப் பார்த்தது போலிருந்தது.
உள்சக்கரங்கள் ஒவ்வொன்றாக
திகுதிகு என்று மேலே விசும்பைத் தேடின.
விசுவரூபத்தை உள்ளடக்கி
கடம்ப மரத்தடியில் மௌனியானேன்.
தியான நிலையிலேயே மையம் கொண்டேன்.

அந்த சுகந்த நேரத்தில்
எங்கிருந்து வருகுவதோ
என்னைச் சுற்றி வரும் மூங்கில் இசை?
சக்தி குழல் வாசிப்பாளா?
வாசித்தாள்.
வானிசையை வாணி வடித்தெடுத்தாளா?
வடித்தெடுத்தாள்.
தேனிசையை என் செவிக்குள்
பாய்ச்சி விட்டாள்.
இசையலைகளில் தெப்பமானேன்.
இலையானேன் இறகானேன்
ஒரு கணத்தில்,
வேய்ங்குழல் சுரவரிசை மிதந்து சென்றது.

தேவராகம் என்னைக் கடந்து சென்றது.
பேழைக்குள் என் உயிர்க்கிளியையும்
தொட்டெடுத்துச் சென்றது.
அன்னை துணையுடன்
என் புறக்கண் திறந்து நோக்கினேன்.
சடைமுடி தரித்த அக்கினிப் பிழம்பு
செம்மண் நிறத்தில் நீண்ட அங்கி
அண்ணாமலையே பெயர்ந்தெழுந்து
வந்தாற்போல,
அடிமுடி தேடும்படியாக நின்றார் நெடிதே
சித்தர் ஒருவர்,
புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருந்தார்.
பரவசம் அங்கு உருகி ஓடிக் கொண்டிருந்தது.
நான் பசுங்கன்றானேன்.
சேயானேன். இடைச்சியானேன்.
குழலானேன். காற்றிலொரு துகளானேன்.
இசைமாதா உருவெடுத்து நடந்து சென்றாள்.
பிச்சியைப் போல் பின் தொடர்ந்தேன்.
மூத்த அடியார் ஒருவர் சிவப்பழமாய்
முன்மண்டபத்தில் நின்றவாறு
வருகின்ற அடியவர்க்கு
மயிலிறகு விசிறி சேவை
செய்து கொண்டிருந்தார்.
விதானங்கள் கொடிவிளக்கு
ஒளிபெறத் தொடங்கியபோது
கண்ணில் பட்டது மயிலிறகு மட்டுமே.
குயிலிசையைக் கேளாத செவிகள் இரண்டும்
கோவிலைச் சுற்றிச் சுற்றி
நடைசாத்தும்வரை அலைந்து திரிந்தன.
இப்படியாகக் கோவிலில் குயில் மயிலாச்சு.

நான்மாடக் கூடலில்
நான் குழல்முனியைத்
தேடித் தேடி இளைத்தேன்.
அன்று மாலை.
இசைச் சித்தர்
என் ஜீவனில் வளர்த்தெடுத்த
பண்ணிசைத் தீ இன்றும்
பரசிவ வெள்ளமெனப் பொழிகிறது.
ஆலிலை அரசிலை போல மிதந்திடும்
ஆலவாய் அனுபவங்கள்
எப்போதும் பசுமைக் கனலாய்
எனக்குள் மீன்கொடி ஏற்றுகின்றன.



கொடி விளக்கு

எண்கள் - நினைவுகள் - பதிவுகள்

தலைச்சன் மகள் இவள்
தனது பிறப்பிலேயே
எண் 1
சாசுவதமாக்கிக் கொண்டாள்.

எண் 5
உடன் பிறப்புகளுடன்
இவளது பங்கு ஸ்தானமாகியது.

மறக்க முடியாத எண் 29.
அது ஒரு கறுப்பு நாள்.
அப்பா இறந்துபோன நாளின்
கூட்டுத் தொகை 11
2, 11, 29 எந்த மாதத்திலும்
எந்த நாள்காட்டியிலும்
எதிர்ப்பட்டாலே போதும்
கதர்த்துணியால் போர்த்தப்பட்ட
அப்பாவின் கவலை முகமும்
பேரப்பிள்ளைகளின் கதறலும் கலந்து
பெரிய வீட்டின் வேப்ப மரத்தடியில்
எழுதி வைக்கப்பட்ட மரக்கதவு
எண்களாக மாறி நீடிக்கும்.

1/2 எனும் வடிவத்தில் கீழ்க்கணக்கு
ஒன்றின்கீழ் இரண்டு.
அதைக் கண்டாலே
குழந்தை ஒன்றும் அதைத் தாங்கும்
கணவன், மனைவி இருவருமாக

சிறுகுடும்பம் ஞாபகத்தில் நிற்கும்.
உயர்நிலைப் பள்ளியில் கிடைத்த
1/2 சம்பளச் சலுகை
நகராட்சியின் கருணை.
எங்கள் பெருங்குடும்பத்தின்
பெண்கல்விச் சுமையைக்
குறைத்தது உண்மை.

100 என்றாலே இவளுக்கொரு கர்வம்.
மகாகவி பாரதியின் நூற்றாண்டைச்
சிலைநாட்டி, மலர் வெளியிட்டுக்
கொண்டாடிய கொங்கு நாட்டு
அவினாசித் தேர்போல
நிமிர்ந்த நினைவுகள்.

ஆயிரம், இலட்சம், கோடி என்றும்
மில்லியன், பில்லியன், ஜில்லியன் என்றும்
பேசுகின்றது சந்தைப் பொருளாதாரம்.

அந்நிய மொழியோ
நம் மொழியோ
எண்களை வரிவடிவில் பார்க்கும்போது
பகீரென்கிறது.
அவை தேசக்கடனாக
நீளும்போது மேலும் தீ கொப்பளிக்கின்றது.
யூரோக்களையும்
டாலர்களையும் விரல்
எழுதித் தேயும் பொழுதெல்லாம்
மூட்டுக் காய்ச்சல்
முடக்கிப் போடுகிறது.

நமது இளமைக்கால வாய்பாடுகள்
எளிதானவை அழகானவை
இன்றைய கணக்குகளோ சிக்கலானவை
சிக்கறுத்தாலும் பின்னமானவை.

என் மனசுக்கு இதமான
எண்களைத் தேடி
எட்டுகளைப் போல
ஒன்றினுள் ஒன்றாய்..
முடிவற்று எழுதிக்கொண்டே
செல்கிறேன்... 8 8 8 8
என்னுடன்
சமக்கோடு = போட வந்தவர்கள்
எங்கே போய்விட்டார்கள்?

காலமும் காலமும் எல்லா நேரமும்
கணக்கிட்டுக் கொண்டே இருக்கின்றன.
மிக எளிதானதும்
விளங்காததும்
வழக்கம்போலச்
சுழியன்கள்தான்
0 எனும் பாழ்.

கரைகளுக்குள்ளே...

ஆறுகள் அடிக்கடி என்னை
உறக்கத்திலிருந்து எழுப்பி விடுகின்றன.
தாமிரபரணி என்றால்
சிந்துபூந்துறை
முருகன் திருக்கோவில்
விடுமுறை நீராடல்
தாத்தாவும் பாட்டியுமாய்
எனக்கங்கே
இருகரைகள்

காவிரிக்கால்
அய்யன் வாய்க்கால்
அத்தையும் சித்தியும்
தங்கையும் தோழியும்
மதகடியும் படித்துறையுமாய்
தெருவெல்லாம் துளிகள் சேர்க்கும்
கஸ்தூரி மஞ்சள்
சந்தன சோப்புக் கலந்த
கொஞ்சம் வெட்கம்.

வைகை என்றால்
வெள்ளி மணல் பரப்பு
மேகம் போல
தரையில் கிடக்கும்
ஊற்றுக் குழிகள்
கை அள்ளும் புண்ணிய நீரும்

மண்டபக் காற்றும்
அழகர் குதிரையும்
கரைமேல் தங்கை மீனாளும்
சங்கத் தமிழில்
புலவர் இசைக்கும்
இலக்கியச் சோலையும்
ஒரு மதுரைச் சங்கமம்.
இளமைத் தோழமை வேள்வித்தீ
விழித்தெழுந்த தேவ கணங்கள்
சேவைத் தளங்கள் களங்கள்
புரட்சித் தடங்கள்
கடலில் கலக்காத கன்னி ஆறு
எனக்கொரு பரம்பரைச் சொத்து.

நொய்யல் ஆற்றில்
தென்னங் கீற்றால் எத்தனை படகுகள்
தேசாந்திரம் போயிருக்கும்?
கனவுகளைக் கிள்ளிப்
பூக்களைத் தூவியிருக்கும்
கைகளின் மேடுகள்
எத்தனை பேசியிருக்கும்?
நடந்து நடந்து தேய்ந்த நகங்கள்
எழுதி எழுதி வளைந்த விரல்கள்
முள் பதிந்த புன்சிரிப்புடன்
புதையுண்டிருப்பதை
இன்றும் தோண்டலாம்.
ஆய்வுகள் செய்தால்
செம்போ, இரும்போ கிடைக்கலாம்.
கூடவே,
எங்கள் கடிதங்களின்
முகவரிகளும், குருஆசிகளும்

தமிழில் ததும்பியிருக்கும்
அழகும் இளமையும்
நிச்சயம் கிடைக்கும்
பேரூரில்
கரையோரம் நடக்கும்போது
பார்த்தால் சொல்லுங்கள்.

வராக நதியும் சங்கராபரணியும்
மண்ணுக்கடியில் பொன்னையேற்றி
பூம்பாறையைப் பொடித்து
வளர்த்தெடுக்கும் குழந்தையாறு
செஞ்சியாறு ஆரோவில் கிளையாறு
எம் பள்ளிக்குள் வந்து செல்லும்
சித்தர் ஆறு
இதுவே இப்போது எமது
கெடிலக் கொடி
பாலாறு, சேயாறு
பெண்ணையாறு, அரசலாறு
குடமுருட்டி, சுண்ணாம்பாறு
தொட்டெடுத்து வளர்த்து விடும்
அன்னையாறு
எல்லா
ஆறுகளும்
இரு கரைகளுக்குள்ளும்
நம்மை இருத்தி வைத்துக் கொள்கின்றன.
என் சொந்த நடை
இக்கரைகளுக்குள்ளேயே
செழுமையுறுகிறது
என்பதே வாழ்க்கைப் புதிர்.

பாவம் முச்சந்தி நாய்கள்

ஒரு மார்கழிப் பின்மாலை
திருக்கார்த்திகைக்குப் பின்னும்
வங்கக் கடல் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம்
மழை பெய்து ஓய்ந்ததும்
மண் குளிர்ந்திருந்தது.
குழைந்திருந்தது.
கருவடிக்குப்பம்-
சித்தானந்தர் ஜீவசமாதி
சங்கரதாஸ் சுவாமிகள் நினைவிடம்,
தம்பியின் அஸ்திமயானம்
உட்பட்ட
ஒரு மௌன கிராமியத்தைக் கலைத்து விட்டு
நகரியச் சத்தங்களை
ஒப்பனை செய்து கொண்டு
சோடியம் வெளிச்சத்தில்
செயற்கையாய் மலர்ந்து கொண்டிருந்தது.
மூன்று பெரும் சாலைகளின் சந்திப்பில்
விளக்கடித் திடலில்
வண்டிகளின் பின்புலத்துடன்
இருந்தும், குனிந்தும், சாய்ந்தும்
கதைத்துக் கொண்டிருந்தனர் இளைஞர்கள்.
ஓரிருவர் குரைப்பதுபோலத்
தள்ளாடித் தள்ளாடி
உரையாடிக் கொண்டிருந்தனர்.

காலடியில் சில தெருநாய்கள்
மனிதர்களின் அசைவுகளை
வேடிக்கை பார்த்துக் கிடந்தன.
தங்களைப் பற்றிய சிந்தனையின்றி
ஒற்றை ஒருநாய் பழுப்பு நிறம்
ஒரு காதை மட்டும் நிமிர்த்திப் பார்த்தது.
'மனிதரின் குரைப்பு
நாய்களைப் பிரதிபலித்திருக்கலாம்'
என்றேன் பயணித்தபடி.
தடுமாறினார் வண்டியோட்டி
திரும்பிப் பார்த்து.

மனப்பூக்கள்

பட்டினத்துச் சந்து முடுக்குகளில்
பலப்பல குறுக்குத் தெருக்கள்.
பார்வையாளராய்
நானும் வண்டியும்
சுவரோரம் நிறுத்தப்பட்டிருந்தோம்.

கார்த்திகைக்கு முன் புயல்மழை.
ஆர்ப்பரித்துப் பெய்து முடித்திருந்த
ஒரு முற்பகல் பொழுது
பிளாட்டினம் போல
வெள்ளியாய் இருந்தது.
இல்லத் தலைவியர்
சொந்த வீட்டுப் பொறுப்புகளை ஏற்று
அவதிகளை முகத்தில் காட்டாமல்
அமைதியில் பணி இயற்றிக் கொண்டிருந்தனர்.

மனசாட்சியைச் சேர்த்துக் குழைத்து
மாநகராட்சி புதைத்து விட்டிருந்த
அடிகுழாயில்
தண்ணீரை வார்த்துக் கொண்டிருந்தாள்
அழகிய இளம்அம்மணி ஒருத்தி.
தொகுப்பு வீட்டு ஒட்டுத் திண்ணையின்கீழ்
வாசல் விளிம்பில் நிறைந்து தளும்பிய
வீட்டுச் சாக்கடை நீரை
கைமுறத்தால் வாரி எடுத்து
சிவப்புப் பிளாஸ்டிக் வாளியில்
வழிய நிரப்பி
தள்ளிப்போய் வீதியின் நடுவில்
ஊற்றித் திரும்பினாள்.

இரவு அங்கிக்குள் பகலையும் பழகிய
அடுத்த வீட்டுப் பெண்மணி ஒருத்தி.
பள்ளிக் குழந்தையைப் போல
அவள் பின்னாலேயே
தொட்டு ஓடி வந்தது
புதிய நீர்த்தாரை.

ஈரக்காற்றில் அவிந்திருந்த சதுப்புச் சருகுகளை
கால்பரப்பிப் பெருக்கிக் கொண்டிருந்தாள்
பாவாடைச் சட்டைப் பெண்ணொருத்தி.
'பரட், பரட்' என்ற
துடைப்பச் சந்தப் பின்னணியில்
கருத்தாய்த்
தெருக்காட்சிகளைப் பார்வையால்
படம் பிடித்துக் கொண்டிருந்தேன்.
பேராசிரியை நான் எந்திரமாய்
யாரையும் எவ்விதமாகவும்
பாதிக்காமல்.

நகர்ப்புறத்து மழைக்கால வீச்சமும்
சுதந்திர ஈக்களும்,
மூக்கு நீண்ட கொசுக்களும்
அழுகல் கந்தக நாற்றமும் கலந்து
எரிச்சலூட்டிக் கொண்டிருந்த
இப்பொழுதில்
இனம் விளங்காது
யார்மீதோ
கோபம் கோபமாய்க் கொந்தளித்தது.
என்மீதும் சேர்த்தேதான்.

ஏதோ ஒரு கையாலாகாத்தனம்
குபுக்கென்று அந்நியக்கோலா
விளம்பரப்படம் போல
அர்த்தமில்லாத அலம்பலுடன்
மேலேறியது.

எனது வண்டிக் கதவினை ஒட்டி
தெருச்சகதியை மெதுவாகத் தாண்டி
சேலை மடிப்பலைகளை
இலேசாகத் தூக்கிக் கட்டி
கையில் கற்றைப் பச்சைத் தழையுடன்
நாயகமாய் நடந்து வந்தாள்
நடுவயதுக் கட்டுக்கழுத்தி
பெரிய வட்டப் பொட்டுடன்
வெற்றிலை மென்று கொண்டு...

அத்தனை பெண்களும்
கைவேலைகளைக்
கிடப்பில் போட்டு விட்டு
கிட்டே ஓடிவந்து
கட்டிப் பிடித்து
அந்த அம்மாவை
அப்படியே அள்ளிக் கொண்டார்கள்.
என்ன தழை இது?
ஆவலுடன் எட்டிப் பார்த்தேன்.

அக்கினித் தழை எனும்
மருதோன்றிதான்
கொப்பும் கிளையுமாய்

பச்சைப் பசேலென்று
விரல் நுனி வடிவில்
நரம்பு இலைகள்
மகளிரைச் சுண்டி இழுத்தன.

அந்த அம்மாவின்
நெற்றிக் குங்குமம் போல
நாளைக் காலை
இவர்களின் கைகளில்
நிச்சயமாய்ச்
சிவப்புத் தீ பற்றியிருக்கும்.
காந்தள் மலர்களுடன்
முரட்டு விரல்கள்
தொழில் யுகக்
கவிதை பேசிக் கொண்டிருக்கும்.

வீட்டு வேலை விரல்களுக்கும்
அழகிய ஓவியம்
இயற்கை வரையும் வர்ண இதயங்கள்
என்று எண்ணிய மாத்திரம்
என்றோ பிரபஞ்ச இந்திய அழகி
விளம்பரம் கூறிய
செயற்கை வர்ணப் பூச்சினை எண்ணி,
பூசிக் கொள்ளாத போதும்
அனிச்சையாக
எனது ஒருகை நகத்தால்
மறுகை நகத்தைச்
சுரண்டிச் சுரண்டி
இல்லாத ஒன்றையும் இருப்பதாய் எண்ணிச்
சுரண்டிச் சுரண்டிச்
சுத்தம் செய்து கொள்ள ஆரம்பித்தேன்.

கர்வ பங்கம்

எழுபதாண்டுகளுக்கும் முன்
இவள் பார்ப்பனர் குலத்தில்
அக்கிரஹாரத்து வீட்டில் பிறந்தாள்.
நாற்பதாண்டுகள் புதின வாகனத்தில்
பாரதம் முழுவதும் சுற்றி வந்தாள்
பத்தாண்டுகள்
ஒதுக்குப் புறச்சேரியில்
சமூகச் சேவகியெனப் பதிவானாள்.
பல ஆண்டுகள்
இருள் பள்ளத்துள்
கிடப்போரை எழுப்பிவிட
அக்னிமை கொண்டு
எழுதிக் குவித்தவள் இவளேதான்
பெயர் புகழ் பொழிவென
பல்கலைக்கழக மேசைகளில்
ஏடுகளாயின இவள் படைப்புகள்தாம்.
இவள் உழைப்போரின்
உரிமைக்குரலாகவே ஒலித்திருந்தாள்.
இப்பெண் தலீத்தை மூப்பு அசைத்துப் போட்டது.

ஒதுங்க இடமின்றி
நார்க்கட்டிலில்
ஊர் மூலையில் இப்போது
நாடோடிகளின் கூடாரத்தில்
படித்துக் கொண்டே
சிரித்தும். அழுதும் குறிப்பெடுத்தபடி
வலிகளை வெல்லுகிறாள் போல.
அவள் இரசிகர் நாங்கள்
பழக்கூடைகளைப் போல!

பரிசுகளுடன்
பார்க்கப் போயிருந்தோம்
'போதும் விடுங்கள்
சப்பரம் வைக்கும்போது
கிட்ட வராதீர்கள்
யாரும் இங்கே.
நாங்கள் ஊரோடிகள்
நாடுமாறிகள்
காடு தாண்டிகள்
எங்களுக்கும்
சூரிய சாமி உண்டு.
மேகப் பந்தல் உண்டு.
வெட்டவெளியில் சாவு
புதிதில்லை எங்களுக்கு.
எங்கள் பூக்களும்
கறிக்குழம்பு மணக்கும்
நாங்கள் கொட்டும் பறையும்
ஆதிமொழி பேசும்.
எங்கள் நிழல் ஆசனங்களை
அதிகாரங்களால்
அழுக்குப் பண்ணி விடாதீர்கள்
எழுத்தம்மாளை
நாங்களே பார்த்துக் கொள்கிறோம்
போய் வாருங்கள்'

சிறகுகள் முரிந்த நிலையில்
திரும்பியவை
எமது கனத்த பைகளும்
ஆய்வு நூல்களும்
....
ஆதிக்க கர்வங்களுமே.

ஆகஸ்டு - 14

சாலை போன்ற ஓடைத் தடத்தினுள்
சரியும் வெளிவாசல் கதவுகளைத்
திறக்க மனம் வைத்தேன்.
காலைத் தினசரிப் பத்திரிகை
நாளை
சுதந்திரம் - 60 என்றது.

எமது காட்டுப் பாதையில்
விடியும் படலத்தினூடே
பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியிலும்
வாழ்ந்திருந்த அடையாளங்களுடன்
அம்மை ஒருத்தி பருத்தித் துகள் போல
கடந்து சென்றாள்.
ஒரு கையில் தேய்ந்த
தென்னை அலவுத் துடைப்பம்
மறுகையில் மண்கரையுடன் கோணிப்பை
சற்றே கோணியிருந்த கோணல் முதுகு
இருந்தும் நிமிர்ந்தே நடந்து சென்றாள்,
ஒரு யோகியைப் போல.

பொட்டில்லை, பூவில்லை
வாசனைப் பூச்சில்லை
வாயில் வெற்றிலைச் சாறுமில்லை.
அரசாங்கம் விநியோகித்திருந்த
அசட்டுநிறச் சேலை மேனி சுற்றியிருந்தது.

அளவே பொருந்தாத
ஏதோ ஒரு மேல் சட்டையுடன்
ஆளரவமற்ற வேளையிலே
அந்நியமாய்த் தெரிந்தாள்
அந்த நாள் மனுஷி.
எண்ணெய்ப் பசை
மினுமினுப்பில்லாத
கோவில் சிலையை ஒத்திருந்தாள்.
கூரிய பார்வையை விட
படபடத்த பட்டுப்பூச்சி
மூக்கு நுனிதான் உணர்த்துகிறது
துளைகளுடன் நுகர்ந்து செல்வதாக,

நகர்ந்து சற்றே நின்றாள்.
பரபரவென்று இயங்கினாள்.
பம்பரமெனச் சுற்றி வந்தாள்.
ஓடைத் தெருவில் வாசல் போல்
பெருக்கிக் கூட்டி வைத்தாள்.

பழுத்துக் கிடந்த வேப்பம்பழங்களையும்
அழுகித் தெறித்துக் கிடந்த கொட்டைகளையும்
குடிசை வாசலில் ஆறப்போட்டால்
நாளைக்குக் கிடைக்கும்
படிக்கு இரண்டு ரூபாய்
நம்பிக்கை
வயிற்றில் சோறாக
கொதிகொதித்திருக்க வேண்டும்.
மூட்டை கட்டிப் புறப்பட்டாள்.

நாளை நான்
தேசியக் கொடியேற்றும்போது
மூப்புற்ற கிராமிய பாரத தேவியின்
ஒட்டிய வயிறும்
காய்ந்த கண்களும் பரட்டைத் தலையும்
பழுத்த வேப்பங்கொட்டைகளும்தானே
மையச் சக்கரத்தின் கோடாய் அலையும்.
நிமிர்ந்து
கொடிவணக்கம் செய்யும்போது
பூக்கள் பொழியுமே
அப்போது
தலையை எங்கே
வைத்துக் கொள்வதென்று
ஆகஸ்டு - 14
இன்றே தவிக்கிறேன்.

வாக்கு

தப்பாட்டம்
குத்தாட்டம்
தெருமுனையில்
சாவுக்கா
சாமிக்கா
கூர்ந்து கேட்கும்முன்
கரகரத்த பிரச்சாரச் சத்தம்
கலைத்துப் போடுகிறது
களைத்துப் போகிறது
தெருக்கோலம்.
யாருக்கு நமது அச்சமற்ற
வாக்கு?
எல்லாம் கலந்தபோது
செவிப்புலன் தேடிற்று
அமைதிக்கு முன்வரும் ஒரு
சத்தமின்மையை.
தலைக்குமேல்
வீட்டுப்பல்லி
பஞ்சாங்கக்கிழமை பேசலாம். பலன்,
எச்சமிடலாம்.
இடம் மாறினேன்.
உள்ளிருந்த மேல் அமைதியும்
வெளியேறிப் போயிற்று.
செய்க தவம்.
செய்க தவம்.

செஞ்சிலுவை

போராட்டத்தில்
ஊன்றப்பட்ட கொடிகளும்
உயர்த்திய கரங்களும்
முழுவதுமாக
வீடு திரும்பிவிடவில்லை.

பரிசாக இரத்தக் காயங்கள்
கூடவே வந்தன.
இருந்தும் புன்னகை
சிவப்புப் பூவாயிருந்தது.
களைத்த முகத்துடன்
கனத்த அழுக்கு ஆடைகளுடன்
ஒவ்வொருவராய் நுழைந்தார்கள்.
இரத்தம் உறையாத
வெற்றுக் கைகளில்
ஒருபிடி தாய்மண்
கதிர்வீச்சுக் கமழ்ந்தது.

ஆணுக்கும் பெண்ணுக்கும்
இக்கூடார நுழைவாசல்
கோபுரமில்லாத
ஒரு கருவறை வாசல்.
செஞ்சிலுவைச் சங்கத்தின்
செவிலிப் பெண் ஏஞ்சலா
மரணதேவனுக்கும் மருந்து போடுவாள்.

வெண்மையில் சிவப்புச் சிலுவையாக
அவள் வெள்ளைச் சீருடையில்
செந்நிறம் புள்ளி தெளித்திருக்கிறது.
அவற்றுள் எதிரியுடையதும் இருக்கிறது.
போராளியுடையதும் காயாமல் இருக்கிறது.
பொழியும் குண்டுமழை
சாதி பார்க்குமா?
சமயம் பார்க்குமா?
முகம் பார்க்குமா?
மொழி பார்க்குமா?
இரவு கிழிந்தபோது,
ஏஞ்சலாவையும்
விட்டு வைக்கவில்லை
ஏவுகணைகள்.

பூ நீறு

இங்கே அம்மன் பச்சைவாழி
இக்கரையில் சிலையாகி நிற்கிறாள்
சிலை சுற்றிச் சேலை
அரக்கு மஞ்சள் கொடி போல
கண்களோ சிவப்புச் செம்மண் மீன்போல
அருகில் நிற்கும் புன்னை மரம்
உதிர்த்துக் கொள்ளும் விண்மீன்கள்
வெள்ளை முத்துப் பூக்கள்
தனியொரு சுகந்தம்.
ஊர்ந்து செல்லும் கட்டெறும்புகள்
இராணுவம்போல் ஏறி இறங்குவதிலும்
பேரொழுங்குகள்.
இப்படி உயிர்த்தவை அனைத்துமே
நொடிக்காலத்தில் பிடிசாம்பல்
ஒரு தூசிப்புயல் கதிர்வீச்சு
தற்சமயக் கணத்தின் துளிநிகழ்வில்
எரியும் அமிலமழை இன்றும்
மரணத்தின் நிழலை நடிக்கிறது.

என்று தீரும்
ஹிரோஷிமா பூநீறு.

பின்னல்

நிலவுநிறக்
கிண்ணியில் எண்ணெய் மணம்
சின்னக் கூடையில் மல்லிகைச் சரம்
பின்னலில் முடிந்து கொள்ளும்
பட்டு வண்ண நாடாக்களும்
பூக்கவ்விகளும்
அவரவர்க்குப் பிடித்த பழகிய சீப்புகளும்
கொண்டாடும்
மகளிர் மட்டும் வசந்தவிழா
முன்மாலை நேரம்
சொந்த வீட்டின் வனப்புகளுடன்
காட்சிப் பதிவு நடத்தியது
தாழ்வாரத் திண்ணை.

அம்மாவின் கொண்டையில்
திருகுப் பூப் பதித்து
முடித்தாள் பாட்டி.
மருமகள் பின்னலை
வழிய வழிய
இழுத்துப் பின்னலிட்டாள் அம்மா.
அனைவருக்கும் முன்னால்
தலை சிலுப்பி
அமர்ந்திருந்தாள் செல்வி
குடும்பத்தின் குலக்கொடி
செல்லப் பெயர்த்தி

சீனத்துப் பொம்மையின்
செம்பொன் கற்றைக் குழலை
சீவிக் கொண்டிருந்தாள்
சின்னக் குழந்தை மகள்.
சாணம் தெளித்துக்
கோலம் காய்ந்திருந்த
வாசலில் நின்றிருந்தேன் நான்
யாசகம் கேட்டு.
என்தலை மொட்டை
கிழிசல் பாவாடை சட்டை
அன்பு செய்யப் பாட்டி இல்லை.
அம்மா இல்லை, அக்கா இல்லை
பாப்பாவும் இல்லை
பொம்மையும் இல்லை.
அப்பாவைக் காணோம்.
'அம்மா தாயே
எல்லாம் போயிடிச்சு
சுனாமியிலே
சீப்புக்கூட-
அம்மா தாயே'
என் குரல் அழுகிறது.
இன்னமும் மிச்சமிருக்கிறது.
இடது கண்ணில் இந்து மகா சமுத்திரம்.
வலது கண்ணில் வங்காள விரிகுடாக் கடல்.

தீபகற்பங்களும் தீவுகளும்

கடல்
ஒரு நீலப் பள்ளம்
பெரும் திமிங்கிலக் காடு
பவளப்பூத் தோட்டம்
பாசிப் பச்சை உணவகம்
மீன்களின் தொகுப்பு வீடு
நுரை தள்ளும் அலைவரிக் குதிரை
வருவதை வாரிக் கொள்ளும்
கரைமணல் பின்னல் வலை
வைரங்களைப் பதுக்கி வைக்கும்
படிக மலை உப்புப் பாறை
பூமித் தரையைத் தாங்கியிருக்கும்
மூன்று கரம்
கண்டங்களைத் தழுவிச் செல்லும்
பனிப் பூச்சேலை
புயல்காற்றுத் தொட்டெடுக்கும்
பேரமைதி மையம்
கரையைக் கடந்து
ஆடுகின்ற கூத்தின்
ஊழிமேடை.

கடலே கடலே
கருங்கடலே செங்கடலே
சந்திர சூரியர்களின்
பதுங்கு குழிகளே,
மேலைக் கடலே
கீழைக் கடலே
உங்களைக் கண்டு
நாங்கள் எப்போதும் அஞ்சியதில்லை.
நாவாய்கள் புதிதில்லை
நாலு திக்கும் புதிதில்லை.
தீபகற்பங்களில் மாநாய்கராய்
யவனருடன் மொழிபேசி
நாகரிகமாய் வாழ்ந்த இனம்தான்
ஆனாலும்,
பக்கத்துத் தீவுகளுக்குப்
பாலம் சமைக்கத் தெரியாமல்
பாவம் சுமக்கிறோம்
யார் எங்களை
மன்னிப்பீர்கள்?

தலைநகர் தில்லியிலிருந்து...

மகாபாரதத்தின் இந்திரப் பிரஸ்தம்
புதிய பாரதத்தில் இது
இந்திரா காந்தியின் சக்தி ஸ்தலம்.
தெருவோரங்களில்
விரைந்து வழிகின்றன எப்போதும் நிறங்கள்.
குழந்தைகளின் கன்னங்களைப் போல
கஷ்மீரத்து ஆப்பிள்கள்
அப்பெண்களின் கண்களைப் போல
இரசம் நிரம்பிய திராட்சைக் கொத்துகள்
நெற்றிச் செந்தூரம் போல
நேபாளத்திலிருந்து ஸ்டிராபெர்ரிப் பழங்கள்,
பறித்துப் போட்ட சந்திர சூரியர்களாக
குலுமணாலியிலிருந்து கமலா ஆரஞ்சுகள்
துர்க்கையம்மனின் துருத்திய நாவுகளாய்
உள்ளூர்ச் செஞ்சிவப்புக் கேரட் கிழங்குகள்
கூடை கூடையாய் எதிர்கொள்ளுகின்றன.

ரோஜாவுடன் காரனேஷன், லில்லிகள்
தோரணக் கொடிகளாய்
தீபத் திருநாள் விளக்குகளைப் போல
நடைபாதைகளில் வண்ணமலர் வரிசைகள்.

புறாக்களும் மைனாக்களும்
குரான் ஓதினாலும் வேதமென்றாலும்
கோவில் மணியடித்தாலும்
கீர்த்தனைகள் பாடினாலும்
கும்பலாய்த் திசையெங்கும்
சிவ்வென்று பறந்து திரிகின்றன.

கோதுமை தானியங்களைக் கொத்துகின்றன.
பாதாம் பருப்புகளையும் கூடவே
விழுங்கித் தீர்க்கின்றன.

நேற்றைய யுத்தகளம் இந்தத் தலைவாசல்.
வேலும் வாளும் துப்பாக்கிப் பீரங்கிகளும்
செங்குழம்பு பூசிக்கொண்ட அரசர்களின்
ஊர்தான் இந்தத் தர்பார் நகரம்.
கௌரவ பாண்டவர்கள்
பாதம் பதித்த செங்கல் பாதைகள்,
சுல்தான்கள் பராமரித்த மினார்கள்
கோட்டங்கள், கோட்டைகள்,
நினைவிடங்கள், புல்வளரும் தோட்டங்கள்,
நின்று பார்த்தால்
தெரிகின்றன உறைந்து கிடக்கும்
சிவப்பணுக்கள்.

பனிமலைக் காற்றும்
பாலைவன மணலும்
காந்தியக் கனவுகளைப் போல
நம்மைத் தொட்டுச் செல்கின்றன.
இமைகளைத் தட்டி எழுப்புகின்றன.
எப்போதும் விழிப்பாயிருக்க
இராணுவ முரசுகள் போல.

பாரதத் தலைநகரின் அலுவலகத்
தாழ்வாரங்களில் நகர்ந்து சென்றால்
மேசை நாற்காலிகளையும்
இருந்து செல்வோரையும்
இணைத்துக் கொண்டிருக்கிறது
இந்தி.

கோப்புகளில்
முடிவெழுத்துகளைப்
பதிவு செய்து கொண்டிருக்கிறது
ஆங்கிலம்.

பழைய தாள்களை எரித்துக்
குளிர்காய்ந்து கொண்டிருக்கிறது
நடைபாதைகளில்
தமிழ்.

உழைப்பினைக் கங்கணமாகக்
கட்டிக் கொண்டிருக்கிறது
தலைப்பாகையுடன்
பஞ்சாபி.

இஞ்சி போட்ட மசாலாத் தேநீருடன்
இரவுகளிலும் கவிதைகளால்
நிரம்பி வழிகிறது
உருது.

சாக்லேட் கவிதை

பிறந்தநாளில்
சரிகைத் தாளில் முறுவலிக்கும்
ஒவ்வொரு சாக்லேட் கட்டிக்கும்
பின்னால்
ஒரு கருப்புக் குழந்தையின்
கண்ணீரும் செந்நீரும்
கலவாதிருக்கிறதா என்று
சான்றிருந்தால் மட்டுமே
வாயில் போடுங்கள்.

பிறந்ததிலிருந்தே
வறுமையை மென்று தின்னும்
ஆப்பிரிக்கத் தோலும்
சாக்லேட் நிறந்தான்.
காப்பியைப் போல,
கோக்கோ
மெய்யாலும் கசப்புதான்.
வெள்ளைப் பாகு சர்க்கரை நச்சு
இளக்கி இளக்கிக்
கலக்கும்வரை.

'பாலைப்பூ' ஒட்டகமும் ஒரு கடிதமும்

தலை சிறியது
பல்லு பெரியது
முதுகு சர்வம் கோணல்
ஒத்தைத் திமில் ஒரு ஜாதி
இரட்டைத் திமில் வேறு ஜாதி
மெலிந்து சிறுத்த வால் நுனி முடி
கோணமாணலாகக் கணுக்கால்கள்
வறண்டு சொரசொரத்தத் தடித்தோல் மடிப்புகள்
பாலைவனத் தூசிப்புயல் போன்ற நிறபேதங்கள்

எல்லா ஒட்டகங்களும்
ஒரே மாதிரி அசமந்தங்களாய்
வரிசையில் செல்லும் மந்தைகள் என
பரம்பரையாய்ப் பாலைவனக் காட்சிகளைக்
கர்ணவழியாய்க் கேட்டுக் கேட்டு
ஒட்டுப் படங்களில் பார்த்துப் பார்த்து
ஒட்டகம் என்றாலே ஒவ்வாமை.
குதிரை என்றால் மட்டும்
மொழுமொழு வழுக்கலும் கம்பீரமும்
கொஞ்சலும் இனிமையும் வீரமும்
கைநிறையக் காசும் இலட்சுமி கடாட்சமும்
வேலு நாச்சியார். தேசிங்கு ராஜன்.
ஜான்சிராணி இலட்சுமிபாய் என்ற வரிசையிலும்
அவர்கள் ஏறிப் பறந்த நீலவேணிகள்

அசுவமேத யாகங்கள் சாரட் ஊர்வலங்கள்
குதிரை லாயங்கள்...
வர்ண ஜாலமாய் கதைகள்
நாடகம் சொல்லும்.
குதிரை மாதிரி என்று
கோவேறுகளையும்
கழுதைகளையும் பொதிசுமக்க வைப்பார்கள்.
அவைகளுக்கு மரியாதை பூஜ்ஜியம்தான்

தார்ப் பாலைவனத்தில்
ஆவணப்படக் கூட்டத்துடன் சென்றபோதுதான்
மண்மலைகளில்

(இடது எது வலது எது என்று
பாதை தெரியாது மயங்கிய போதெல்லாம்
குழப்பமின்றிப் பயணித்தது
அழகு ஒட்டகமே என்று அறிந்தேன்.
சூரியனை முன்னும் பின்னும் நிறுத்தி வைத்து
சூடான மணலுள்ளும் புதையப் புதைய நடக்கவும்
ஒட்டகத்தால் மட்டுமே முடிந்தது.

அசைந்து செல்லவும்
அம்பாரி தூக்கவும்
எங்களை ஏற்றி இறக்கவும்
ஒட்டகமே முன் வந்தது
ஒட்டகப்பால் இனிப்பும் அருமை
இப்போதெல்லாம் ஒட்டகத்தை
யார் கேலி பேசினாலும்
நான் விடுவதாயில்லை. மேலும்
ஒட்டகப்பால் தேநீர் படுசுகம்!

என் வளர்ப்பு ஒட்டகக் குட்டியை
பாலைவனப் பள்ளியிலே
பழக விட்டிருக்கிறேன்
அடிக்கடி ஒட்டகப் பள்ளியிலிருந்து
மேய்ப்பன் அர்ஜுனன் தபால் போடுகிறான்
என் சொல்ல ஒட்டகத்துக்குப்
பெயர் வைத்திருக்கிறேன்.
'பாலைப்பூ' என்று.

கண்டிப்பாக உங்களுக்கு
பிடிக்கும்
இனி
அவளை.

கொடி விளக்கு

வெயில் இத்தாலிக்கும்
குளிர் ஃபிரான்ஸுக்கும்
இடைப்பட்ட எல்லை பூமி;
குன்றுகள் சூழ்ந்த
செம்பாறைச் சிற்றூர்
எனது சிற்றடியால் அளக்கப்பட்டது.
கற்களால் ஆன பழைய வீடுகளில்
ஈரப்பசை பச்சைக் கருப்பாய் பூசியிருந்தது.
குறுகலான படிக்கட்டுத் தெருக்கள்
தண்ணீர் கொட்டும் ஊற்று வாய்கள்
வாசற்படியோரங்கள் தூணின் கைகள்
பாடும் கதவுகள் தோறும்
ஒருவகை திறந்தவாய் சிங்கமுகங்கள்.
பலநாள் பூஞ்சருகுக் குவியல்கள்
யாராலும் மிதிக்கப்படாமல்
பனியுடன் பாதைகளில் ஒட்டிக் கிடந்தன
பதினாறாம் பதினேழாம் நூற்றாண்டுகளில்
புனிதப் போர்கள் நிகழ்ந்த போதெல்லாம்
மதத் தலைவர்கள்
இங்கேதான் பாதுகாப்பாய்
பிரார்த்தனை செய்திருந்ததாக
கோட்டை போலிருந்த ஊரின்
தொடக்கக் கதவில்
தொல்லியல் துறையினர் எழுதி வைத்திருந்தார்கள்
இரும்புக் கைப்பிடியில் இருந்தது போலத்

தெரிந்தது இரத்தக் காயம்.
அகழி அரண்
கற்பாலம் நெடிய மரக்கதவு
தடியாக இரும்புச் சங்கிலியைத் தொட்ட
பனிக்காற்றுடன்
கனமான மௌனம் சூழ்ந்திருந்தது.

தொலைதூர ஆல்ப்ஸ் மலைச் சரிவும்
தலைமீது நீலநிற வானமும்
சொந்தம் கூறியதால்
தென்பெண்ணையை எண்ணிக் கொண்டு
நிகழ்காலம் நின்றேன்.

பழைய கோட்டைக்குள் புதிய நவீனங்கள்
கதவு உள்வாங்கிக் கொண்டால்
அழகிய இல்லம்
முதிய கலைஞர் ஒருவரின் சித்திரக் கூடம்
அழைக்கப்பட்ட விருந்தினருடன்
ஆவல் பொங்கிட உள்மனை சென்றேன்.
காலம் என்னை நன்றாகவே
விழுங்கிக் கொண்டது.

ஏறி இறங்கி அழைத்துச் சென்றன
ஏராளமான மரப்படிகள்
துருப்பிடிக்காத இரும்புக் கிராதிகள் பின்னலிட்டிருந்தன
ஐரோப்பிய பளிங்குச் சிலைகள் நிமிர்ச்சியுடன்
முறுவலித்தன.
சரித்திரப் பாதுகாப்புகள்
எங்கும் பளிச்சிட்டன.
ஒரு செல்வ வளமை வீடு அது
சிறிய அருங்காட்சியகம் போலவே தெரிந்தது.

குளியல் அறைகூட
கூரையிட்ட குட்டியூண்டு
கடற்கரை போலிருந்தது.

நேற்றைய காலத்தில் அவர்கள்
தோத்தரித்த புத்தகங்களின்
தாள்களில் வைக்கோல் வாசனைகளையும்
காய்ந்த பூக்களின் நிறங்களையும்
நிலைப்படுத்தி வைத்திருந்தனர்

அடுத்த அறைக்குள் லாவண்டர்
ஊதாநிறம் மட்டுமே இன்றைய புதுசு

ஃபிரெஞ்சு மக்கள்
மிக நன்றாக உபசரிப்பார்கள்.
முகம் பார்த்து உணவிடுவார்கள்
உள்ளூர் ஒயினில் ஆரம்பித்து
பச்சைக் காய்கறிக் கலவைகளில் நிலைத்து
ஆட்டுப்பால் *சீஸ்*கட்டிகளைச் சிலாகித்து
நீளவாக்கில் ரொட்டிகளைத் தட்டிலிட்டு
இடையிடையே ஆரஞ்சுப் பழச்சாறு பரிமாறி
வேகவைத்தக் கறியும் சோறும் வண்ணக் கலவையாய்
பீங்கான் தட்டுகளில் பொலியும் அழகுகளுடன்
புன்னகை இணைத்துக்
கதைபேசி, சிரித்து, மகிழ்ந்து
இசைகேட்டபடிக் களித்து
ஒயினில் முடிப்பார்கள்; இடையிடையே
காப்பியும் குடிப்பார்கள்

அன்று அந்த மலைப்பங்களாவில்
உண்பதாகப் பாவனை காட்டியபடி
சுற்றிலும் உள்ள
அழகியல் கூறுகளை
ஆராய்ந்து கொண்டிருந்தேன்
மைய மண்டபத்தில் விரிந்திருந்த
பெர்ஷிய
இரத்தின கம்பளத்தின் நுனியில்
நடுநாயகமாக
கண்ணாடிக் கதவு பார்த்த சூரியனின்
ஒளிக்கதிர்களைப் பூசிக்கொண்டு
மகா பிரம்மாண்டமாக
ஒரு பித்தளைக் கொடிவிளக்கு!
தமிழ்நாட்டுச் சோழர் பாணியில்
செட்டிநாட்டு மக்கள் செய்விக்கும்
கோவில் திருவிளக்கு.

எனது உயரம் ஐந்தடி ஓரங்குலம்
என்னைவிட இருமடங்கு உயரத்துடன்
பொன்வண்ண எண்ணெய் விளக்கு
திருமகள் போல நின்றிருந்தது.
அடிப்பாதம் வட்டத்தட்டு மட்டுமே
ஐந்தடி விட்டமிருக்கும்
ஐந்து முகங்களுடன் நூற்றுக்கும் மேல்
கொடிகொடியாய்க் கிளைகளில் திரிவிளக்குகள்

நூறாண்டுகளுக்கு முன்வரை பொன்மேனியில்
பல ஆண்டுகள் பசுநெய் மணத்திருக்கும்
பஞ்சுத்திரி தாமரை மொட்டுப் போல சுடர் தந்திருக்கும்
ஏழு கடல் தாண்டி
ஏழு மலை தாண்டி
பாலைவன மணல் தாண்டி
இதோ இந்தப் ஃபிரான்ஸ் நாட்டு
குன்றத்தூரில் கொலுவிருக்கிறது.
ஏற்றப்படாத கொடிப்பூக்களின் முகங்கள்
ஒளிதர வேண்டி
எண்ணெயும் தாமரைத் திரியும்
கொண்டு வா என
என்னைக் கெஞ்சிக் கேட்டன.


அடிப்பாதத்தின் விளிம்போரங்களில்
சுற்றிச் சுற்றி வந்து படித்துப் பார்த்தேன்
சென்றகாலத் தமிழ் வரிவடிவங்கள்
தெளிவாகப் பொளியப்பட்டிருந்தன
தந்தை பத்தர் மகன் பத்தர்
எந்த ஊர் உபயம்
இதைச் செய்வித்த வகை என்பதாக
நிவந்தங்கள் பிரகாசித்தன.

விருந்தினர்கள் திராட்சை இலைகளையும்
மீன் முள்ளுகளையும்
ஓரங்கட்டிக் கொண்டிருந்தார்கள்.
ஐரோப்பிய மொழிகளில்
சிரித்துக் கதைத்துக் கொண்டிருந்தார்கள்
நான் மட்டும் என் தோள் தழுவிய
காஞ்சிப்பட்டில் இழை உருவிக் கொண்டு
தமிழில் எழுத்தெண்ணிப் படித்துக் கொண்டு
கங்கை சரஸ்வதியாய் காவிரி பவானியாய்
அடிஆழத்தில் அழுது கொண்டிருந்தேன்.
கொடி விளக்கு என் காதில்
கிள்ளை மொழியில் கிசுகிசுத்தது.

'மகளே இந்நேரம் நம் ஊரில்
குவளையாய், தவலையாய்,
சொம்பாய், தாம்பூலத்தட்டாய்,
பூச்சாடியாய் பாவை விளக்காய்,
வேறொரு சிலையாய் வார்த்து
உருக்கி ஊற்றியிருப்பார்கள்.
இங்கே இன்றுவரை விள்ளாமல் விரியாமல்
முழுதாகவே
அப்படியே இளமையுடன் இருக்கிறேன்
எல்லாம் நன்மைக்கே
என்றேனும் என்னை மீட்டெடுத்து
நம் ஊருக்கு எடுத்துப் போ!
அல்லது
இங்கேயொரு தமிழன்னை கோவில் கட்டு.
அங்கேயாவது ஒளிச்சேவை
செய்து கொள்கிறேன்'

நூலாம்படையும்
நெய்ப்பிசுக்கும் இல்லாத விளக்கடியில்
தீர்வு கிடைத்த மாதிரியும்
தீர்வு கிடைக்காத மாதிரியும்
கொடி பிரிந்து
இருவேறு கிளைநிலைகளில்
ஒரு தேநீர்க் கோப்பையுடன்
மறுபக்கம் சென்றமர்ந்தேன்.

கவிதையின் நான்காம் பரிமாணம்



சொல்லாத சொல்

என்னையும் என் அக்காள்களையும்
எங்கள் முன்சென்ற அம்மாக்களின்
ஒத்தையடிப் பாதையிலேயே
மூத்தோர்கள் போகச் சொன்னார்கள்.
இந்தப் பாதைகள் மட்டும்
பின்னேறுவதேயில்லை.
முன்னேயும் தொடுவான மரங்களைத் தவிர
வேறெதும் காட்டுவதில்லை.
நான்
கூட்டம் குதித்துத்
தனியே போனேன்.
காலம் தாண்டினேன்.
கல்லும் முள்ளும்
இரத்தம் குடித்தன.
குரங்கும் கரடியும்
சத்தம் போட்டன.
கழுகுகள்
நிழல்மீது விழப்போகும்
உடம்புக்காகக் காத்திருந்தன.

மனித ஆணும் பெண்ணுமற்ற
வனக்கூட்டிலிருந்து காயங்களுடன்
தரைப்புதர்கள் நிறைந்த
கள்ளிக்காட்டுப் பாலைக்குள் வந்தால்
ஆண் பாத்திரங்களின் புகைநெடி.
பெண்மையைச் சந்தனமாய் அரைத்து

அன்னையாக உருமாறி
இளைஞர்கள் கைபற்றி
பனைமரப் பாதைகளின் சங்கமத்திற்குள்ளே
மெதுவாகப் பாதம் பதித்தேன்.
எதிரே அழகான ஒளிப்பாலம்
என் தேகம் கடந்து செல்ல
ஒரு சுதேசியப் பாதை
நேசம் மிகுந்த சுதர்மப் பாதை.

இப்போது காணிக்கல்லில் அமர்ந்து
அடிக்காலில் உறுத்தி வந்த
பழைய முனைகளைக்
குத்தி எடுக்கிறது
துருப்பிடிக்காத முள்வாங்கி.
வலிப்பது என்னவோ
பழைய நினைவுகளின்
வேர்களுக்குத்தான்.
வழியில் என்றோ எதிர்ப்பட்ட
குத்தீட்டிகள் கூட முனைமழுங்கி
யுத்தமற்ற சாலைகளில்
வெற்றுக் குச்சிகளாய்
சுருண்டு கிடக்கின்றன.
கையில் அணையா தீபத்துடன்
பின்னால் திரும்பிப் பார்க்கிறேன்.
மற்றுமொருத்தி
அவளுக்குப் பின் மற்றுமொருத்தி
அவர்களுக்குப் பின்
மேலும் தீ.
புரிகிறதா
எனது சிரிப்பினூடே
சொல்லாத
சொல்லதிர்வுகளின் அர்த்தங்கள்?

பேசாத வரம்

இந்தக் குறிப்பிட்ட நேரத்தை
இதற்கெல்லாம் மட்டும் ஒதுக்கியிருக்கிறேன்.
விழித்தெழும் விதைக்குள்ளிருக்கும்
விருட்சத்தைக் கணக்கெடுத்தல்,
வளையும் புழுவுக்குள்ளிருந்து சீலையாகும்
பட்டின் இழைகளை அளவெடுத்தல்.
நீளும் சம்பங்கிக் கொடியில் ஈக்கள்
இளம்பூக்களுக்கு மஞ்சள் பூசுவதைப் பார்வையிடல்,
தீண்டும் மெல்லிய காற்றிலிருந்து
மின்னாற்றல் பெட்டியேறுவதை எட்டிப் பார்த்தல்.
இந்த ஆழ்நிலை நேரத்தில்
தொலைபேசி அழைத்து விடக் கூடாது
என்பதில் சிதறுகிறது என் கவனம்.

எதிரில் கருந்தேளாய்
ஒரு சூரியர்.
இந்தச் சொந்த நேரத்தில்
உனது தோழமைத் தோளில்
தலையைச் சிறிதே சாய்த்துக் கொள்கிறேன்.
பிறகே மீண்டும் பார்க்கிறேன்.
அகராதி வரிசைகளுக்குள்ளிருந்தும்
சொற்களெல்லாம்
கவிதாரசம் ஏற்றிக் கொள்கின்றன.
நால்திசை மொழிகளும்
வெள்ளமெனப் பொழிகின்றன.
நாம் நமது பேசாத நிலையில்
நிரம்பி அடங்குவோம்.

உபதேசம்

பனை மரத்துடன் பிள்ளைபோல்
பின்னிப் பிணைந்திருக்கும்
ஆலமரம் ஆயிரம் கதை சொல்கிறது.
பால்மரத்துப் போய்
பழுப்பாகி உதிரும்
நேற்றைய இலைகளைத் தேர்ந்து
பார்த்துப் பார்த்துப் பதம் பிரித்தேன்.
போயிற்று காற்றின் அலைப்பில் சில சருகுகள்.

இதய வடிவில் வளர்த்திருந்தது இயற்கை
இருவாட்சி இலைக் கொழுந்துகளை,
கல் அம்மியில் துவையல் அரைக்க
கொய்து கொண்டிருந்தாள் அம்மா.
அதிரடியாகச் சொன்னாள்
'உனக்கு வயதாகி விட்டதா என்ன?
பழுப்புகளையே அள்ளுகிறாயே
போதும் அது.
இளமையாக இருக்கவும்
கற்றுக் கொள் இனி'.

பிள்ளைக் கூடம்

சொந்தமொழி கற்பிக்கும்
இந்தப் பள்ளிக்கூடம்
மிகவும் பிடித்துப் போய்விட்டது.
இங்கே,
ஐம்பதாண்டு வேம்பு
கோடையில் கொட்டும் பூக்களை
எண்ணச் சொல்கிறார்கள்.

வேலி ஓணான்,
கருங்கல் தூணில் வந்து அமர்ந்து
தியானிக்கும் நேரத்தைக்
குறித்து வைக்கச் சொல்கிறார்கள்.

வெட்ட வெளியில்
தட்டுக் கூடையில்
சர்க்கரைப் பண்டம் வைத்தவுடன்
எங்கிருந்தோ வந்து சேரும்
எறும்புகளின் வேகத்தை
அளக்கச் சொல்லுகிறார்கள்.

மழை பெய்ய ஆரம்பித்தால்
வட்டரங்கத்தின் நடுமேடையில்
வீழ்ந்து வழியும்
துளிகளின் வடிவத்தை
ஓவியமாய்த் தீட்ட,

செம்மண் தாளும்
வண்ணக் குச்சிகளும் தருகிறார்கள்.
மேலும்,
காலையில் மயிலுடன் நடக்க வேண்டுமாம்.
மாமரக் குயிலுடன் இசைக்க வேண்டுமாம்.
வண்ணத்துப் பூச்சியுடன்
பறந்து ஆடித்திரிய வேண்டுமாம்.
மாலையில்
மரங்களின் முதுகினை
செல்லமாய் வருடிவிட வேண்டுமாம்,
குறுஞ்செடிகளுடன்
உற்சாகமாய்ப் பேச வேண்டுமாம்.

இந்தப் பள்ளியில்
சேர்க்க மறுக்கிறார்கள்
என்னைப் பெற்றவர்கள்.
என்னை வெளிநாட்டுக்கு
அனுப்பப் போகிறார்களாம்.

நாடு கடத்தவா
என்னைப் பெற்றார்கள்?

சித்திர அனுபவம்

இருள் குகைக்குள் சுவர் ஓவியம்
ஒரு பதினைந்து நூறாண்டு நாட்களும்
நான்கு வேளையும் இருட்டுக் கதிர்
பசித்துத் தின்றது போக
மீதமிருப்பதோ ஒப்பற்ற காவியம்.

கண்களால் உண்டதை
சொல்ல முயலுகிறேன் நான்.
ஓவியமாய் இயற்கை வண்ணத்தில்
ஒரு தேவன் ஒட்டிக் கிடந்தார்.
அருகே ஓர் ஆண்மயில்
மயிலின் அலகில் பாம்பு
பாம்பின் வாயில் தவளை
தவளையின் நாக்கில் பூச்சி.
சுவரில் பதிவாகவில்லை நிழல்
அது ஒரு பிள்ளைப் பூச்சியாக
இருந்து விட்டது போலும்.
பேசிக் கடித்துக் கொண்டே
என் கூடவே ஒட்டிக் கொண்டு
வந்துவிட்டதே ஊர்வரை.

இசைஓவியம்

இசை அலை வடிவங்களில்
இணைந்து உருகிக் கொண்டிருந்த
இந்தப் புதுவேளையில்
உயிரால் உணர்ந்தேன்
இது நீகேட்டு
இரசித்த இசை என்று.

எனது கையும் காலும் தாளமிட்டு
உடல் திசுக்கள் அசைந்தபோது,
கல்தரைகூடச் சொன்னது
என்னைவிட உயர்ந்த இரசிகன்
நேற்றிருந்த நீ என்று.

நரம்புகளை மீட்டிக் கொண்டே
கருப்பு வெள்ளைக் கட்டைகளிலிருந்து
பியானோவின் உன்னத ஆலாபனை
வெளி நிறைத்த
அற்புதப் பொழிவில்
ஆழ்ந்திருந்த சூழலில்
கனிந்து கசிந்து
மேலே
அண்ணாந்து பார்த்தேன்.

நீ
வானத்தின் வண்ணத்தில்
விண்மீன்களைப் பொன்சேர்த்து
வெள்ளி நிறத்தில்
வரைந்து கொண்டிருந்தாய்.
வான ஓவியமும்
மோகனம் இசைத்தது.

பிறவிகள்தோறும் வருகிறாய் நீ...

நீ
என்னுடன் சென்ற பிறவிகளில்
மரத்தோணியில் வலை விரித்து
மீன் பிடித்திருக்கிறாய்

செம்மண் பூமியில்
தென்னை மரம் ஏறி, சிரித்தபடி
பாளைப்பூ பறித்திருக்கிறாய்

ஒற்றையடிப் பாதையில்
கற்றாழை முள்விலக்கி
சேவகம் செய்திருக்கிறாய்..

நான் கோவில் பெண்டாய்
மாலை தொடுத்தபோது
நாருடன் நின்றிருந்த
நீறு துலக்கிய சின்னப் பிள்ளை
நீதான்,
இருள்நீளும் பிராகாரங்களில்
ஒவ்வொரு நந்தாவிளக்கிலும்
பஞ்சுத் திரியிட்டு நெய்யூற்றி
ஒளியேற்றும் பொழுதுகளில்

மடைப்பள்ளிப் பிரசாதங்களை
தையல் இலைகளில் பொதித்து வந்து

அப்பா தரும்போது
என்முகம் பார்த்து முறுவலிப்பாய்
உன் கையிலிருந்தும் எடுத்துண்பேன்
பசியடங்காத தேவதைப் பிடாரி

பாலைவன மணல் பரப்பில்
பாடிவந்த ஒட்டகங்களுடன்
நீ நடந்து வந்து
நீண்ட அங்கிக்குள் உடல்மூடி
தொழுகைக்கு அமரும் நேரத்தில் கூட
என் வாசலில் சேர்த்து வைக்கும்
ஈச்சைகளை ஏற்றுக் கொண்டு
புதுப்புது சரிகைக் காலணிகளை
எனக்காகப் பரிசளிப்பாய்

பனிப்பாறையிடுக்கில்
நீரூற்றின் கதகதப்பைக் கைதொட்டு
உணரும்
தூந்திரப் பிரதேசத்தில்
நீ
எனக்காகக்
கிளைக்கொம்பு மான் பூட்டிய
வண்டிகளுடன் குல்லா அணிந்த
சாரதியாய் காத்திருப்பாய்
சின்னக் குரலில் சன்னமாய் பாட்டிசைப்பாய்

மழைக்குப் பின் பூத்திருக்கும்
உளைச் சோற்றுக்கரை கிளறும்
வெள்ளைக் காளான்களின் வெடித்தெழும்
மென்மை அழகுகளைத்
தொட்டுப் பார்த்து வியந்திடும்போது
நீ

என்மீது
வேப்பமரத்துக் கிளைகளை அசைத்து
முத்து மணிச்சாரல்
குடமுழுக்குச் செய்விப்பாய்

பூமிப்பரப்பில்
எனக்கொரு நிழல் விழுகிறது
எப்போதும் என்னைத் தொடரும்
உனக்கு
என்ன தருவேன் இப்பிறவியில்
வா. நிழல் குடையாகும் இப்பொழுதில்
என்னுடன் அமர்ந்து
ஒளிப்படம் பிடித்துக் கொள்
சொற்களால்
எழுதிவிட முடியாத
இப்பழைய உறவுகளை
இப்படியாவது பதிவு செய்து கொள்வோம்
எப்போதும்
ஒன்றாகவே பிறந்து கொள்வோம்!

பார்வை புதியது

அழகிய தாமிரச் செம்பு
விளிம்போரம் நசுங்கலுடன் குழிந்திருக்கிறது

பக்கத்தில் மரப்பலகை முழுவதும்
தசாவதாரச் செதுக்கல்
ஆந்திர பாணியில் புடைப்புச் சிற்பமாக
நீண்டு நிற்கிறது இதில்
இராமன் கொஞ்சம் குண்டுதான்
சன்னலின் இருபுறமும் அரைவெள்ளைத்
திரைச்சீலைகளைப் பறக்கவிடாமல்
வளைத்துக் கட்டியிருந்தது
பொம்மை பூட்டிய கயிறு
அதன் ஓரம் சிறிது பிரிந்திருக்கிறது

இராசலீலைக் கண்ணனும் கோபியரும்
நிலவொளியில் யமுனை ஆற்றின்
பசுமைக் கரையில் பரவசக் கும்மியடிக்கிறார்கள்
பழங்கால அச்சுத்தாளில்
படம் வண்ணங்களால் தீட்டப்பட்டிருந்தது
வலது நுனியில் கீழே பூச்சி அரித்திருக்கிறது
- தமிழகக் கோடியக்கரை வரைபடம் போல...

சின்னச் சின்ன ஆனைகள்
மிகப்பெரிய ஆனையுடன்
ஒய்யாரமாய் நடந்து செல்லும் அணிவகுப்பு
அத்தனையும் கருப்பு ஈட்டி மரப் பொம்மைகள்
பச்சைக்கிளி, நீலமயில்
வெள்ளை அன்னம்

அசையாமல் நின்ற
பெரிதும் சிறிதுமான
பலவகைப் பொம்மைகள்
உருவங்கள் அலமாரி மேல்தட்டில்
பாரதக்கைவினை
நிரந்தரக் கொலுவை
என்றைக்கும் பார்த்துக் கொண்டுதான்
இருக்கிறேன்
என்றாலும்,
இன்றுதான்
இவற்றின் மீதொரு கனமான
தூசிப்படலம் கவிந்திருப்பதைத்
துல்லியமாகப் பார்க்க முடிந்தது.
ஏன் என்றால்
கண் கண்ணாடியை
இன்றுதான் வாங்கி வந்தோம்.
என் முகத்துக்கு ஏற்ற மாதிரி
அதுவும்
இரண்டாயிரம் ரூபாய் செலவில்.
கருந்தேன் நிற ஃபிரேம்தான்
90% விழுங்கி விட்டது.
மூக்கின்மேல் நிற்காமல்
வழுக்கி விழும்போது
தாங்கும் விரல்களில்
வளையம் வளையமாய்
காலச்சக்கர ரேகை மண்டலங்கள்
நகங்களுக்குள்
நன்றாகத் தெரிகின்றன
முப்பதாண்டு சாக்பீஸ்
தூள் துணுக்குகள்!

பிரதிபலிப்பு

சின்னஞ்சிறு பறவைகளுடன்
கன்னங்கரிய காக்கைகள்
வந்து விடுகின்றன
கடும்போட்டிக்கு.
பனம்பழம், மாம்பழம்,
பலாப்பழம், கொய்யாப்பழம்
எல்லாவற்றையும் பெரிய பறவைகள்
எகிறி எகிறித் தின்கின்றன ஆவேசமாய்-
கரைந்து கரைந்து அழைத்தபின்
கொத்தித் துரத்தும் சண்டையும் உண்டுதான்.
சின்னச் சின்ன உன்னிப் பழம் தின்றுவர
காட்டுக்குள் சென்று வர
உத்தரவு கேட்டு
கத்தாமலேயே காத்திருக்கின்றன.
துளி அலகு மென்சிறகு குட்டிப் பறவைகள்.
மனதிற்குள் கரும்வர்ணம் பூசிக்கொண்டு
இனம் மாறவே ஆசைப்படுகின்றன
என்பதாகப் பிரதிபலிக்கிறது
ஒரு மனிதக் க்ாட்சி.

நிலைக்கண்ணாடியும் பார்க்கிறது

மகன் இடுப்புயரம்
வளர்ந்து விட்டான்.
கதைசொல்லும் அவன்முகம்
நொடிக்கொரு வாய்ப்புகளை
மாற்றி மாற்றி நடிக்கிறது.
அவனை முதல் வகுப்பில்
உட்கார வைத்ததுமே
பள்ளிப் புத்தகப் பாடங்கள் வண்ணமயமாய்
கனவிலும் வந்து கூத்தாடுகின்றனவாம்.
அண்ணன், தம்பி,
அக்காள், தங்கை
என்றெல்லாம் பாடத்தில் பார்த்து
எழுத்துக் கூட்டிப்
படிக்க ஆரம்பித்து விடுவான்
சீக்கிரமாய்...

தன் ஒற்றை மகன் கேட்டு விட்டால்
தனக்கு அர்த்தம் சொல்லத்
தெரியாதே என்று
தொலைந்ததை எல்லாம்
கூடச் சேர்த்து
அழுகிறாள் இளம் அம்மா,
பாரத நாட்டின் வறண்ட
கிளைபல தாங்கிய
நேற்றைய ஆறுகளைப் போல.

வீட்டின் மையக் கூடத்தில்
தேக்குச் சட்டத்தில்
செதுக்கிய நூறுவயதுப் பூக்களுடன்
மாறாது சுவர் பற்றி நிற்கிறது
ஆதிகாலக் கண்ணாடி.
முகம் பார்த்து அழகு செய்வோரின்
வாழ்க்கை ஓட்டத்தில்தான்
எத்தனை எத்தனை மாற்றங்கள்?
அந்தப் பழைய நிலைக்கண்ணாடி
தூசிப்படலத்தில்
தனது நாட்குறிப்புகளை
எழுதி வைத்துக் கொள்கிறது.
இன்றைய குறிப்பு:

"ஒற்றை ஒரு குழந்தை
நகரத்தில்
கான்கிரீட் காட்டில்
வற்றல் தனிமரம்".

கேமராவும் அழுகிறது

கண்ணாடிக் கண்களில் ஒளிபாய்ச்சி
அவசரமாய் ஏதென்று தெரியாமல்
சுனாமியின் கொடுமைகளை
ஐந்தாவது மாடியிலிருந்து
படம்பிடித்துக் கொண்டிருந்தார்
கருப்பு நாளில் கரையோரம்
ஒரு சுற்றுலாப் பயணி.

அலைமோதும் ஆழிக்கூடத்தில்
படகருகில்
பிடியிழந்து கதியிழந்து
தண்ணீரில் தவிக்கிறாள் பெண்ணொருத்தி
உயிருக்குப் போராடும்
மரண ஓரையில்..
கையைப் பிடித்து மேலே இழுத்த
சகமனிதனிடம்
நன்றி சொல்லக்
குவிந்த உதடுகள்
அழுந்தி மூடின.
கும்பிட எழுந்த கைகள்
விழுந்து ஓய்ந்தன. அவள்
குரல்வளையில் கையழுத்தி
கழுத்துச் சங்கிலிக் கொடியை
அறுத்துக் கொண்டு ஓடுகிறான் கொள்ளையன்

பொன்விலைக்கு
தொப்பூழ்க் கொடி உறவறுத்தவன்
தொப்பென்று விழுந்து துடித்து அடங்கிய
அவள் செத்தவளா?
தப்பியோடும் அவன் செத்தாருள் வைக்கப்படுமா?
'பாவி மனிதா!
நான் கண் மூடுகிறேன்'
என்றழுதது
எந்திரக் காமிரா
இருந்தும்
நாளை
சாட்சி சொல்லும்!

ஏந்தைத் தின்று...

வானவீதியில்
ஆகஸ்டு மேகங்கள் விளையாடும் நேரம்
கதகதப்பான வண்டியின் உள்காற்றை
அனுபவித்தபடி
பயணித்தேன்.
மழைத்துளியில் நனைந்து
புல்வெளியின் ஓரப்புதர்ச்சுவரில்
ஒண்டிக் கொண்ட
உள்ளூர்ப் பறவையொன்று
கவனம் ஈர்த்தது.
இரசனை வளர்த்தது.
குண்டு வயிறு - பிள்ளையார் போல
சிறகு வால் - குழந்தைக் கண்மை போல
முன்மார்பு - வெள்ளை மலரடுக்கு எனலாம்.
வெண்மையும் கருமையும்
அழகிய கலவை
இறகு விரித்தால் விசிறிப் பறவை
இதன் பெயர் என்ன?
கேள்வி எய்யப்பட்டது
விருந்து புரக்கும்
பக்கத்து இருக்கைப் பெண்மணியிடம்

'ஓ இதுவா?
முட்டைத் தின்னி.
திருடித் தின்னும்
ஈனப் பறவை
எனக்கு இதனை அறவே பிடிக்காது'

என்றார் சடபுடவென்று.
நெதர்லாண்டில் ஐக்கியமாகிவிட்ட
கீழைநாட்டு அம்மணி அவர்.
வரவேற்றது தாய்லாந்து உணவகம்
அங்கே சாப்பாட்டு மேசை
பறவைகளின்
சாவுச் சரணாலயம்தான்.
முட்டைகளுடன் முழுவாத்தும் கோழியும்
குறைவின்றி மென்று தின்றார் அதே அம்மணி.

நயத்தகு நாகரிகத்துடன்
சீனக் கோப்பையில்
சிலோன் தேநீரைப் பருகியபடி
வெளியே பார்வை பதித்தேன்.
வேலியில் அமர்ந்திருந்தது
வாலாட்டிப் பறவை.
குறும்பாகச் சொளபுளவென்று
ஏதோ பேசிற்று

எத்தைத் தின்று...
என்று கேட்டிருக்குமா?

இந்திய வம்சாவளி

இந்த சர்வதேச நகரத்தின் தோட்டத்திலேயே
பெரிய மரம் இதோ இந்தப் புங்கன்தான்.
நாய்க்காசுடன்
இதன் காய்களைப் பிள்ளைகளின்
அரைஞாணில்
பிணைத்திருப்பார்கள் பாதுகாப்பிற்காக.
புங்க எண்ணெய் 'பயோடீசலாம்'
வண்டியோட்டிட எரிசக்தி என்கிறார்கள்.
வண்டு அடையாதிருக்க
புங்கன் இலைகளை
அரிசி மூட்டைகளில்
போட்டு வைக்கிறார்கள்.
எனக்கோ இம்மரம்
போதிமரம் இருபது ஆண்டுகளாய்.
உயிர்த்தெழும் ஒவ்வொரு திங்களும்
புங்கன் துளிரால் இலையால்
பூப்பொழிவால்
காய் விதைகளால்
மறுபடி முளைப்பதால்
நம்பிக்கைகளின் அமரநிலையை
ஆழமாக உணர்த்திக் கொண்டேயிருக்கும்.

நேற்றிலிருந்து கனிபோல முற்றிய இலை
உதிர்கிறது.
முதல் பழுப்பு
பொன்னிறகு போல மிதந்து வந்தது.
சத்தமில்லை.

இரண்டாவது மஞ்சள் நுரை போல
மிதந்து வந்தது.
சத்தமில்லை.
மூன்று நான்காக இணைந்து வந்தது.
மூச்சு முட்டும் உராய்வும்
பூமிச்சருகுகளின் சலசலப்புமாக
ஒரே இரைச்சல்.

மரங்களின் கிளைகளில்
மெல்லிய இசைஎழுப்பி
ஆடும் பசும் தளிர்கள்
சருகுகள் ஆனதும்
அதிகம் பேச ஆரம்பித்து விடுகின்றன.
அதுவும் சில பொழுதுகளே.
அப்புறம்
வேரடி மண்ணில் கலந்திடும்போது
தேடும் விரல்களைப் பற்றிக் கொண்டு
புங்கனின் சுழல் பணி தொடர்கிறது.

தெரியுமா பாரதப் பற்றாளர்களே,
மரவகைகளில் புங்கன்
இந்திய வம்சாவளி என்று.
பெரும் பெருமை
என்னிடம் வரும்
அடுத்த குழந்தைக்குச் சூட்ட
பெயர் தயார்
'புங்கம் பாரதி'.

செல்வப் பூ

இது நாகலிங்கப் பூ
மரத்தின் வயிற்றிலிருந்து
கிளைவிட்டு மலர்கள்
காலையில் பிரகாசித்து நிரப்புகின்றன.
வாசனைப் பூக்கள்
ஸ்ரீஅரவிந்த அன்னையின்
புத்தகத் தொகுப்பில்
நாகலிங்கம்தான்
இலட்சுமி கடாட்சம்.
வாழ்வின் வளமை
அதைத் தொட்டாலே
இதழ் சுடுகிறது.
நேரம் ஆக, ஆக
நெருப்பாகக் கனிகிறது.
கட்டமைப்பு ஒவ்வொன்றாய்
கழன்று கொள்கிறது.

நாகம், லிங்கம், இதழ்கள்,
நறுமணம்
ஒவ்வொன்றாகப் பற்றறுக்கின்றன.
செல்வத் திருஅழகே, நீ
சொல்லவரும்
இலக்கணமும் இதுதானோ?

வாழ்க்கைத் திசைகள்

மிக அருமையான மக்கள்
ஓரளவு மக்கள்
யாரோ ஓரிருவர்
நான் எனக்காக மட்டும்
என்பதாக இவை எனது
நான்கு திசைகாட்டிகள்.
எனது சாலைகளோ
ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டு விட்டன.
நாற்சந்திக்கு வருவதில் மட்டும்
தாமதமாகி விடுகிறது.
ஏதோ ஒன்றில்
எப்படியோ
நெடுநேரம்
பராக்குப் பார்த்துக் கொண்டே
நின்று விடுகிறேன்.

இரவு மழை பெய்த ஈரத்துடன் பகல்

மேலேயிருந்து
சட்டென ஒரு துளி
பொட்டுப் போல
துளசி மாடத்தில்
வந்து அமர்ந்தது.
அத்துளி வட்டவடிவக்
கோலமாயிற்று.
மேலும் ஒரு துளி
மேலும் ஒரு புள்ளி
மேலும் வட்டம், கோலம்
வட்டங்கள் தொட்டெடுத்த
பரப்பெல்லாம் குழைந்து போயிற்று.
முதல் சுவடு பதிவாக
நடுக்கத்துடன் நடந்தேன்.
அப்புறம் என்ன?
மழையில் ஆட்டம்தான்.
ஆடித் தீர்த்தோம் ஆனந்தமாக.

கடைசியில்,
தாய்மழையும் நானும்
வியர்த்துப் போனோம்
அவ்வப்போது
இப்படியாவதும் உண்டுதானே?

பங்கீடு

பவளப்பாறை
ஆமை ஓடு
யானையின் தந்தம்
பறவையின் அலகு
எருமையின் கொம்பு
குதிரைக் கால்குளம்பு
மிச்சம்மீதிதான்
என் கைகால் நகம்.

ஆக்கிரமித்த விலங்கினத்தின்
விகிதம்
குறைந்து வருகிறது.
மனிதம்
கூடிக் கொண்டிருக்கிறது.
என் உருவத்தில்.
ஏற்றியதாக வேண்டும்
உள்ளத்தில்.

???????

- கூவிப் பறந்த கறுப்புப் பறவை
  வானில் மறைந்தது
  புள்ளியாய் எப்படி?

- இதழ்கள் அவிழ்ந்தபின்
  மல்லிகையில் ஒற்றியிருந்த நறுமணம்
  போய் ஒளிந்தது எங்கே?

- புல்லின் பசுமைப் பச்சை எல்லாமே
  பூமிக்குள் வெயிலுடன் புதைந்ததாமே
  ஏன்?

- நீ நடந்த தடம் உண்டு.
  நீ இசைத்த இராகம்
  இன்னமும் உண்டு.
  உன் முறுவல் நிழற்படத்தில் உண்டுதான்.
  அந்த எம் நீ எங்கே?

குறுகுறுப்பு

குழல் வாசித்து வந்தது
காலைச் சூரியன்
கடல் அலைகள் முகவிலாசத்தில்
நீலமும் வெண்மையும்
எழுதிக் கொண்டன.
கண்ணாடியில் பிம்பம் பார்த்து
சிரித்தோடியது
வேலியோரச் சிற்றோடை
சிவப்பு நாணம் மேனி முழுவதும்.

மேலைக் காற்றின்
முன்னுச்சியைக் கோதின
ஆலமர விழுதின்
விரல்நுனி நகமுளைகள்.
தோழியரை எழுப்பியது
சோம்பல் குதித்தெழுந்த
சூரியகாந்தி.

பொன்னொளியைத்
தொழுது கொண்டிருந்த
என்னிரு கைகளுக்குள்
ரேகைகள் குறுகுறுத்தன.
இன்று
ஞாயிறுதானே என்று...

கைகளைப் பழக்குதல்

யுத்தத்துக்கும் பிச்சைக்கும்
முகத்தில் தூக்கி எறியவும்
கழுத்தை நெரிக்கவும்
கைகளை இப்படித்தான்
காலந்தோறும் பழக்கி வைத்திருக்கிறோம்
என்று பேசிவிட்டு
ஓரத்தில் நின்று
வானத்தில் மிதந்து சென்ற
கருமேக வெள்ளைப் பறவைகளைப்
பார்த்துக் கொண்டிருந்தேன்.
மாணாக்கியர் ஒலிவாங்கியைக்
கழற்றிக் கொண்டிருந்தார்கள்.

சின்னக் கமலினி
என்னைத் தொட்டு அவள்
பிஞ்சுக் கைகளை அசைத்து
இப்படியும் அப்படியும் புரட்டிக் காட்டினாள்.
அக்னி இலைச்சாறு
அழகிய மெகந்தி
எளிய தாயின் கைவண்ண
ஓவியங்களாக
குழந்தைச் சிரிப்பின் எல்லைகளோடு
எதிர்காலம் பேசிற்று.
அவநம்பிக்கைகள்-
அவளது சிரிப்பு நெருப்பில்
எரிந்து சாம்பலாயின.

கண்ணுக்குப் புலப்படாத கை ஒன்று

ஒரு கை
மேக ஓவியங்களை
வரைந்து செல்கிறது.
வானப் பூக்களைத் தொடுத்து
மாலையாக்கிச் செல்கிறது
அரைக் கறுப்பு நிழலைத் துடைத்து
பொன்வண்ணம் பரப்பிச் செல்கிறது.

குருவிகளை எழுப்பிவிட்டுக்
கூட்டம் கூட்டமாய்ப் பறக்கவிடுகிறது.
தனியே கிடக்கும் முள்பூக்களை
அள்ளியெடுத்து வந்து
பசுமரத்தடியில் படுக்க வைக்கிறது.
புல்லின் நுனியில் வானவில் காட்டும்
சொட்டுப் புள்ளியை
நீர்நிலைக்கு அறிமுகம் செய்கிறது.
உறங்கும் சிறுமியின்
உதடுகள் தொட்டு
சிரிப்புகளை நடிக்க வைக்கிறது.
தாயின் மார்பு மகிழ்ந்து சுரக்கிறது.

என்னால் இருகை கூப்பித்
தொழக்கூட முடியாத வலிநாளில்
மென்மையாய்த்
தலையை வருடி
உயிர்ப்பினை ஊட்டும்
அந்தக் கை.
கண்ணுக்குப் புலப்படவில்லை.
புலப்படாதிருப்பதே
அதன் சிறப்பழகு
என்கிறது விதானத்து உருவிலி.

விடுதலை எப்போது?

என் இமைகள்
துயில் கொள்ளும்போதெல்லாம்
உச்சியில்
கௌளி பேசி விடுகிறது.

எதைச் சொல்ல வருகிறதோ
எனும் ஐயப்பாட்டில்
உள்ள தூக்கமும்
உள்வாங்கிக் கொள்கிறது
சுனாமி அலைகளைப் போல..

சுவரில் ஒட்டிக் கொண்டு
கௌளி மட்டும்
தூங்கி விடுகிறது அல்லது
பாவனை செய்கிறது.

இந்த இராஜாங்கத்தில்
யார் யாருக்கெல்லாம்தான்
நான்
அடிமை செய்வது?

வீட்டை நேசி...

நான் வீட்டை நேசிக்கிறேன்.
வீட்டிற்குள் வந்தமரும்
உறவுகளின் அன்பினை நேசிக்கிறேன்.
அன்பானவர்களின்
அழகிய வீடுகளை நேசிக்கிறேன்.
அவர்களே எங்கும் நிறைந்திருக்கிறார்கள்.
எங்கும் இருக்கும் அன்பு மக்கள்
என் உள்ளேயும் அமர்ந்திருக்கிறார்கள்
என்பதாலேயே
வீடும் எனக்கு உள்ளேயேதான் இருக்கிறது.
இப்போது முன்னைவிட
என்வீட்டைக் கூடுதலாய் நேசிக்கிறேன்.
வீட்டிற்குள் நான் இருப்பதும்
வீடு எனக்குள் இருப்பதும்
இயல்பான ஒன்றாய்த் தெரிகிறது.
எல்லாம் அன்பான அன்பு செய்யும்
மேலான வேலை என்பேன்.

இசையுற்சவம்

நிறைந்த அமாவாசையிலிருந்து
இசைக்க ஆரம்பித்தன கற்கள்.
பச்சை மாங்காய் பட்டுத் தெறித்த
கணத்தில்
பொளியாத அம்மிகூட
கௌளையில் பேசிற்று.
தொங்க விட்டிருந்த
பூச்சாடித் தண்துளி
கீழ்இறங்கிய நேரம்
அடிக்கல்படியும்
ஆரபியில் ஆலாபனை
ஆரம்பித்தது.

காற்றடிக்கிறது.
கூரைக்கயிறு
இடித்துத் திரும்புகிற நொடியில்
கல் தூணுடன்
நெடுங்கையும்
நாட்டை இராகத்தில்
இரசவாதம் புரிகிறது.
மழைபெய்த தூவானம்
வராளியாய்
ஊற்றெடுக்கிறது
கல் உருளிக்
குழம்புச் சட்டிகளுள்ளும்.

ஸ்ரீராகத்தை
அரளிப்பூ மாலையிட்டதும்
கற்சிலை வாசித்துத் தீர்க்கிறது.

பகுள பஞ்சமியில்
பூமிப்பாறைகள்
பஞ்சரத்தினம் பாடிவிட்டால்
என் தோட்டமே திருவையாறு
பொற்கிரணமே தியாகையர்.

இறைவன் இல்லையா என்ன?

யாருமற்ற இந்தக் கானகத்தில்
எம் துணை
இந்தக் குளிர் நீரோடை. அதில்
வெள்ளை அன்னங்களின்
கும்பிடும் வகையில் கழுத்தை
சிலிர்த்து நிலைத்து வளைத்து
ஒரு மெல்லிய சிறகுடன் மோனத்தவம்.

புல்லின் அடர்த்தியில் பச்சைக்கரை.
தண்ணீரைப் போலவே மரங்களின் நிழல்
கனிந்து கிடக்கும் காட்டுக் கனிகள்
பணி ஓய்வின்றிப் பொழியும் இதழ்மலர்கள்
சிணுங்கித் திரியும் வண்டுகளின் கூட்டம்

உயிர்ப்பாய் இங்கே புன்னகையில்
தேவன் அருள்
இயற்கை அழகில்
இறைவன் வாக்கு.

இறைவன் இல்லையென்று
சொன்னவரெல்லாம்
உறைந்து போனார்
உடையும் பொருள்களில்
கடைவீதி முச்சந்திகளில்
வெற்றுச் சிலைகளாய்....

என்றும் உள்ளது இறைமை

பகல் நட்சத்திரம்
இரவுச் சூரியன்
அமாவாசை நிலவு இவற்றுடன்
அந்த நீல அல்லிகளுள்ளும்
உணவு வைத்திருக்கும் ஆண்டவன்
புல்லின் நுனியில் நெல்மணிகளைக்
கதிர்கதிராய் வரைந்து சத்து நிரப்பி
வழிய வழிய நிலத்தில் ஏந்திக் கொள்ள
தழை பரப்பி அறுத்துக் கட்ட
மண்ணுள் இரும்பும்
மரத்துக்குள் கைப்பிடியும் வைத்து
நம்மை அழைக்கிறான்
கேட்கவில்லையா?

அரச இலையும் சித்தர் தரிசனமும்

ஒரே ஒரு பெரிய மரம்
அரச இலை
என்முன் கிடைத்த கணத்தில்
புத்தரைத் தரிசித்தேன்.
நரை, திரை, மூப்பு, சாவு
வரிவரியாய்
கண்ணாடி நரம்பு
அடுக்குகளின் ஊடே
கிளைத்துகள் வடிவத்தில்
பதிந்திருந்தன.

புத்தம் சரணம் கச்சாமி
ஒரு கடினத்திரை
நொறுங்கியது கணத்தில்
நீரோடை போலாயிற்று.

தம்மம் சரணம் கச்சாமி
நொறுக்குண்ட
துணுக்குத் துகள்களெல்லாம்
புயல்காற்றில் பறந்து மறைந்தன.

சங்கம் சரணம் கச்சாமி
அடுத்த இழைத்திரை
கிழிந்து சுக்குநூறாகி
தீப்பிடித்து எரிந்து சாம்பலானது.

புத்த பகவான்
முறுவல் கண்களில்
படர்ந்திருந்தது அரசஇலை.
ஒட்டியிருந்தது காலச்சுவடு.
சித்தர் தரிசனம் ஆயிற்று எனக்குள்.

பிறை சூடிய வீடு

நம் தோட்டம்
மாசி மகத்திலிருந்தே
தூசிகளால் நிரம்பி
மரப்பட்டைகளால் மூடி
தரை வெப்பமாகிக் கொண்டிருக்கிறது.
குளத்தில் வேப்பிலைப் பச்சை
மங்கலாய்க் கிடக்கிறது.

அதிகாலையில் ஆலயத்திலிருந்து
வந்து கொண்டிருந்தேன்.
நம் வீடு
மாம்பூக்களுடன்
நிமிர்ந்து உட்கார்ந்திருந்தது.
காவி வர்ணத்தில்
பனித்துளி மூட்டத்தில்
மௌனத் தவசி போலவே
தெரிந்தது.
தலைக்குமேல் துல்லியமாய்ப்
பிறை நிலா.

விடுதலை நேரம்

மிதித்து நீந்தி
தவழ்ந்து எழுந்து
நின்று அசைந்து
பிடித்துத்
தள்ளித்
தலைதிருப்பி
இழுத்து
விழுந்து காயம்பட்டபின்
உடம்பின் ஈர்ப்பு மையத்திலிருந்து
விசையாய்க் கீழ்க்கால்கள்
ஒன்றையொன்று முன்வைத்து
நடைபயின்ற அந்த முதல்நொடி
மனிதமுதுகெலும்புக் குலத்தின்
பரிணாம வேள்விப் பயனே அல்லவா?
எந்தப் பிடிப்புமின்றி
எவருடைய பிடியுமின்றி
இடது வலது காலை அறிந்து
நடை நடக்கும் சுபமுகூர்த்தம்
கன்னிநடை தொடங்கும்
சமூக நன்னிமித்தம்
தாய், தந்தை கண்முன்னே
மழலையின் ஆனந்த சுதந்திரம்
அதுதான் முதல் விடுதலை நேரம்.

இப்போது எட்டவிருப்பது
இரண்டாம் விடுதலை.
வரங்கள் வேண்டி
சிறகுகள் முளைக்க
கிரமமாய்ச் செய்யும் யாககுண்டத்தில்
மூலிகை விறகினுள்
செந்தீ ஏறுகிறது
ஏறுகிறது இறகு இறகாய்
இங்கே
அக்கினியும் நானே.
ஆகுதியும் நானே...

மாநிற மீன்

நான்
மாநிற மீன்
முத்தும் பவளமும்
மேனி எழில் கூட்டும்
ஆழிவாய் அழகுமீன்.

கடலுள் பதிந்த
குமரிக் கண்டத்தின்
முதுமலை ஆற்றுமீன்
பொன்னிறச் சிறகும்
கொஞ்சிடும் செதிலும்
பசுமைக் கண்களும் நிரம்பிய
எவரும் தொடமுடியாத ரூபம் என்னுடையது.
பொருநையில் வாழ்ந்திருக்கிறேன்.

எம் முன்னோர்கள்
சுமந்து சென்ற சினைமுட்டைகளில்
வைகையிலும், காவிரியிலும்
தானாகவே சுவாசித்திருக்கிறேன்.
தாமிரபரணி மீன் நான்.
சங்கரா பரணியிலும்
தமிழையே சுவாசிக்கிறேன்.

முல்லைத்தீவிலும் நானேதான்.
துப்பாக்கிச் சத்தம் துரத்துகிறது.
கடலுக்குள் ஆட்படுகிறேன்.
அலைக்கரம் அணைக்கிறது.
ஆழத்தில்
இலெமூரியா கண்விழிக்கிறது.
மீண்டும் பஃறுளி துளிர்க்கிறது.
நான் மாநிற மீன்
ஆழிவாய் அழகுமீன்
அழிவில்லை எனக்கு.
மானுடர் சங்கம் இதனை அறிக.

எது கவிதை?

கவிதை விதம்விதமாய் வளர்கிறது
வெளியே உள்ளே
ஆழ் உள்ளே
கிளை பிரிக்கிறது.

நேற்றுவரை
வடிவங்களுக்குள்ளேயே
ஒளிர்ந்திருந்தது கவிதை.
எழுதிப் பிடித்தேன்.

இன்று காலை
வண்ணங்களுக்குள்ளேயே
உயிர்த்தெழுந்தது கவிதை
வரைந்து விதைத்தேன்.

மாலைக்கதிரவன்
வானப் பறவைகளின்
சிறகடிப்பில் பச்சை பிடித்து
அடுக்கடுக்காய் இயக்கியதை
அனுபவித்தபின்
சத்தங்களின் மூச்சுக்குள்
சதிராடுகிறது கவிதை
என்று கண்டுகொண்டேன்.

குரலெடுத்து
இசைத்துப் பார்க்கிறேன்
புரிந்தது போலிருக்கிறது
புரியாதது இன்னும்
எது கவிதை என்பதும்
எது என் கவிதை
என்பதும்தான்!

கவிதையின் நான்காம் எழுத்து

கவிதை
ஆறாகப் பாய்ந்தோடுகிறது.
அது
ஊர் ஊராக
எல்லை கடக்கிறது.
வளைந்த கோடுகளாய் நெளியும்
வயல்வெளி வரப்புகளைத் தொட்டு
வேளாண் குடிகளின் நெஞ்சத்துள்
ஈரம் ஊட்டுகிறது
கவிதையின்
முதலெழுத்து விளைந்தாயிற்று.

கவிதை சிறகு விரிக்கிறது
விண்ணில் விழும் விதைகளை
உணவென விழுங்குகிறது
நிலவும் கதிரும்
வண்ணத்துப் பூச்சிகளென
பட்டம் விட்டுப் பறந்திட
நூல் கயிறுகளை
இரவல் கேட்கும்
ஒரு காற்று வேளையில்
ஈர்க்கும் இந்த இரண்டாம் எழுத்து.

மலை முகடுகளை
முகர்ந்து கொள்கிறது கவிதை
பனிக்கோட்டுக் கூரிய சிகரம்
வெள்ளி உருக்கி ஊற்றுகிறது
பச்சை மரகதப் பதக்கங்களை
இடையிடையே பதித்துக் கொள்கிறது
வாசிப்புக் காலம்
கசிவுடன் மேலேறுகிறது.
இசையலைகள் திக்குத்திசைகளைப்
பட்டுப் பாயாக்கித் தாம்பூலம் வைத்தபோது
மூன்றாவது எழுத்தும்
வந்தமர்கிறது
கம்பீரமாக.
மேலும் தேடல் தொடர்கிறது.

என்
கருங்கல் வெற்றிடத்தில்
பாறை
திறக்கப்பட வேண்டியிருக்கிறது என்று
சிற்பியின் கூரிய உளி
சொல்லும்வரை
தெரிந்திருக்கவில்லை
எனக்கு.
கவிதையின் நான்காம் எழுத்து
என்னிலிருந்து முகிழ்க்கிறது
வலியின் விழிநீர் அரும்பு.
இப்போது
மலர்வது
நம் அனைவருக்கும் பொது.

கவிச்சொல்

இரவின் கடைசிச் சொட்டு வெளிச்சத்தில்
வெள்ளைத்தாள் பிரகாசமாய் ஒளிர்ந்தது.
கறுப்பு எழுத்துகளில்
எமது கவிதை வரிகள்
சில்லென்று முல்லைகள் போல
வந்து அமர்ந்தன.

இன்று காலை
வெண்தாமரை
வாசல் திறக்கும்பொழுதில்
கவிதையை வாசித்த
வழிப்போக்கன்
சிரித்தான்,
'டெர்விஷ் சமூகன் ரூமியிடம்
கடன் வாங்கியதா? இது'வென்று.

பகலில் தாள்களைக் காயப் போட்டேன்.
மேலும்,
கவனத்தில் எழுத்துகள்
தீட்சண்யம் பெற்றன.
எமது ஆசிரியர் கேட்டார்
'இது அவார் கவிஞன் ரஷ்யன்
ரஸூல் கவிதையின்
தாக்கமா' என்று.

மதி தெளிவுறும்
சிவந்த வானப்பொழுது
விண்மீன்களைக் கையில் பிடிக்க
விழித்தெழும் மின்மினி நேரத்தில்
இளவல்கள் கேட்டனர்.
'உமது கவிதைகளைச்
சுப்பிரமணிய பாரதி
எழுதிக் கொடுத்தாரா?' என்று.

பச்சைப் பசும்புல் செழிக்கும்
குன்றத்தின் மீதேறி நின்று
கூவுகிறேன் மானுடர்களே
கேளுங்கள்
யாமும் மற்றுமொரு கவியாவோம்.

கருத்தாய்வு

என் கவிதைகளிடம்
ஏன் நவீனம் வெளிப்படவில்லை
என்கிறார் விமரிசகர்
என் முதல் அமர்விலேயே.

அரிசிச்சோறு
கத்தரிக்காய்ப் புளிக்குழம்பு
கதம்பச்சாம்பார் மிளகுரசம்
பூண்டு ஊறுகாய் அப்பளம் வடை
பூவாய் முந்திரி மிதக்கும் பால் பாயாசம்
பல்கலை வளாகத்தில்
அண்ணலின் சிலை முன்னே
மதிய விருந்தும் ஒப்பந்த உபசரிப்பும்
நல்ல கூட்டமும் அமைந்து விட்டன.

ஒரு நூடுல்ஸ் இல்லை
சோயா டோஃபு இல்லை
சூரிய காந்திப் பருப்பு இல்லை
செம்பருத்திச் சாறில்லை
முழுக்கோதுமை ரொட்டியில்லை
முளைகட்டிய பயறு இல்லை
நவீன சத்துணவு ஏதும் இல்லை.

அடுத்த அமர்வில்
மசாலா பீடா மென்று கொண்டிருந்த
அதே பழைய பேராசிரியர்
பின் நவீனத்துவம் பற்றி
நன்கு குத்திக் கிளறிப் பேசினார்.

என் முன் நவீனத்துவமும் உள்ளாழ்ந்து
பழங்காலத்திற்கே
படியமைத்துக் கொண்டது.

நமக்கும் அப்பாலுள்ள
ஆன்மீகத் தளங்கள் பற்றி
அதே அவையில்
தனியே அமர்ந்து
எழுதிக் கொள்ளும் பண்பலையை
ஆரம்பித்து வைத்தேன்.
சபையின் மையத்தில் இருந்தாலும்
ஓரம் கட்டப்பட்டிருந்த
மற்றுமொரு கவிஞர்
மொழிபெயர்ப்பில் ஆழ்ந்து விட்டார்.

தொட்டால் நொறுங்கும்
பிளாஸ்டிக் குப்பியில்
அதிக விலையில்
அருவிநீர்ப் போலி வந்தது
ஒரு வாய்க்குக் கூடப்
போதவில்லை.

பிரகடனம்

மகரந்தங்களின்
கந்தகத் தீப்பந்தம் பிடிக்கும்
இரும்பு இதழ் மலரின்
அரும்பு மகள் இவளின்
எழுத்துகளில்
மல்லிகை, ரோஜாவா மணக்கும்?
நெருஞ்சியும் கள்ளி முள்ளும்
நிரம்பிய பாதையில்
நடைபயின்றிருக்கும்
இவளது ஒவ்வொரு மௌன அசைவிலும்
மின்னலின் அதிர்வும்
இடிகளின் முழக்கமும்
காற்றின் சுழற்சியும்
ஓடோடி வந்து கைகட்டி நிற்கின்றனவே.

யாரும் அவளை இப்போது
நெருங்காதீர்கள்
தீக்குளிக்க இராமர்கள்
தயாராகும்வரை.

விழிப்பு

கோடுபோலக் கிடந்தது இந்த நதி.
ஓடும் பாய்மரப் படகு வரவில்லை என்றால்
நீரின் நிரந்தர அசைவினை
அறிந்திருக்க மாட்டோம்
மாடியிலிருந்து கொண்டு
ஒருபோதும்.

மோனத்தவசி எனப் பார்த்திருக்கும்
வானப் பரப்பில்
வெட்டி இருக்கும் கொடிமின்னல்
துடித்தெழவில்லை என்றால்
விசை இதற்கும் உண்டென்று
உணர்ந்திருக்க மாட்டோம்
ஒருபோதும்.

உங்கள் விமரிசனமும்
அப்படித்தான் தோழர்களே,
விழிப்பினை மட்டுமே
பரிசளியுங்கள்.

இப்போது நாமும்
நமது உயிர்ப்புகளை
உறங்க வைத்திருக்கிறோம்.

வர்ணம் பூசியிருந்த மரப்பம்பரம்
கயிற்றிலிருந்து விடுபட்டதும்
என்னமாய்ச் சுழன்றாடுகிறது
பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா?

●

கருக்கடவுள்

கருத்தரிக்க வைக்கும் கடவுளே,
உருவத்தை ஆண் பெண்ணாக்கி
ஆசைகளை உள்ளே விதைத்து
நீ விண்ணையும் மண்ணையும்
தழுவ வைத்து
ஒளியை மையப்படுத்தி
ஓயாமல் உருவாக்கிக் கொண்டே இருக்கிறாய்.

என்னைப் பெண்ணுள் பிறப்பித்தாய்
பெண்ணாய் ஆக்கி விட்டாய்
ஆணை என் முன் இருத்துகின்றாய்
நானே இரண்டுமாய் ஆகி
என் தீக்குள் நீர் வைத்து
நீருக்குள் தீ ஊற்றி
கருத்தரித்த போதெல்லாம்
கவிதை பிரசவிக்கும் பேறு பெற்றேன்.
விண் மண் வித்தைகள் இப்படியே
என்றும் இப்படியே அரங்கேறுகின்றன.
சுழற்சியில் என்னைத் தூரத் தள்ளுகிறாய்
உயர்ச்சியில் என்னைக் கையில் அள்ளுகிறாய்.
தங்க முட்டைக் கடவுளே,
வேதகால நூல் படிக்கிறேன்,
கருமுட்டைக் கணக்குப் பார்க்கிறேன்...

எல்லாம் உயிர் அசைவுகள்
என் புத்தகத்துள்
எழுத்துகள் ஒவ்வொன்றும்
அணுஅணுவாய்
நேர்த்தி செய்த சூரிய முட்டை
உயிர்க் கருக்கள்.
இன்றே முளைத்தெழுந்து
விண்முட்டும்.

வேர் எப்போதும்
மண்ணுக்குள்தான் என்கிறது
என் மனிதப் பிறவி.

நிலமெனும் நல்லாள்

உயிர்கள் வளரும்
கிரகங்களில் மூத்தது பூமி
அதற்குக் காய்ச்சல்

ஐயோ,
புவியியலார்
மண்கை நாடி பார்த்துச் சொன்னபோது,
பயமாகி விட்டது எனக்கு.
பூமித்தாய்க்குப் வைத்தியம்
ஏதென்று தெரியாமல்
சேவகம் என்ன செய்வேன்?

இன்று காலை
தெப்பக்குளம் கொதித்துப் போய்
செந்தாமரைகள் இதழ்வாடி
பாசிப்பச்சை நிறமிழந்து
கருகிக் கிடந்தன.
பறவைகள் இறகு உதிர்த்தன.
பசும் மரங்கள் மொட்டை போட்டன.
சகமனிதர்களோ
புதுப்புது வில்லைகளை
விழுங்கிக் கொண்டிருக்கின்றனர்.

பூமிக்காய்ச்சல்
மூன்றாம் முறையும் உறுதியாயிற்று.
நமது வேக்காடுகளையும்
அன்னையே ஏற்கிறாள்
அவளை யார்தான் தாங்குவதாம்?

இருநிலை வாழ்விகள்

கல்வி நிமித்தம்
தொழில் நிமித்தம்
அமெரிக்கக் கரை கண்டு
தற்காலிகமாய்
அய்யம்மா வீடு ஒதுங்கியிருக்கும்
தம்பி மகனுக்கு
அப்பளம், வடாம், மிளகாய்ப் பொடிதான்
பிடிச்சிருக்கு.
இட்லி, வடை, தோசை கேட்டு
ஆவலுடன் அடுக்களைக்குள்
வந்து போகிறான்
கைப்பேசியைக் காதில் அணைத்தபடி.

ஆயிரமாயிரம் இருநிலை வாழ்விகள்
உலகமெங்கும் உள்ளன
என்கிறார்
சைவம் பழகும்
எங்கள் சீனப்பேராசிரியர்.

நன்றி கூறல்

ஓர் இரவில்
முதலில்
இவனது இதயம்
'தான்' இறந்து விடப் போவதாக
அறிவித்தது.
அலறும் மணியோசையுடன்
நுழைந்தது அவசர வண்டி
கறுப்பு நாயும் ஓடிவந்தது கூடவே.

உயிர்காக்கும் திரவம் ஏற்றி
உயிரியம் உட்செலுத்தி
ஒரு சிறகக் கையிலிருந்து
ஒற்றைத் துடிப்புள்ள
நாளம் உருவி
இதயத்தை வெளியில் எடுத்து
வெட்டி
அகலித்து
ஒட்டிப் பசையிட்டு
உள்வைத்து
மருத்துவர் நிமிர்ந்தபோது
பகல் மணி பனிரெண்டு.
பல அடுக்குக் கதவுகளின்
கதவுக்கு வெளியே
வளர்ப்பு நாய்

கதவிடுக்கினூடே
இவன் வாசனை நுகர்ந்தபின்
தலைதூக்கிப் பார்த்தது
பெரிய மருத்துவர்
கையுறை கழற்றிப் பின்
கறுப்பு மேனியைத் தடவி விட்டார்
சிலிர்த்தது நாய் மனிதத்துடன்
வாலாட்டிக் கொண்டது நன்றியுடைமை.



................எனது புறப்பயணங்களும் என்னை நெடுந்தொலைவுக்கு இட்டுச் செல்கின்றன மணிமேகலா தெய்வம் போல கப்பல்களும், விமானங்களும் வேக ரயில்களும்.

எல்லைகள் கடந்து பலநாடுகளுக்கு என்னை அழைத்துப் போகும் அப்பயணங்களில் மனித, இன, மொழி தெரியாத ஊர்களிலும் பறவைகள், பசுக்கள், வண்ணத்துப்பூச்சிகள், ஓவிய மீன்கள், பச்சைப் புல்வெளிகள், வானவில் நிறங்கள் நம்முடன் பேசுகின்றன. அம்மொழிகள் தரும் உணர்வலைகளுக்கு எல்லை ஏது ?

அப்படி ஒரு பயணத்தின்போது ஃபிரான்ஸ் தேசத்தில் என்னுடன் பேசிய வெண்கலக் கொடிவிளக்கு நேர்ந்து கொண்ட விண்ணப்பத்தை இந்நூலில் பதிவு செய்திருக்கிறேன். அதன் பெயராலேயே இக்கவிதைத் தொகுப்பு அறியப்படுகிறது என்பதைப் பொளிந்து கொள்கிறது எனது எழுதுகோல்.

கபிலன் பதிப்பகம்